

'மொழிவிருத்தி மேன்மையுற
தமிழ்த் தாயின் வாழ்த்து'

# ஆண்டு 5

## மொழி விருத்தி

## தாய் மொழி

# தமிழ்

## செயல் நூல்




**Bright Book Centre (Pvt) Ltd.**
S-27, First Floor,
Colombo Central Super Market Complex, Colombo 11,
T.P: 434770


விலை 110/=

# முகவுரை

ஆரம்பத்துறை மாணவர்கள் கல்வியில் இயல்பாக்கம் உடையவர்களாகவும், கல்வியை மகிழ்ச்சி , விநோதம், குதுகலம் ஆகியவற்றுடன் கூடிய அறிவுச்சுவையாகவும், விளையாட்டாகவும், ஆய்வு பொருளாகவும் கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் விரும்பிகற்க, அவர்கள் விரும்பி செயற்பட ஆசிரியர் உதவவேண்டும். நாங்கள் கற்பிக்கின்றோம் அவர்கள் (மாணவர்கள்) படிக்கின்றார்கள் என்று இல்லாமல், அவர்கள் படிக்கின்றார்கள் நாங்கள் உதவுகிறோம் என்ற அடிப்படையில் அமைந்த கல்வியே தேவையானதாகும். இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்வியை மாணவ உலகம் பயன்பட செய்யக் கூடியதாக அமைந்த புதிய பாடத்தின் கீழ் "மொழி விருத்தி - ஆண்டு 5யினை அறிமுகப்படுத்துகின்றோம்.

அடிப்படை அறிவு, மனப்பாங்கு, திறன் வளர்ச்சியடையக் கூடிய முறையில் மொழி விருத்தியானது செவிமடுத்தல், பேசுதல் , வாசித்தல், எழுதுதல் எனும் நான்கு பாடப்பரப்புகள் ஊடாக வளர்த்து செல்லப்படுகின்றது. மொழிவிருத்தி மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவும், சமூக நீதி நிலை நிறுத்தவும், வாழ்க்கையை ஓம்பக்கூடிய முறையில் அமைக்கவும் ஏற்புடைய கல்வியே இதுவாகும் இதனை விருப்புடன் மாணவர் சமுதாயம் ஏற்கட்டும்.

**நன்றி**

**- பொன்.சக்திவேல்**

# 1.0 செவி மடுத்தல்

## 1.1 இரசனைக்காகச் செவிமடுத்தல்

1.1.1 இயற்கை ஓசை,செயற்கை ஓசை,இசை,பாடல், கிராமியப் பாடல் கதை,உரையாடல்கள்,நாடகம் ஆகியவற்றை செவிமடுத்தல்.

1.1.2 சுற்றாடற் செயற்பாடு,வகுப்பறை செயற்பாடு, மாணவர் மன்ற நிகழ்ச்சிகள், விழாக்கள், வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.

1.1.3 செவிமடுத்த அம்சங்களை ரசித்தல்

1.1.4 ரசித்த அம்சங்களை கலந்துரையாடி வெளிப்படுத்தி இன்புறல்.

1.1.5 பொருளறிந்து ரசித்தல்

## 1.2. விளங்கி கொள்வதற்காகச் செவிமடுத்தல்

1.2.1 செவிமடுத்தது முக்கிய அம்சங்களை விளங்கிக்கொள்ளல்

1.2.2 செவிமடுத் பேசுவோரின் தொனிவேறுபட்டால் உணர்த்தப்படும் உணர்ச்சி, கருத்துக்களை விளங்கிக் கொள்ளல்.

## 1.3 கிரகித்தலுக்காகச் செவிமடுத்தல்

1.3.1 செவிமடுக்கும் விடயங்களின் பிரதான அம்சங்களை மையக்கருத்தை விளங்கி கிரகித்தல்.

1.3.2 செவிமடுத்தவற்றுள் தமக்கு தேவையான அம்சங்களை கிரகித்தல்.

1.3.3 செவிமடுத்த விடயங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல்.

1.3.4 செவிமடுத்து கிரகித்தவற்றை வெளிப்படுத்தல்.

1.3.5 கிரகித்தவற்றை சந்தர்ப்பம் தேவைகளுக்கேற்ப ஞாபகப் படுத்திகூறல் எழுதுதல்

## 1.4 கருத்தூன்றிச் செவிமடுத்தல்

1.4.1 பண்புடன் செவிமடுத்தல்

1.4.2 தடைகளுக்கு இடங்கொடாமல் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குகேற்ப அவதானித்து செவிமடுத்தல்.

1.4.3 நிகழ்ச்சிகளின் தன்மைகளை அனுசரித்து செவிமடுத்தல்

1.4.4 செவிமடுக்கும் நோக்கத்துக்கேற்ப அமைதியாகவும், அவதானமாகவும் செவிமடுத்தல்.

1.4.5 கருத்தூன்றி செவிமடுத்தல்.

1.4.6 கூறுபவரின் உணர்ச்சி/மெய்ப்பாடுகளின் புரிந்துணர்வோடு செவிமடுத்தல்.

## 1.5. மொழியாட்சித் திறன்களை விருத்தி செய்தல்.

1.5.1 செவிமடுத்த விடயங்கள் தொடர்பாக கிரகித்தல்.

1.5.2 செவிமடுத்துச் சிந்தித்தல் மூலம் அகக்காட்சி பெறல்.

1.5.3 செவிமடுத்தவற்றை தொடர்புகாணல் / தர்க்கித்தல் / விமர்சித்தல்.

1.5.4 செவிமடுத்தல் மூலம் கற்பனை வளத்தை பெருக்குதல்.

1.5.5 செவிமடுத்தல் மூலம் சமூகப் பொருத்தப்பாடடைதல்.

## 1.6 கற்றல் விருத்திக்காக செவிமடுத்தல்.

1.6.1 அறிஞர் சொற்பொழிவு, உரையாடல் செவிமடுத்தல்.

1.6.2 கட்புல,செவிப்புல சாதனங்களின் நிகழ்ச்சிகளை செவிமடுத்தல்.

1.6.3 செவிமடுப்பதன் மூலம் சொற்களஞ்சியத்தையும், அறிவு மொழியாட்சி திறன் விருத்தி செய்தல்.

# 2.0. பேசுதல்

## 2.1 தெளிவான உச்சரிப்புடன் கருத்துப்புலப்பட பேசுதல்

2.1.1 சரியான உச்சரிப்போடு கருத்துக்களை திட்டவட்டமாக தெளிவாக வெளிப்படுத்தி பேசுதல்.

2.1.2 ஒலி வேறுபாடுகளை அனுசரித்து பேசுதல்

2.1.3 ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து உணர்வுகள் தோன்றச் சுவைபடப் பேசுதல்

2.1.4 கேட்போர் இயலபறிந்து பேசுதல்

2.1.5 உணர்ச்சி, மெய்ப்பாடு தோன்றப் பேசுதல்.

2.1.6 சந்தர்ப்பமறிந்து பேச்சுத் தமிழ் நடையும், நியமத்தமிழையும் பேசுதல், அவதானித்தல் பின்பற்றல்

## 2.2 பண்புடன் பேசுதல்.

2.2.1 கொடுக்கல் வாங்கல்களின் போது பேச வேண்டிய முறையை உணர்ந்து பேசுதல்

2.2.2 பேசும் இடமறிந்து அதற்கேற்ப பேசுதல்

2.2.3 கேட்போர் நிலை / தகுதியறிந்து பேசுதல்

2.2.4 தகவல் செய்திகளை தெரிவிக்க தொலைபேசியில் பேசுதல்

2.2.5 கனிவான வார்த்தைகளைக் கையாண்டு பண்பாகப் பேசுதல்.

## 2.3 பல்வகை பேச்சு விருத்திக்காக பேசுதல்

2.3.1 மேடைப் பேச்சு

2.3.2 . உரையாடல்,கலந்துரையாடல்,நட்புறவானபேச்சு

2.3.3 பாத்திரமேற்றுப் பேசுதல்,நடித்துப் பேசுதல்

2.3.4 பொம்மலாட்டப் பேச்சு

2.3.5 விமர்சித்தல்,விவாதித்தல்,தர்க்கித்தல்

2.3.6 கதைகூறல்,பல்வகைக்கதைகள்,சிறுவர்கதைகள், சிறுவர் சிறுகதைகள்.

2.3.7 விவரணப்பேச்சு,நேர்முகவர்ணனைப்பேச்சு

2.3.8 தாளலய நாடகம

## 2.4 பாவோதுவர்

2.4.1 இலகுவான குழந்தைப்பாடல்கள்

2.4.2 பல்வேறு சந்தப்பாடல்கள்,கிராமியப்பாடல்கள்

2.4.3 மரபுப்பாடல், தனிப்பாடல், கதைப்பாடல்

2.4.4 பாடல்களை பொருள் புலப்படுமாறு/உணர்ச்சி புலப்படுமாறு பாடுதல்

## 2.5 ஆக்க முறையான பேச்சுகளை நிகழ்த்துதல்

2.5.1 குறித்த தலைப்பைப் ஆயத்தம் செய்து பேசுதல்

2.5.2 ஒரு பொருள் பற்றி விளக்கமாகப் பேசுதல்

2.5.3 ஒரு நிகழ்வுபற்றி வர்ணனைப் பேச்சு

2.5.4 உடனாக்கச் சொற்பொழிவு/உடனாக்க நாடகம்

2.5.5 கற்பனைக் கதையாக்கிகூறல்

2.5.6 புதிய பாடல்களை ஆக்கிப் பாடுதல்

2.5.7 சந்தர்பத்திற்கேற்ப சுருக்கியும் / பெருக்கியும் பேசுதல்.

## 2.6 சொற்களஞ்சிய விருத்திக்காக புதிய சொற்கள் ,புதிய சொற்தொடர்களைபயன்படுத்தல

2.6.1 பரீட்ச்சயமான சொற்தொடருடன் அறிமுகமான சொற்களை கலந்து பேசுதல்

2.6.2 புதிய சொற்களை ஏற்று சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்திப் பேசுதல்

2.6.3 சொற்றொடர்கள், பழமொழிகள், உவமைத் தொடர் மரபுத்தொடர் ஆகியவற்றை கையாண்டு பேசுதல்.

# 3.0 வாசித்தல்

## 3.1 சரியான உச்சரிப்புடன் உரத்து வாசித்தல்

3.1.1 உச்சரிப்பு, தெளிவு, விளக்கம், விரைவு என்பவற்றோடு வாசித்தல்

3.1.2 பிறர் கேட்டு விளங்கி கொள்வதற்கு ஏற்ற தொனியில் தெளிவாக வாசித்தல், செய்தி,அறிக்கை முதலியன.

3.1.3 ஒலி வேறுபாடுகளை தெளிவு படுத்தி வாசித்தல்

3.1.4 வாசிக்கும் அம்சங்களிற்கேற்ப வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்

3.1.5 உச்சரிப்பு இடர்பாடுகளின்றி வாசிப்புத்திறன்களை வளர்க்கும் வகையில் வாசித்தல்.

3.1.6 படங்கள்,அட்டவணை,வரைபு, சுருக்கவடிவங்கள் குறியீடுகளை வாசித்தல்.

3.1.7 உணர்ச்சி, மெய்ப்பாடு என்பன தோன்ற வாசித்தல்

3.1.8 குறியீடுகளை அனுசரித்து வாசித்தல்.

3.1.9 பாடல்கள், கவிதைகளை சந்தம், தாளலயம், ஒத்திசை என்பவற்றிற்கேற்ப வாசித்தல்.

3.1.10 பாடல்களை சந்தி பிரித்து பொருள் விளக்கத்திற்கேற்ப வாசித்தல்.

## 3.2 விளங்கிக் கிரகிப்பதற்காக மௌனமாக வாசித்தல்.

3.2.1 இலகுவான இலக்கிய வடிவங்கள் நடைமுறைக்குதேவையான எழுத்து வடிவங்களை மௌனமாக வாசித்தல்.

3.2.2 மௌன வாசிப்பின் பல் வேறு திறன்களையும் வளர்த்துக் கொள்ள வாசித்தல்.

3.2.3 விளங்கி கிரகித்துத் துலங்குதலுக்காக வாசித்தல்

## 3.3 சொற் களஞ்சிய விருத்திக்காக வாசித்தல்.

3.3.1 வாசிக்கும் புதிய சொற்களை இனம் காணல், அட்டவணைப்படுத்தல்,அவற்றை விளக்கி வாக்கியம் அமைத்தல்.

3.3.2 ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்கருத்துச் சொற்கள்,எதிர்ப்பாற் சொற்கள், எதிர் மறைச் சொற்களை வாசித்து விளங்குதல்.

3.3.3 இணைமொழிகள், ஒலிக்குறிப்பை இனங்காணல்

3.3.4 பல சொல் ஒரு பொருள், ஒரு சொல் பல பொருள் இனம் காணல்.

3.3.5 தனிச் சொல், புதிய சொற்கள், சுருக்க குறியீடுகள் வாசித்தல்,விளக்கங்கூறுதல்.

3.3.6 சொல், விளையாட்டு, குறுக்கெழுத்துப் போட்டி, விடுகதை.

3.3.7 அகராதியை பயன்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துதல்

**3.4 கற்றல் முதலிய தேவை கருதி வாசித்தல்.**

3.4.1 மாணவர்கள் நாளாந்தம் காண்பவற்றைத் தேவைகருதி வாசித்து விளங்கி கிரகித்தல்.

3.4.2 கற்றல் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வாசித்தல், கதைகள், விகடத்துணுக்குகள், பொழுது போக்கு வெளியீடுகள்.

3.4.3 குறித்த ஒரு தேவை கருதி வாசித்தல் - பாடநூல்கள் , இலக்கிய வடிவங்கள் , அகராதிகள், கலைக்களஞ்சியம் பயன்படுத்தல்.

3.4.4 தகவல் திரட்டுதலுக்காக வாசித்தல்

3.4.5 அறிவு விருத்திக்காக வாசித்தல்

3.4.6 நயத்தலுக்காக வாசித்தல் - கவிதை, சிறுகதை.

**3.5 வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வாசித்தல்.**

3.5.1 காண்பவற்றை சுயமாக வாசித்தல்

3.5.2 இரசனைக்காக வாசித்தல், கவிதை, கதை, கட்டுரை விகடத்துணுக்கு.

3.5.3 பொழுது போக்கிற்காக வாசித்தல்.

# 4.0 எழுத்து

**4.1 எழுத்துச் செயற்பாட்டிற்கான உடலியக்க திறனோடு எழுத்துப் பொறி முறை அனுசரித்து உயிர்க்குறிகளை சரியாக இட்டு எழுதுதல்.**

4.1.1 வசதியாக அமைந்த எழுது கருவியை சரியாகப் பிடித்து எழுத்துக்களை நிமிர்த்தி எழுதுதல்.

4.1.2 எழுத்து அளவு, அமைப்பு திசைமுகம், உறுப்பு சீரான உயிர்க்குறி,தெளிவு, புனிதம் அனுசரித்து எழுதுதல்.

4.1.3 எழுத்து சொல், வாக்கியம் பந்தி என்பவற்றிக்கு சீரான இடைவெளி விட்டு எழுதுதல்.

## 4.2 விரைவாக எழுதும் திறனை விருத்தி செய்தல்.

4.2.1 பார்த்தெழுதுதல்

4.2.2 கேட்டெழுதுதல் ( சொல்வதெழுதல் )

4.2.3 அளவு, அமைப்பு, உறுப்பு, தெளிவு, இடைவெளி ஆகியவற்றுடன் எழுதுதல்.

4.2.4 சுயமாக விரைவாக, அழகாக எழுத வழிப்படுத்தல்.

4.2.5 நல்ல கையெழுத்தில் எழுதுதல்.

## 4.3 கருத்துக்கள் பொருத்தமாக வெளிப்படுத்துமாறு அமைத்து எழுதுதல்.

4.3.1 சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைத்தல்.

4.3.2 சொற்கள் - சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைத்தல்

4.3.3 திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை அனுசரித்து வாக்கியம் எழுதுதல்.

4.3.4 எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், அடைமொழிகள் என்பவற்றை பொருத்தமாக அமைத்து எழுதுதல்.

## 4.4. வினாக்களுக்கு விடை எழுதுதல்

4.4.1 ஒத்த கருத்துள்ள சொற்கள், எதிர்கருத்துள்ள சொற்கள், எதிர்பாற் சொற்கள், எதிர்மறைச் சொற்கள் என்பவற்றை வாக்கியம் அமைத்தல்.

4.4.2 ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள் முதலியவற்றை பொருத்தமாக வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.

4.4.3 சேர்த்து எழுதிய சொற்தொடர்களைப் பிரித்தும், சொற்களை சேர்த்தும் எழுதுதல்.

4.4.4 வாக்கிய இடைவெளிகள் நிரப்புதல், தெரிவு வினாக்களுக்கு விடை எழுதுதல், குறுவிடை வினாக்களுக்கு விடை எழுதுதல்.

4.4.5 உரைப்பகுதி பாடல், கதை, குறுநாடகம் ஒன்றை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.

4.4.6 இலகுவான தொடர்களைப் பொருத்தமாக வாக்கியங்களில் அமைத்து எழுதுதல், மரபுத்தொடர் இணைமொழி, பழமொழிகள் முதலியன.

**4.5 பொருத்தமான இடங்களில் குறியீடுகளை இட்டு எழுதுதல்.**

4.5.1 குறியீடுகளின் பயன்பற்றி அறிதல்.

4.5.2 முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி, அடைப்புக்குறிகள் என்பவற்றை பொருத்தமாக இடுதல்.

4.5.3 குறியீடுகள் இடாத பந்திகளை வாசித்து, குறியீடுகளைப் பொருத்தமாக இட்டெழுதும் பயிற்சிகள்.

**4.6 நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான எழுத்தாக்கங்களை எழுதுதல்**

4.6.1 படிவங்கள் நிரப்புதல்.

4.6.2 கடிதம் எழுதுதல்

4.6.3 அறிவித்தல் அழைப்பு, நிகழ்ச்சி நிரல், விளம்பரம் அறிக்கை தயாரித்தல்.

**4.7 பல்வேறு எழுத்தாக்கங்களை ஆக்கி எழுதுதல்.**

4.7.1 கருத்துகளைப்பரிமாறி இலகுவான உரையாடல்கள் எழுதுதல்.

4.7.2 ஒரு பொருள் நிகழ்ச்சி பற்றி விளக்கி வர்ணித்து எழுதுதல்.

4.7.3 அனுபவம் பற்றி விளக்கி வர்ணித்து எழுதுதல்.

4.7.4 இனிய பாடல்கள் கவிதைகள் எழுதுதல்.

4.7.5 சிறிய கதைகள் எழுதுதல்

4.7.6 குறுநாடகங்கள் எழுதுதல்.

4.7.7 வாழ்த்து மடல்கள் எழுதுதல்

**4.8 மொழிப் பயிற்ச்சிகளில் ஈடுபடல்.**

4.8.1 வாக்கிய அமைப்பொழுங்கு.

4.8.2 திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றின் பயன்பாடு.

4.8.3 பெயர்ச் சொல், வினைச் சொல், அடைமொழி என்பவற்றின் பயன்பாடு.

4.8.4 பொருத்தமான வாக்கிய முடிவுகளை அமைத்தல்

4.8.5 ஒழுங்கற்று கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுதல்.

4.8.6 பழமொழிகள், இணைமொழிகள், மரபுதொடர்கள் என்பவற்றை பிரயோகித்தல்.

## 4.9 பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பரீச்சயம் பெறுதல்

4.9.1 பேச்சு வழக்குச் சொற்கள் அமையும் வாக்கியங்களை அறிதல்

4.9.2 பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாறி எழுதும் பயிற்ச்சிகள்.

4.9.3 எழுத்து வழக்கில் பேச்சு வழக்கு இடம் பெறும் எழுத்தாக்கங்கள்.

4.9.4 எழுத்து தமிழின் ( திருத்தமான மொழிப்பிரயோகம் ) முக்கியத்துவம்.

## 4.10 அரும்பதங்களின் பொருளை அறிந்து பிரயோகித்தல்

4.10 அரும்பதங்களை நாளாந்தம் அறியவும் அவற்றை அட்டவணைப்படுத்தி,மொழி வழக்கில் பிரயோகிக்கவும் வழிகாட்டல்.

# 1.0 செவிமடுத்தல்

## 1.1 இரசனைக்காகச் செவிமடுத்தல்

1.1.1 மாணவர் தாம் விரும்பும் இயற்கை ஓசைகள், செயற்கை ஓசைகள், கருவி இசைகள்,இனிய சந்தப்பாடல்கள் கிராமியப் பாடல்கள் ,கவிதைகள், உரையாடல், நாடகங்கள் ஆகியவற்றை செவிமடுத்தல்.

பாடசாலை மாணவர்களாகிய நாம் சுற்றாடலில் பல வகையான ஓசைகளை செவி மடுக்க முடியும். அதிகாலையில் காகங்கள் கா..கா.... என கத்தியது. சிறிய குருவிகள் கீச்.... கீச் என ஒலித்தது. குயில் கூ....கூ.... வென கூவியது. அதிகாலை புலர்வை கட்டியங்கூற மலர்கள் மலர்ந்தன. செயற்கை ஓசைகளாக கோயில் மணி கணீர்.... கணீர் என ஒலித்தது. உழவர்கள் வயல்வெளிகளுக்கு கதைத்துக் கொண்டு சென்றனர். கோயிலில் மேளம், நாதஸ்வரம், மணி என்பன ஓசையெழுப்பின, பள்ளிவாசல்களில் பாங்கு ஓசை கேட்டது. கிறிஸ்தவ தேவாலயத்தில் பூசைப்பாடல் பாடப்பட்டது.

இசைக்கருவிகள் மூலம் இசை எழுப்பப்படுகின்றது. இசைகளை இசைக்க வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதஸ்வரம், மேளம், மவுத்ஓகன், செக்கபோன்பிலியட் ஆகியன பாவிக்கப்படுகின்றன.

சில பாடல்கள் சந்தப்பாடல்களாக இராகத்துடன் இசைப்பது உண்டு. கீழ்க்காணும் பாடலை அவதானியுங்கள்

"சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து கடல் கொண்டுபோகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல்மீது அவள் கொண்ட பயம் ஒன்று காணும்"

இதே போன்று இசையோடு கூடிய கிராமியப்பாடல் ஒன்றினைப் பார்ப்போம்

"அரிசிப் பொரியோடும்வந்தீரோ தம்பி
அரிசி மலை நாடும் கண்டீரோ தம்பி
நெல்லுப் பொதியோடு வந்தீரோ தம்பி
நெல்லு மலை நாடும் கண்டிரோ தம்பி"

இதே போன்ற பாடல்களை நாம் எமது பாடசாலை மாணவமன்ற விழாக்களில், வானொலி நிகழ்ச்சிகளில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கேட்கலாம்.

### 1.1.2 இரசனையை விருத்தி செய்வதற்கு செவிமடுத்தல்

மாணவ மன்றக் கூட்டத்தில் ஐந்தாம் ஆண்டு மாணவர் பாடிய பாடல் கீழே தரப்பட்டு உள்ளது.

## உறுதி வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைபடவேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்
ஓம் ஓம் ஓம் ஓம்

*"பாரதியார்"*

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்புவிழா, கலைவிழா, தமிழ்மொழித்தின விழா என்பன நடைபெறும் இதில் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

**செவிமடுத்த நயத்துக்குரிய அம்சங்களை இனங்கண்டு இரசித்தல் வேண்டும்.**

அதிகமான நல்ல பாடல்களில் இசை, சந்தம், தாளலயம், எதுகை, மோனை, சொற்சுவை, பொருட்சுவை, வர்ணனை, கற்பனை, உவமைகள் காணப்படும், நீங்கள் கீழே காணப்படும் பாடல்களை படித்து அவற்றின் சிறப்பைஅறிக.

"தலைவாரிப் பூச்சூடி உன்னைப்பாட சாலைக்கு
போ என்று சொன்னார் உன்அன்னை சிலை போல
ஏனங்கு நின்றாய் – நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்"

(பாரதிதாசன்)

## அழகைப் பார்

வானில் பஞ்சாய் மேகங்கள்
வளைந்து நெளிந்து போகுது பார்!
கானில் உலவும் குயில் கூட
கனிவாய்க் கூவி செல்லுது பார்!

தரையில் நிமிர்ந்த குன்றுகளில்
அருவிகள் நெளிந்து பாயுது பார்
நிரையாய் வளர்ந்த தேயிலைகள்
கம்பளத் தோற்றம் காட்டுது பார்!

காவில் மலரும் மலர்களெல்லாம்
கந்தம் வீசி திகழுது பார்!
ஆவின் கன்று குதித் தோடி
அங்கும் இங்கும் வருகுது பார்!

இயற்கை அன்னை இங்கெங்கும்
இணைத்துத்தந்த அழகைப் பார்!
செயற்கையாக எது வரினும்
இயற்கையை வெல்ல ஏது முண்டோ?

-✸-

## வழி தவறிய வண்டு

வண்டு ஒன்று சோலை ஓரம்
வந்து சேர்ந்தது!
கண்டுகொண்ட பூவும் மெல்ல
கண் மலர்ந்தது!

வண்டு சென்ற வழியதனில்
விளக்கைக் கண்டது!
தண்டில் அலர்ந்த பூவெனவே
தாவிப் பாய்ந்தது!

ஆசை தீர வண்டுந் தேனை
அருந்தி மகிழ்ந்தது!
அங்கிருந்து எழுந்து மெல்லப்
பறந்து சென்றது!

செந்தழலில் வீழ்ந்த வண்டு
சாம்பலானது!
வந்த வழி தவறியதால்
வண்டு மாண்டது!!!

## கல்வி

சிறுவர் நாங்கள் கூடுவோம்
சிரித்து ஆடிப்பாடுவோம்
பாலர் நாங்கள் சேருவோம்
பள்ளிக்கூடம் செல்லுவோம்
கல்வி எங்கள் கண்களாம்
கள்வர் கொள்ளாச்
செல்வமாம் எண்ணும்
எழுத்தும் கற்று நாம் என்றும்
உயர்வு காணுவோம் வளரும்
பிஞ்சு நெஞ்சிலே
வஞ்சனைகள் இல்லையே
வாஞ்சையோடி கூடி நாம்
வாழும் வாழ்வு வசந்தமே
சின்னவயதுக் கல்வியே
சிலையில் எழுத்து
போலவாம் காணும்
பொருள்கள் யாவுமே
கல்விக்கீடு இல்லையாம்
பள்ளிப் பாடம் கல்வியால்
பேரும் புகழும் சேருமாம்
பிள்ளையாக இருந்திட்டால்
தொல்லை என்றும்
இல்லையாம்.

### 1.1.4 செவிமடுத்த இரசித்த அம்சங்களை கலந்துரையாடி வெளிப்படுத்தி இன்புறல்.

நாம் பல வகையான கதைகளையும், நாடகங்களையும் கேட்டும் பார்த்தும் உள்ளோம். தென்னாலி இராமன் கதை, முல்லா கதைகள் கேட்க இன்பம்தரும் நகைச்சுவை கதைகள் கேட்க மகிழ்ச்சியாக இருக்கும். மாணவர்கள் நாடகங்கள், கதை, பாடல்கள் நடித்தும், படித்தும் இன்புறவேண்டும்.

**மாணவர் இன்புற மலையக கிராமிய பாடல்கள் ஒன்றைப் பார்ப்போம்**

### மலையக கிராமியப் பாடல்

1. கோண கோண மலையேறி
கோப்பிப்பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சுன்னு
உதைச் சானய்யா சின்னத்துரை

3. பொட்டுப் பொட்டு கையெழுத்தாம்
பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
ஐயா கணக்குப்பிள்ளை

2. பாட்டுக்குப் பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்குப் பீலக்கரை
வாச்சுதடா உந்தனுக்கு

4. திண்ணயத் திண்ணயக் கூட்டுங்களேன்
தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்
நம்மையா கங்கானி சாய்திருக்க
சருகத் திண்ணய கூட்டுங்களேன்

**பயிற்சி I**

1 சுற்றாடலில் கேட்கும் இயற்கை ஓசைகள் எவை?

அ)........................................ ஆ)........................................ இ)........................................

2. சுற்றாடலில் கேட்கும் செயற்கை ஓசைகள் எவை?

அ)........................................ ஆ)........................................ இ)........................................

3. அதிகாலையில் நாம் கேட்கும் ஓசைகள் எவை?

அ)........................................ ஆ)........................................ இ)........................................

4. உமக்கு தெரிந்த இசைக் கருவிகள் மூன்று கூறுக?

அ)........................................ ஆ)........................................ இ)........................................

5. கோயில்களில் கேட்கும் செயற்கை ஓசை மூன்று கூறுக?

அ)........................................ ஆ)........................................ இ)........................................

6. உறுதி வேண்டும் எனும் பாரதியார் பாடலில் இனிமையான ஓசை தரும் சொற்களை எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

7. **கீழ்க்காணும் சொற்களின் ஒத்த கருத்தை தருக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ) | இனிமை | - | ஊ) | விடுதலை | - |
| ஆ) | வாக்கு | - | எ) | பயன் | - |
| இ) | மெய் | - | ஏ) | வானம் | - |
| ஈ) | தனம் | - | ஐ) | உண்மை | - |
| உ) | தரணி | - | ஒ) | உறுதி | - |

8. அழகைப்பார் எனும் கவிதையில் காணப்படும் தாளயம் யாது?

..........................................................................................................................................

9. கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் எழுதுக.

அ) போகுது பார்
ஆ) செல்லுது பார்
இ) திகழுது பார்
ஈ) வருகுது பார்
உ) பாயுது பார்
ஊ) காட்டுது பார்
எ) அழகைப்பார்

10. கீழ்க்காணும் சொற்களினால் பாடல் சிறப்புற காரணம் யாது?

அ) ஓரம் வந்து சேர்ந்தது
ஆ) மெல்ல கண் மலர்ந்தது
இ) தேனை அருந்தி மகிழ்ந்தது
ஈ) மெல்லப் பறந்து சென்றது
உ) பூ வென தாவிப் பாய்ந்தது
ஊ) வீழ்ந்த வண்டு சாம்பலானது
எ) தவறியதால் வண்டு மாண்டது.

## 1.2 விளங்கி கொள்வதற்காகச் செவிமடுத்தல்

### 1.2.1 செவிமடுத்த முக்கிய அம்சங்களை விளங்கிக் கொள்ளல்.

பாடசாலை மாணவ மன்றக் கூட்டம் நடைபெற்றது. அதில் நடைபெற்ற நிகழ்ச்சி நிரல் கீழே காணப்படுகின்றது அதனை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

பாரதி தமிழ் மகா வித்தியாலய ஆரம்பத்துறை மாணவ மன்றக் கூட்டம் செல்வன் சாயிபன் குகநாதன் தலைமையில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

தேவாரம்
தலைவர் தலைமை உரை
செயலாளர் அறிக்கை வாசித்தல்
ஆண்டு ஐந்து மாணவிகளின் பாடல்
விவாதம் - "**கல்வியா சிறந்தது**"
"**செல்வமா சிறந்தது**"
ஆண்டு மூன்று மாணவர்களின் நாடகம்
"**சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்**"
செயலாளர் நன்றியுரை

1) மாணவர்கள் தேவாரம் பாடும் போது எவ்வாறு உள்ளனர்?

.......................................................................................................................................

2) தலைமை உரையாற்றும் போது தலைவரின், குரல், தொணி எவ்வாறு இருத்தல் வேண்டும்?

.......................................................................................................................................

3) மாணவிகளின் பாடல் எவ்வாறு இருந்தது ?

.......................................................................................................................................

4) மென்மையான தொணியில் பாடல்கள் இருக்க காரணம் யாது ?

.......................................................................................................................................

5) விவாதம் புரிந்த மாணவர்கள் காரசாரமாக பேசக் காரணம் யாது ?

.......................................................................................................................................................

6) சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம் நாடகம் நகைச்சுவையாக இருக்க காரணம் யாது?

.......................................................................................................................................................

**1.1.2 மாணவர்களே நாம் வானொலியில் நடைபெறும் சிறுவர் மலர் நிகழ்ச்சி செவிமடுத்து கீழ்க்கானும்வினாவுக்கு விடைதருக.**

7) சிறுவர் மலரில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவனின் கவிதையை கொழும்பு மாணவன் வாசிக்க காரணம் யாது.?

.......................................................................................................................................................

8) கவிதையை வாசிக்கும் போது தொனி எவ்வாறு இருந்தது.?

.......................................................................................................................................................

9) சிறுவர் மலர் நாடகத்தில் அரசனாக நடித்த மாணவன் உரத்த தொனியில் பேசக் காரணம் யாது.?

.......................................................................................................................................................

10) சிறுவர் மலர் மாமாவின் கதைக்கு ஆமாப் போட்ட மாணவர்கள் யார் ?

.......................................................................................................................................................

## 1.3 கிரகித்தலுக்கு செவிமடுத்தல்

**1.3.1 செவிமடுக்கும் விடயங்களின் பிரதான அம்சங்களை விளங்கிக் கிரகித்து இரசித்தல்**

"பொய் சொல்ல மாட்டேன்" எனும் பாடத்தை படித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடைகளை எழுதுக.

1. நீங்கள் இக்கதையை செவி மடுத்து கிரகித்து பொருளை சுருக்கமாக எழுதுக.?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2) முருகன் எசமானுடன் பங்காளியாக இணையக் காரணமாக அமைந்தது அவனின் எத்தகைய தன்மை?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

**1.3.2 செவிமடுத்தவற்றுள் தேவையானவற்றை கிரகித்தல்**

3. கிருஷ்ணனின் குண இயல்பு யாது ?

4. முருகனின் குண இயல்பு யாது ?

அ)

ஆ)

இ)

5. முருகன் பொய் சொல்லாததால் அவனுக்கு கிடைத்த நன்மைகள் எவை ?

**1.3.3 செவிமடுத்து கிரகித்த விடயம் தொடர்பான வினாவுக்கு விடை தருக.**

6. முலாம்பழம் (வத்தகைப்பழம்) பழுதுடையது என முருகன் ஏன் கூறுகிறான் ?

............................................................................................................................................

7. முருகன் தனது குணவியல்பை காட்டும் வாக்கியம் எது.?

............................................................................................................................................

8. "உண்மை பேசுபவன் உயர்வு அடைவான்" என்பதற்கு பொருத்த மான பழமொழி யாது ?

............................................................................................................................................

**1.3.4 செவிமடுத்து கிரகித்ததை தேவைக் கேற்ப கூறல்**

9. " பொய் சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது" எனும் கருத்தில் கதையொன்று எழுதுக ?

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

**1.3.5 கிரகித்தவற்றை சந்தர்ப்பம் தேவைகளுக்கேற்ப ஞாபகப்படுத்தி கூறல்**

பயன் கருதாமல் பிறருக்கு உதவி செய்தல் பற்றி ஔவையாரின் வாக்குண்டாம் பாடலை கிரகித்து அது கூறும் பொருளையும் பார்ப்போம்.

**"நன்றி ஒருவருக்குச் செய்தக் கால் ~ அந்நன்றி**
**என்று தரும் கொல் என வேண் டாம் ~ நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உ ண் ட**
**நீரைத் தலையாலே தான் தருதலால்"**

**பதவுரை :** நின்று தளரா வளர்தெங்கு - நிலைத்து சோர்ந்து விடாமல் வளர்கின்ற தென்னை மரமானது, தாள் உண்ட நீரைத்தனது அடியினால் குடித்த தண்ணீரை, தலையாலே தான் தருதலால் - தனது முடியினால் இளநீராக தருகின்றது நன்றி ஒருவற்கு செய்தக்கால் - ஒருவருக்கு உபகாரத்தை செய்தால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா - அவ் உபகாரத்தை அவன் எப்போது திருப்பி கொடுப்பான் என்று நீ நினைக்க வேண்டிய தில்லை.

இப்பாடலில் கருத்தானது நல்லோர்க்குச் செய்த உதவி சிறந்த வகையில் பயன்படும். ஆகையால் அவ்வுதவியின் பயனை நீ எண்ணிப்பார்க்க தேவையில்லை. அதாவது தான் தாளால் உண்டா நீரை தலையால் (இளநீராக) தருகின்றது தென்னை என்பதாகும்.

10. ஔவையார் வாக்குண்டாமில் "நன்றி ஒருவருக்கு செய்தக்கால்" கவிதை மூலம் நீர் கிரகித்தவற்றை ஞாபகப்படுத்தி எழுதுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## 1.4 கருத்தூன்றிச் செவிமடுத்தல்

### 1.4.1 பண்புடன் செவிமடுத்தல், செவிமடுக்க வழிப்படுத்தல்.

மாணவர்கள் ஆசிரியர் கூறுவதை சரியாக செவிமடுக்க வேண்டும்.

**கீழே காணும் வினாக்களுக்கு பண்புடன் செவிமடுத்து விடை தருக.**

1) இன்று காலை வானொலியில் செவிமடுத்த செய்தி யாது ?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2) செய்தியை கூறும் போது அறிவிப்பாளர் எவ்வாறு கூறினார்?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

3) இச்செய்தி மூலம் நீர் அறிந்த விடயம் யாது ?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

### 1.4.2 தடைகளுக்கு இடங்கொடாது செவிமடுத்தல்

தொலைக்காட்சியில் செய்தியை செவிமடுத்த போது செய்தி பற்றிய படமும் காட்டப்பட்டது. இதனை செவிமடுத்து நீர் பார்த்த செய்தியை கருப் பொருளாக கொண்டு வினாக்களுக்கு விடைதருக.?

4) தொலை காட்சியில் காட்டிய படமும், செய்தியும் ஒரே பொருள் தொடர்பு உடையதா ?

.......................................................................................................................................................

5) நீர் படம் மூலம் செய்தியை பார்த்தமை யால் உமக்கு ஏற்பட்ட விளக்கம் யாது ?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

6) செய்தியின் போது படமும் காட்டப்படுவதால் செவி மடுப்பது சுலபமானதா ? அவ்வாறாயின் நீர் செவி மடுத்த செய்தி பற்றி சுருக்கமாக எழுதுக.?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

## 1.4.3 நிகழ்ச்சிகளை அநுசரித்து செவிமடுத்தல்.

✍ பாடசாலை மாணவர் காலை 7.00 மணிக்கு அதிபரை சந்திக்க வேண்டும் என கட்டளையொன்று விளம்பர பலகையில் காணப்பட்டது.

✍ கல்வி அபிவிருத்தி ஆண்டில் மாணவர்கட்கான கல்வி திட்டமானது மாற்றம் அடையஉள்ளது. இருபத்தியொராம் நூற்றாண்டை மாணவர் எதிர் கொள்ளக் கூடிய முறையில் புதியகல்வித் திட்டம் அமையும் என செய்தி கூறப்பட்டது.

✍ பாடசாலை மாணவர்கள் வீதிகளில் செல்லும் போது பராக்கு பார்க்க கூடாது.

மாணவர்கள் வீதியை கடக்கும் போது மஞ்சட் கோட்டுப் பகுதியில் செல்லுதல் வேண்டும் ,பச்சை நிற மனிதன் வீதியைப் பாதசாரிகள் கடக்கலாம் என்தை உணர்த்துகிறது ?

**மேற்காணப்படும் நிகழ்ச்சிகளை அவதானித்து விடைதருக ?**

7) அதிபர் அறிவித்த கட்டளை யாது ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

8) கல்வித் திட்டத்தின் மாற்றம் எத்தகையது ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

9) வீதியில் செல்லும் போது யாது செய்யக் கூடாது எனக்கட்டளை உண்டு ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

10) வீதியைக் கடக்கும் போது அனுசரிக்க வேண்டியவை யாது ?

..............................................................................................................................................

## 1.4.4 செவிமடுக்கும் நோக்கத்திற்கேற்ப அமைதியாகவும், அவதானமாகவும் செவிமடுத்தல

11) பாடசாலை பிராத்தனை மண்டபத்தில் பிராத்தனை நடைபெறும் போது எவ்வாறு இருத்தல் வேண்டும் ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

12) அதிபர் மாணவர்களை நோக்கி காலைக் கூட்டத்தில் பேசும் போது மாணவர்கள் எவ்வாறு செவிமடுக்க வேண்டும் ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

13) பாடசாலை மாணவன் இறந்தது பற்றி அதிபர் அறிவித்து மாணவனின் குணநலன்களை விபரித்தார். இவ்வேளை மாணவர்கள் எவ்வாறு செவிமடுக்க வேண்டும் ?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

14) இடம், பொருள், ஏவல் என்பன அறிந்து செவிமடுத்தல் வேண்டும் என்பதன் மூலம் நீர் யாது விளங்கி கொள்கின்றீர் ?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

## 1.4.5 கருத்தூன்றிச் செவிமடுத்தல்

கீழே காணப்படும் ஔவையாரின் கொன்றை வேந்தன் ஒன்றை செவிமடுப்போம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
அன்னை - தாய் : பிதா - தந்தை

15) நம்மைப் பெற்று வளர்த்து காப்பாற்றுபவர் யார் ?

..........................................................................................................................................................

16) முதல் தெய்வமாக நாம் யாரை வணங்க வேண்டும் ?

..........................................................................................................................................................

17) இந்த உலகத்தை படைத்தவர் யார் ?

..........................................................................................................................................................

18) உலகை காப்பாற்றுபவர் யார் ?

..........................................................................................................................................................

## 1.4.6 கூறுபவரின் உணர்ச்சி, மெய்ப்பாடுகளை செவிமடுத்தல்

நாம் ஒரு செய்தியினை கூறும் முறையில் அச்செய்தி உணர்ச்சிகரமாக இருக்கும். கீழ்க்காணும் வினாக்கள் உணர்ச்சியையும் மெய்ப்பாட்டையும் அடிப்படையாக கொண்டு விடைதருக.

19) ஒருவர் கோபத்தில் உள்ளார் என்பதைக் காட்டும் உணர்ச்சி ?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

20) ஒருவர் மிகவும் சந்தோசமாக உள்ளார் என்பதை வெளிப்படுத்தும் உணர்ச்சி எது ?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

21) "தயவு செய்து உணர்ச்சி வசப்பட்டு செயலில் இறங்கவேண்டாம்" என வானொலியில் செய்தி கூறியது. இதன் பெருள் யாது ?

.......................................................................................................................................

.......................................................................................................................................

22) அவன் கவிதை பாடும் போது புளாங்கிதம் அடைந்தான் இவ் உணர்ச்சி யானது யாது ?

.......................................................................................................................................

.......................................................................................................................................

## 1.5 மொழியாட்சித்திறன்களை விருத்தி செய்ய செவிமடுத்தல்

### 1.5.1. செவிமடுத்த விடயங்கள் தொடர்பாக கிரகித்தல் / ஆராய்தல்

1. பாடு படுபவர்க்கே – இந்தப்
பாரிடம் சொந்தமையா !
காடு திருத்தி நல்ல – நாடு
காண்பதவரலவோ ?

வீடு கட்டொரு – கொத்தன்
விடுதி யில்லாமல்
ஆடு மாடுகள் போல் – உலகில்
அலைய லாமோ ஐயா!

2. மந்திர மோதுவதால் – எங்கும்
வயல் விளைவதுண்டோ?
தந்திரப் பேச்சாலே – அரிசி
சாதமாயிடுமோ?

கோடிகோடியாக – நீங்கள்
குவித்திடும் லாபம்
வாடும் எம்மக்கள் – உண்ணா
வயிற்றுச் சோறலவோ?

3. கட்டும் ஆடையாகப் – பருத்தி
காய்த்தளிப்ப துண்டோ ?
சட்டி பானையெல்லாம் – மண்ணில்
தாமே எழுவதுண்டோ ?

மனம் திரியாமல் – காலை
மாலை யெப்பொழுதும்
குனிந்து வேலை செய்வோர் – கும்பி
கொதிக்கலாமோ ஐயா!

4. உழுது பயிர் செய்வோன் –வயிற்றுக்
குணவு பற்றாமல்
அழுதழுது நிதம் – நிற்ப
தறியீ ரோஜயா!

வாழ வேண்டுமெனில் – தொழில்கள்
வளர வேண்டுமையா !
ஏழை என்றொருவன் – உலகில்
இருக்க லாகாதையா !

5. ஆடை நெய் திடுவோன் – போர்க்கும்
ஆடையில்லாமல்
வாடை கொண்டு நிதம் – கிடந்து
வருந்த லாமோ ஐயா!

- தேசிக விநாயகம்பிள்ளை

1) மேற்காணும் பாடல் தொழிலாளர் இந் நாட்டின் கண்கள் என உணர்த்தும் வாக்கியங்கள் எவை.?

.................................................................................................................................

.................................................................................................................................

2) தொழிலாளர் படும் துன்பங்களை எவ்வாறு எடுத்துக் கூறுகிறார் தேசிய விநாயகம்பிள்ளை?

.................................................................................................................................

.................................................................................................................................

3) தொழில்கள் வளர வேண்டும் என்பதற்கு காரணம் யாது கூறப்பட்டது ?

.................................................................................................................................

.................................................................................................................................

4) "வாடும் எம்மக்கள் வயிற்றுச் சோறல்லவோ" எனும் வரிகள் உணர்த்துவது எதனை?

.................................................................................................................................

.................................................................................................................................

## 1.5.2 செவிமடுத்து சிந்தித்தல் மூலம் அகக்காட்சி பெறல்

மாணவர்களே உங்கள் பாடப்புத்தகத்தில் உள்ள சித்திரக் குன்றம் எனும் பாடத்தை ஒருவர் வாசிக்க செவிமடுங்கள் நீங்கள் செவிமடுத்த இடம் எவ்வாறு, எதனை யொத்ததாக இருக்கும் என்பதை சிறிது கண்மூடி அகக் காட்சியில் காணுங்கள். அக்காட்சியை மனக்கண்ணே கொண்டு வந்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

5) சித்திரக் குன்றம் எவ்வாறு தோற்றம் அளித்தது ?

.................................................................................................................................

6) அழகிய ஓவியங்கள் எங்கு காட்சியளித்தது ?

.................................................................................................................................

7) சீயகிரி என்னும் சொல்லின் கருத்து யாது ?

.......................................................................................................

## 1.5.3 செவிமடுத்துத் தொடர்பு காணல் / தர்க்கித்தல் / விமர்சித்தல்

8) தொழிலாளர் கஸ்டப்படுவதை காட்டும் வாக்கியங்களை எழுதுக.?

.......................................................................................................

.......................................................................................................

9) தொழிலாளர் வாழ்க்கை தரம் உயர யாது செய்ய வேண்டும் ?

.......................................................................................................

.......................................................................................................

10) தொழிலாளர் தமது பிரச்சனைகளை எவ்வாறு தெரிவிக்கலாம் ?

.......................................................................................................

.......................................................................................................

11) தொழிலாளருக்கும் இலாபம் கிடைக்க வேண்டும் எனக் கூறுவதற்கு காரணம் யாது?

.......................................................................................................

.......................................................................................................

## 1.5.4 செவிமடுப்பது மூலம் கற்பனை வளத்தை பெருக்குதல்.

12) மாணவர்கள் "நாங்கள் உடைகள்" எனும் பாடத்தை உரத்த குரலில் வாசியுங்கள். வாசித்து செவிமடுப்பது மூலம் ஒரு பொம்மை தனது சுயசரிதை எழுதுவது போன்று எழுதிப் பழகவும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

### 1.5.5 செவிமடுத்தல் மூலம் சமூகப் பொருத்தப்பாடடைதல்

"மைதானம் பிறந்தது" எனும் பாடத்தை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

13) மைதானம் எவ்வாறு உருவானது ?

.............................................................................................................................................

14) சிரமதானம் மூலம் நாம் செய்யக்கூடிய சேவைகள் எவை ?

.............................................................................................................................................

15) சிரமதானத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் எவை ?

.............................................................................................................................................

16) பலபேர் இணைந்து செய்வது மூலம் சமூக சேவை செய்ய முடியும் என்பதனை எதன் மூலம் உணர்ந்தீர்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

## 1.6 கற்றல் விருத்திக்காக செவிமடுத்தல்

### 1.6.1 சொற் பொழிவுகள், சொற்போர்கள், உரையாடல்களை செவிமடுத்தல்

ஆண்டு ஐந்து மாணவர்கள் கற்றல் விருத்திக்காக உள்ளூரில் உள்ள பெரியாரை அழைத்துச் சொற் பொழிவு ஒன்றை நிகழ்த்தினர். மாணவர்கள் அதனை செவி மடுத்தனர். அவர் கூறிய தகவல்களை அடிப்படையாக கொண்டு கீழ்க் காணும் வினாக்களுக்கு விடைதருக.

1. மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த யாது செய்தல் வேண்டும் ?

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. "இளமையில் கல்வி சிலை எழுத்து" எனச் சொற்பொழிவில் கூறினார். அதன் பொருள் யாது ?

.............................................................................................................................................

.............................................................................................................................................

3) "கூட்டுறவே நாட்டுறவு" எனக் கூறினார் இதன் பொருள் யாது ?

.............................................................................................................................................

4) மாணவர்களாகிய நாம் "கணனியின் பாவனை" நவீன தபால் முறை E-MAIL ஆகியவற்றையும், இன்டர் நெட் INTERNET ஆகிய புதிய தகவல்களை அறிந்து இருக்க வேண்டும் என சொற்பொழிவில் கூறினார். இது பற்றி நீர் அறிந்தது யாது ?

.............................................................................................................................................

.............................................................................................................................................

5) மாணவ மன்றக் கூட்டத்தில் "ஆசிரியர் தொழிலா", "வைத்திய தொழிலா" சிறந்தது எனும் பட்டிமன்றம் நடைபெற்றது. இரு பகுதியினரும் கூறியவற்றை பகுத்து ஆராய்ந்து தொகுத்து தரவும்.

| ஆசிரியர் தொழல்தான் சிறந்தது | வைத்திய தொழில்தான் சிறந்தது |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |
| 6. | 6. |

## 1.6.2 கட்புல செவிப்புல சாதனங்களில் நிகழ்ச்சிகளை செவிமடுத்தல்

கண்ணுக்கு புலப்படக் கூடிய சாதனங்கள் கட்புல சாதனமாகும் உ+ம் தொலை நோக்கி, செவிப்புல சாதனம் எனப்படுவது செவியால் கேட்கும் சாதனம் ஆகும் உ+ம் ரேடியோவாகும்.

6. மாணவர்களை நீங்கள் அண்மையில் அறிந்த புதிய ஐந்து செவிப்புல செய்திகளையும், ஐந்து கட்புல செய்திகளையும் எழுதுக.

| செவிப்புலச் செய்திகள் | கட்புலச் செய்திகள் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2 |
| 3 | 3 |
| 4 | 4 |
| 5 | 5 |

## 1.6.3 செவிமடுப்பது மூலம் தகவல் திரட்டல், சொற்களஞ்சிய, தகவல் திரட்டல்

நாம் தொலைக் காட்சி, வானொலி ஆகியவற்றை பார்ப்பது மூலமும் கேட்பது மூலமும் நாம் பல புதிய தகவல்களை திரட்டலாம், அதே வேளை புதிய சொற்களையும் அறிந்து கொள்ள முடியும்.

இன்று உலகின் எந்த மூலைக்கும் கம்பியூட்டரின் துணை கொண்டு கடிதங்களை அனுப்பி வைக்க முடிகின்றது. அதேபோன்று ஏதாவது விடயம் ஒன்று பற்றி எமக்கு விரிவாக தெரியாத விடத்து "இன்டர் நெட்" மூலம் தகவல்களை பெறும் வசதியும் கம்பியூட்டர்களில் இணைக்கப்பட்டு உள்ளது.

நாம் அறிவு சார்ந்த விடயங்களை பலரிடமும் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு தகவல்களைத் திரட்டி விடை அளிக்கவும்**

7. கம்பியூட்டர் மூலம் தபால்களை விரைவில் அனுப்பும் சாதனத்தின் பெயர் என்ன?

.......................................................................................................................................

8. கணக்கு கூட்டும் இயந்திரம், கை மணிக்கூடு என்பன சூரிய சக்தி மூலம் இயங்குகிறது. இதனை விட சூரிய சக்தியை எதற்குப் பாவிக்கலாம்.

.......................................................................................................................................

.......................................................................................................................................

9. உலக அதிசயங்கள், அபூர்வங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளக்கூடிய இலகுவான சாதனம் எது.?

.......................................................................................................................................

10. இலண்டன், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நடைபெறும் விளையாட்டு நிகழ்ச்சியை பார்க்க கூடிய கட்புல சாதனத்தின் பெயர் என்ன?

.......................................................................................................................................

## 2.1 தெளிவான உச்சரிப்புடன் கருத்துப்புலப்பட பேசுதல்

### 2.1.1 சரியான உச்சரிப்போடு கருத்துக்களை திட்டவட்டமாக தெளிவாக வெளிப்படுத்திப் பேசுதல்.

✪ கீழ்க்காணும் உச்சரிப்பை செவிமடுத்து பேசப்பழகுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | பாவை | பார்வை | பசுமை | பகைமை | |
| | கோவை | கோர்வை | கோணம் | கோலம் | கோதை |
| | சுவை | சுகம் | சுலபம் | சுமை | சுதை |
| | கதை | கலை | கறை | கடை | |
| | வதை | வலை | வறை | வடை | |
| | சிதை | சிலை | சிறை | சீடை | |
| | பதை | பாதை | பாறை | பாடை | |
| | பகை | பாகை | புகை | புடை | |
| | நகை | நடை | நனை | நமை | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | நிமிர்ந்த | நடை | நேர்கொண்ட | பார்வை |
| | குனிந்த | தலை | குமுறிய | நெஞ்சம் |
| | குமைந்த | மனம் | குலைந்த | நிலை |
| | தளர்ந்த | நடை | படர்ந்த | கொடி |
| | வளர்ந்த | நிலை | பரிந்த | கேள்வி |
| | நனைந்த | மேடை | குலைந்த | கோலம் |

இ கண்ணன் குழலூதினான்

கண்ணன் வேய்ங் குழலூதினான்

கண்ணன் அழகாக குழலூதினான்

தமயந்தி ஆடினாள்

தமயந்தி நடனம் ஆடினாள்

தமயந்தி கலையரங்கத்தில் நடனம் ஆடினாள்

### 2.1.2 ஒலிவேறுபாடுகளை அநுசரித்து பேசுதல்

✍ கீழ்காணும் சொற்களின் ஒலியை அவதானித்து வாக்கியம் அமைக்கவும்.

1. அலகு :...........................................................................................................................................

2. அளகு :........................................................................................................................................

3. அழகு :........................................................................................................................................

4. அலை :........................................................................................................................................

5. அழை :........................................................................................................................................

6. அளை :........................................................................................................................................

7. இலை :........................................................................................................................................

8. இளை :........................................................................................................................................

9. இழை :........................................................................................................................................

10. கலை :........................................................................................................................................

11. களை :........................................................................................................................................

12. காளை :........................................................................................................................................

13. காலை :........................................................................................................................................

14. குலை :........................................................................................................................................

15. குழை :........................................................................................................................................

✍ **வாக்கியத்திற்கு பொருந்தாத சொல்லை வெட்டிவிடுக.**

1. நான் நடனக் கலை/களை கற்க ஆவலாக உள்ளேன்.
2. நெற் பயிர்களின் நடுவே உள்ள கலை/களையினை பிடுங்க வேண்டும்.
3. ரோஜா மலர் மிகவும் அழகு/அலகு உடையதாகும்.
4. பச்சைக்கிளியின் அலகு/அளகு கவர்ச்சியானது.
5. நாம் தினமும் காலையில் குழி/குளி க்க வேண்டும்.
6. அம்மா வயிற்று வழி/வலி யால் அழுதாள்.
7. மாணவர்கள் நல்ல பழக்கம் பளக/பழக வேண்டும்.
8. அதிகாலையில் கண் விளி/விழி ப்பது நல்ல பழக்கம்.
9. சோம்பல் இன்றி உழை/உலை க்க வேண்டும்.
10. மிருகங்களை ஒரு போதும் பழி/பலி எடுக்க கூடாது.

✈ **கீழ்க் காணும் னகர/ணகர/நகர ங்களை கொண்டு விடு பட்ட எழுத்துக்களை நிரப்புக.**

1. மிருகங்களின் இறைச்சியை மக்கள் ஊ___ என்பர். ( ன் / ண் )
2. வானத்தில் ஏழு வ___ ணங்கள் தோன்றும். ( ன் / ண் )
3. ஒருவரின் ம___ம் நோக பேசக் கூடாது ( ன / ண )
4. மார்கழி மாதத்தில் ப___ பெய்யும் ( னி / ணி )
5. மாணவர்கள் பு___ வுடன் நடத்தல் வேண்டும். ( னி / ணி )
6. நல்லவற்றையே எப்பொழுதும் எ___ வேண்டும். ( ன்ன, ண்ண )

7. தினம் சத்துள்ள உணவு உ____ வேண்டும். ( ன்ன, ண்ண )

8. அ____ம் அழகாக நடந்து வந்தது. ( ன்ன, ண்ண )

✈ **கீழ்க்காணும் வாக்கியங்களில் பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடுக.**

1. மல்லிகைப் பூ மிக நல்ல மனம் / மணம் உடையது.
2. சிறுவர்களின் மனம் / மணம் கள்ளம்கபடம் அற்றது.
3. இராமன் வில்லை வளைத்து நான் / நாண் ஏற்றினான்.
4. பெரியவர்களை கனம் / கணம் பண்ணுதல் வேண்டும்.
5. நான் அலுவலகத்தில் பனி / பணி புரிகிறேன்.

✈ **கீழ்க்காணும் வாக்கியங்களை தெளிவான உச்சரிப்புடன் வாசிக்கவும்.**

1) நல்ல மணத்தை நமது மனம் விரும்புகிறது.
2) அண்ணி சந்தனம் அரைத்தாள்.
3) அறம் செய்ய விரும்பு.
4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
5) குரங்கு உறங்கினாலும் மரத்திலிருந்து விழமாட்டாது.
6) ஊன் உறக்கம் இன்றி உழைத்தான்.
7) பருக்கை மணல் நிறைந்த கடற்கரையில் நடப்பது ஓர் அருமையான அனுபவம்.
8) உற்றார் உறவினர் ஊட்டி வளர்த்தனர்.
9) வாழைப்பழத் தோலில் வழுக்கி வீழ்ந்தான்.
10) வாழை இலைகள் அழகாக விரிந்து இருந்தன.

### 2.1.3 ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து உணர்வுகள் தோன்றச் சுவைப்பட பேசுதல்.

மாணவர்களே,

நாம் நாடகங்கள், படங்கள் ஆகியவற்றில் நடிப்பவர்கள் அன்பாக, வெறுப்பாக, கோபமாக, எரிச்சலாக, உருக்கமாக பேசுவதை அவதானித்து உள்ளோம். மாணவர்கட்கு உதாரணமாக அம்மா எனும் சொல்லை வெறுப்பாக , கோபமாக, எரிச்சலாக உருக்கமாக உள்ள வசனங்களை அவதானித்து தரப்பட்ட சொற்களுக்கு பலவித உணர்வுகளும் தொணிக்க கூடிய முறையில் வாக்கியங்கள் அமைக்குக.

| | | |
|---|---|---|
| அன்பாக | - | அம்மாவே தெய்வம் உலகினிலே. |
| வெறுப்பாக | - | அம்மா உங்கள் தொண தொணப்பை என்னால் தாங்க முடியாது. |
| கோபமாக | - | அம்மா நான் செய்வேன் என்று தெரியுமோ ? |
| எரிச்சலாக | - | அம்மா எனக்கொன்றும் வேண்டாம். என்னைச் சும்மா இருக்க விடுங்கள். |
| உருக்கமாக | - | அம்மா கண் திறந்து பாரம்மா. |

**கீழ்க்காணும் சொற்களிலிலும் ஐந்து வாக்கியங்கள் உணர்வு தொனிக்க எழுதுக.**

கண்ணா

1) ......................................................................................................................

2) ......................................................................................................................

3) ......................................................................................................................

4) ......................................................................................................................

5) ......................................................................................................................

மாமா

1) ......................................................................................................................

2) ......................................................................................................................

3) ......................................................................................................................

4) ......................................................................................................................

5) ......................................................................................................................

ஐயா

1) ......................................................................................................................

2) ......................................................................................................................

3) ......................................................................................................................

4) ......................................................................................................................

5) ......................................................................................................................

மாலதி

1) ......................................................................................................................

2) ......................................................................................................................

3) ......................................................................................................................

4) ......................................................................................................................

5) ......................................................................................................................

## 2.1.4 கேட்போர் இயல்பறிந்து பேசுதல்

நாம் ஒவ்வொருவருடனும் இயல்பறிந்து பேசுதல் வேண்டும். நண்பனுடன் பேசுவது போன்று பாடசாலை அதிபருடனோ, ஆசிரியருடனோ பேசுவதில்லை.

மாணவராகிய நீங்கள் நாளைக்கு அவசர வேலையாக வேறொரு இடத்திற்கு செல்ல வேண்டி உள்ளது. இதற்கான அனுமதியைப் பெற எவ்வாறு பின்வருபவர்களுடன் உரையாடுவீர்கள்.

பாடசாலை அதிபர் :......................................................................................................

ஆசிரியர் :......................................................................................................

நண்பன் :..........................................................................

தந்தையார் :..........................................................................

தாயார் :..........................................................................

மாமனார் :..........................................................................

நீங்கள் இடந்தெரியாத புதியதோர் இடத்திலிருந்து பஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டி உள்ளது. நீங்கள் கீழ்க்காணும் மனிதர்களிடம் எவ்வாறு வினாவுவீர்கள்.

வயது முதிர்ந்த ஒருவரோடு :..........................................................................

பொலிஸ்காரரிடம் :..........................................................................

பாதையில் கண்ட ஒருவரிடம் :..........................................................................

அறிமுகம் இல்லாதவரிடம் :..........................................................................

தெருப் பிச்சைக்காரரிடம் :..........................................................................

தெருவில் உள்ள கடைக்காரரிடம் :..........................................................................

## 2.1.5 உணர்ச்சி மெய்ப்பாடு தோன்றப் பேசுதல்

கீழ்க்காணும் வாக்கியங்களில் உணர்ச்சியுடன் பேசவும். இராமன் எனும் பாடத்தில் வரும் சில காட்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.

முனிவர் : "மன்னவா எமது வேள்வி நன்கு நடைபெற துணையாக இராமனை எம்முடன் அனுப்புங்கள்"

தசரதன் : "ஐயா... அவன் சிறு பிள்ளை... நீங்கள் விரும்பினால் உங்களுடன் அழைத்து செல்லுங்கள்...."

முனிவர் : "வேள்வியை இடையூறு செய்த அரக்கரை அழித்த இராமா நாம் மிதிலைக்கு செல்வோம்" என மகிழ்ச்சியுடன் கூறினார்.

சனகமன்னன் : "இந்த வில்லை வளைத்தவனுக்கே எனது மகளை ஒப்படைப்பேன்" எனக் கூறினார்.

சனகமன்னன் : "இராமா நீர்தான் எனது மகளை மணம்புரிய ஏற்றவர்" எனக்கூறி சீதையை இராமனின் கையில் கொடுத்தார்.

இராமன் : "அன்னையே, மன்னவன் பணியன்று ஆகிலும் நும்பணி மறுப்பேனோ! நான் இன்றே கானகம் செல்கிறேன்.

குகன் : யராது? படை கொண்டு வருவது பரதனா? என்ன நினைத்தான்! அண்ணனைக் காட்டுக்கு அனுப்பியதும் அல்லாமல் தொடர்ந்து தாக்கவும் வருகிறானா? இந்தக் குகன் இருக்கும் வரை அவன் கங்கையைக் கடப்பானா பார்க்கிறேன்.

**2.1.6 சந்தர்ப்பமறிந்து பேச்சுத் தமிழ் நடையையும், நியமத் தமிழையையும் பேசுதல், அவதானித்தல், பின்பற்றி பேசுதல்.**

*முதலில் நியமத் தமிழ் நடை வாக்கியங்களை பார்ப்போம்*

அ) நாகரிகம் அடைந்த உலகில் உணவு மிகமுக்கியமானது

ஆ) இன்று எமது நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது.

இ) அரசே, இவன் தான் அரசியின் சிலம்பைக் களவெடுத்த கள்வன்.

ஈ) என் கணவனான கள்வன், அரசே என் கணவனா கள்வன்.

*அடுத்து பேச்சு நடைத் தமிழைப் பார்ப்போம்.*

அ) "காவல்காரன் திருடனைப் புடிச்சிட்டான்"

ஆ) "அப்ப நீ காலமைய் வீட்டை வா"

இ) மழை சோவென பெஞ்சது

ஈ) ஓடாதீங்க கீழே வுழுந்துடுவீங்க.

உ) உனக்கு பிடிச்சதை சாப்பிடு

✸ மாணவர்களே நீங்கள் வானொலி, தொலைக்காட்சியில் கேட்டபேச்சை அடிப்படியாக கொண்டு ஐந்து நியமத் தமிழ் வாக்கியங்களையும், ஐந்து பேச்சுத் தமிழ் வாக்கியத்தையும் எழுதுக.

நியமத் தமிழ்
1
2
3
4
5

பேச்சுத் தமிழ்
1
2
3
4
5

## 2.2 பண்புடன் பேசுதல்

### 2.2.1 கொடுக்கல் வாங்கல்களின் போது பேச வேண்டிய முறை.

நாம் எவருடனும் பண்பாக பேசுதல் வேண்டும். பண்பாக பேசுவதனால் அன்பு வளரும்.

◎ கீழக்காணும் உரையாடலின் ஒரு பகுதியை பண்புடன் கூடிய பேச்சாக எழுதி பூர்த்தி செய்க.

கடை முதலாளி : வணக்கம் வாருங்கள், உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்

வாடிக்கையாளர் : ..............................................................................................

..............................................................................................

கடைமுதலாளி : எம்மிடம் சிறந்த கடிகாரங்கள் உள்ளன. ஆனால் கொஞ்ச விலை கூட.

வாடிக்கையாளர் : ..............................................................................................

..............................................................................................

கடைமுதலாளி : நன்றி ஐயா. மீண்டும் வாருங்கள்.

வாடிக்கையாளர் : ..............................................................................................

..............................................................................................

⊙ பாடசாலைத் தமிழத்தின விழாவுக்கு வரவேற்பு சம்பந்தமான பொருட்களை பாடசாலை பழைய மாணவரிடம் இரவல் வாங்கும் போது நடைபெறும் சம்பாஷனை. இதில் மாணவர்கள் பகுதியை நிரப்புக.

மாணவர்கள் : ..............................................................................................

பழைய மாணவர் : வணக்கம் வாருங்கள்.... வந்து உட்காருங்கள்.

மாணவர்கள் : ..............................................................................................

பழைய மாணவர் : உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா ?

மாண்வர்கள் : ..............................................................................................

பழைய மாணவர் : எப்போது தமிழத்தின விழா நடைபெறுகிறது?

மாணவர்கள் : ..............................................................................................

பழைய மாணவர் : இங்கே உங்களுக்கு தேவையான எல்லாப் பொருட்களும் உள்ளன.அவற்றை பார்த்து உங்களுக்கு தேவையானவற்றை எடுங்கள்.

மாணவர்கள் : ..............................................................................................

பழைய மாணவர் : ஏதாவது குளிர் பானம் அருந்துகிறீர்களா ?

மாணவர்கள் : ....................................................................................................................

பழைய மாணவர் : உங்களுக்கு வேறு ஏதாவது தேவையிருந்தாலும் வாருங்கள்.

மாணவர்கள் : ....................................................................................................................

## 2.2.2 பேசும் இடம் அறிந்து அதற்கேற்பப் பேசுதல்

⊙ நீங்கள் அவசரமாக ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டி உள்ளது. இதற்கான அனுமதியை ஆசிரியரிடம் பெற்றுக் கொள்ள எவ்வாறு உரையாடுவீர் என்பதை எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

⊙ ஓர் இரகசியமான விடயத்தை உமது சிநேகிதனிடம் வினாவும் போது எப்படி வினாவுவீர் என எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## தொலைபேசியில் பண்புடனும், பணிவுடனும் பேசுதல்

நாம் நமக்குத் தெரிந்தவர்களிடமோ, அல்லது தெரியாதவர்களிடமோ தொலைபேசியில் பேசும்போது மிகவும் அவதானமாகப் பண்புடனும், பணிவுடனும் பேச வேண்டும். நீங்கள் இப்போது பின்வரும் தொலைப்பேசி உரையாடலைக் கவனியுங்கள்.

அஃப்ராஜ் - ஹலோ, நான் அஃப்ராஜ் பேசுகிறேன். அங்கு பேசுவது யார்? தயவு செய்து கூறுங்கள்.

அஸ்மின் - நான் அஸ்மின் பேசுகிறேன். அங்கு திரு.கணேசலிங்கம் ஆசிரியர் அவர்கள் இருக்கிறார்களா ?

அஃப்ராஜ் - இல்லையே. சற்று முன்தான் வெளியே சென்றார். வந்தால் ஏதாவது கூறவேண்டுமா.?

அஸ்மின் - நான் அஸ்மின் பேசியதாகவும், எனது வீட்டிற்கு பிற்பகல் 4 மணியளவில் வரும்படியும் கூற முடியுமா?

அ.்.ப்ராஜ் - ஆம். நீங்கள் கூறியவாறே சொல்கிறேன்.

அஸ்மின் - உங்கள் உதவிக்கு மிக்க நன்றி. வணக்கம்.

அ.்.ப்ராஜ் - நன்றி வணக்கம்.

## கூட்டங்களில் பேசும் பண்பு

நாம் ஏதாவதுதொரு சந்தர்ப்பங்களில் பாடசாலைக் கூட்டங்களிலோ வெளியில் நடக்கும் கூட்டங்களிலோ பேசுவதற்கேற்ற சந்தர்ப்பம் ஏற்படலாம். இவ்வாறான வேளைகளில் நாம் மிகவும் அவதானமாகப் பேச வேண்டும்.

1. கேட்போர் இயல்பறிந்து அதற்குரிய பாங்கிற் பேசவேண்டும்.
2. ஓரளவிற்கேனும் திருத்தமான மொழியில் வலுவின்றிப் பேசவேண்டும்.
3. ஒலி - ஒளி வேறுபாடுகளை அனுசரித்துப் பேசவேண்டும்.
4. புதிய புதிய சொற்களை விளங்கி அவற்றைப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு சலிப்பு ஏற்படா வண்ணம் பேசவேண்டும்.
5. பெரியோர்களை கண்ணியப்படுத்தி அமைதியாக அன்பாக பண்பாக பேசவேண்டும்.

இவ்வாறு பேசுவதன் மூலம் மாணவர்கள்ளாகிய உங்களின் மொழித்திறன் விருத்தி மட்டுமல்லாது உங்களுடைய உள்ளத்தின் ஆளுமையும் விருத்தியடைவதோடு, சமூகத்திறன் விருத்தியும் மேம்பாடடைகிறது.

## முதியோர் குருமார்களுடன் பேசுதல்

நாம் முதியோர்களுடனோ பேசும் போது முதலில் வணக்கம் கூறவேண்டும். பின் அவர்கள் முன்மரியாதையாக நின்று கொண்டுதான் பேசவேண்டும். இவர்கள் முன் இருந்து கொண்டோ, கை, கால்களை ஆட்டிக் கொண்டோ பேசுதல் கூடாது. அவர்கள் ஏதாவது பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கே ( இடையில் ) பேசுதல் கூடாது இவ்வாறான தீய பழக்கவழக்கங்களை இயன்றளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எமது பேச்சினால் முதியவர்களும் குருமார்களும் மகிழ்ச்சியடையக்கூடிய முறையில் பேசவேண்டும். வீண்கதைகள் - புறங்கதைகள், பகிடிக்கதைகள் போன்றவற்றைக் கதைத்தல் கூடாது. இவ்வாறு நாம் மிகுந்த நல்ல பழக்கவழக்கங்களைக் கையாளுவதால் நாம் வளர்ந்தாலும் மக்களால் மதிக்கப்படுவோம் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.

பெரியவர் : தம்பி உடுவில் சந்திக்கு செல்வதற்கு இன்னும் அதிக தூரம் இருக்கின்றதா?

சிறுவன் : இல்லை பெரியவரே, இன்னும் சிறிது தூரம்தான் இருக்கிறது. இதோ குறுக்குப் பாதையால் நடந்தால் மிக விவைில் அடைந்து விடலாம்.

பெரியவர் : அப்படியா தம்பி, மெத்த நன்றி, சிறியவனாக இருந்தாலும் மிக விளக்கமாக. பொறுமையாக பதிலளிக்கிறாய் உனக்கு கடவுள் ஆசீர்வாதம் கிடைப்பதாக.

சிறுவன் : நன்றி பெரியவரே போய் வாருங்கள்.

- சிரமதானப்பணி யொன்று மேற்கொள்வதற்காக உமது வகுப்பு மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி நீர் மாணவர் மத்தியில் பேசுவதாக எண்ணி அப்பேச்சை எழுதுக.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

## 2.2.3 கேட்போர் நிலை/தகுதியறிந்து பேசுதல்

கீழ்க் காணும் நிலையில் உள்ள ஒருவர். உம்மைப்பார்த்து இன்றைய கல்வி முறையை நீர் விரும்புகிறீரா? என வினாவும் போது எவ்வாறு விடை அளிப்பீர் என்பதை புள்ளிக் கோட்டில் எழுதுக.

கல்வி அதிகாரிக்கு :.......................................................................................

.......................................................................................

பாடசாலை அதிபருக்கு :.......................................................................................

.......................................................................................

ஆசிரியருக்கு :.......................................................................................

.......................................................................................

தாய் / தந்தையருக்கு :.......................................................................................

.......................................................................................

சமயகுரவர்க்கு :.......................................................................................

.......................................................................................

## 2.2.4 தகவல் செய்திகளைத் தெரிவிக்க தொலைபேசியில் பேசுதல்

நவீன தொடர்பு சாதனங்களுள் தொலைபேசி இன்று தகவல்களை வழங்குவதில் முதலிடம் வகிக்கின்றது. மாணவர்கள் தொலைபேசியில் எவ்வாறு பேசுதல் வேண்டும். எவ்வாறு தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தல் வேண்டும் என்பதை ஆசிரியர் உதவியுடன் அறிந்து கொள்ளவும்.

❖ தொலைபேசி மணி கிணீர்....கிணீர் என அடிக்கிறது... நீர் தொலை பேசியை எடுத்தால் எவ்வாறு பேசுவீர்.

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

❖ உமது நண்பன் பிரசன்னாவுக்கு தொலைபேசி இலக்கம் 345367 தொடர்பு கொள்ள வேண்டுமாயின் நீ எவ்வாறு தொலைபேசியை உபயோகிப்பீர் என்பதை படிமுறையில் எழுதுக.

1. ..........

2. ..........

3. ..........

4 ..........

## 2.2.5 கனிவான வார்த்தைகளைக் கையாண்டு பண்பாக பேசுதல்

இனிமையான கனிவான வார்த்தைகளை பேசுவது மூலம் எவரையும் கவரமுடியும். இனிமையாக பேசுபவர்க்கு சென்ற இடம் எல்லாம் வரவேற்பு உண்டு.

கீழ்க்காணும் சொற்களை வைத்து கனிவான வாக்கியம் அமைக்குக.

1. இனிமையான நினைவு :..........
..........

2. பசுமையான பயிர்கள் :..........
..........

3. இன்பமான பொழுது :..........
..........

4. கனிவான பார்வை :..........
..........

5. கருத்தான சொற்கள் :..........
..........

6. கவர்ச்சியான அழகு :..........
..........

7. ஆரவாரமான மகிழ்ச்சி :..........
..........

8. ஒளிமயமான இரவு :..........
..........

9. கலையம்சமான கட்டிடம் :..........
..........

10. கண்ணுக்கு குளிர்மையான இடம் :..........
..........

## 2.3 பல்வகைப் பேச்சு விருத்தி

### 2.3.1 மேடைப் பேச்சு

மாணவர்களே நீங்கள் எல்லோரும் மேடைப் பேச்சில் வல்லவராக விளங்க வேண்டும். மேடைப் பேச்சு பேசும் போது குறிப்பிட்ட விடயத்தை நழுவாமல் பேச வேண்டும். அத்தோடு மேடைப்பேச்சு கேட்டுக் கொண்டிருப்பவர்க்கு சலிப்புத் தட்டாது பேசுவது முக்கியமானதாகும்.

கீழே காணப்படும் தலைப்புக்களின் பேச்சு ஆரம்ப பகுதி தரப்பட்டு உள்ளது. அதனை நன்கு அவதானித்து தொடர் பேச்சை எழுதுக.

#### கல்வியின் சிறப்பு

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையார் கல்லாதவர்"

கல்வி என்பது கண்போன்றது எமது உடம்பின் முக்கிய உறுப்பு கண் ஆகும் [illegible]னாலேயே திருவள்ளுவர் கண்ணுடையவர் என்பவர் கற்றோர் எனவும் மற்றோர் [illegible]ர் முகத்திரண்டு புண்ணுடையார் எனக் கூறியுள்ளார். எனவே நாம கல்வியில முக்கிய கவனம செ[illegible]த்துதல வேண்டும ______

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

#### நல்லொழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்."

நல்லொழுக்கம் ஆனது ஒவ்வொரு மாணவனுக்கும் அத்தியாவசியமானதாகும். ஒழுக்கம் எப்பொழுதும் மேன்மையை தருவதானலேயே அ..து உயிரினும் மேலாக கருதப்படுகின்றது. என திருவள்ளுவர் தனது பொய்யாமறையான திருக்குறள் நூலில் கூறியுள்ளார். தனது ஒழுக்கம் உடைமை எனும் அதிகாரத்தில் நல்லொழுக்கத்தை வலியுறுத்தி நல்லொழுக்கம் உடையவர் உயர்வு அடைவார். ஒழுக்கம் தவறுபவர் பெரும் பழியை அடைவார் எனவும். மறந்தும் தீமையான சொற்களை தம்வாயினால் நல்லொழுக்கம் உடையர் கூறமாட்டார் எனக் கூறியுள்ளார். எனவே மாணவராகிய நாம நல்லொழுக்கம் தவறாது........................................................................

## எனது பொழுது போக்கு

மாணவர்களே, நான் இன்று எனது பொழுது போக்குபற்றி உங்களுக்குத் தெரிய வைப்பதற்காக இப்பொழுதை பயன்படுத்துகிறேன். எனது பயனுள்ள பொழுது போக்கு முத்திரை சேகரிப்பதாகும். முத்திரை சேகரிப்பது மூலம் பலநாட்டு பெரியார்கள் பற்றியும், அயல் நாட்டு நிகழ்வுகள் பற்றியும் அறிய முடிகின்றது.

## 2.3.2 உரையாடல், கலந்துரையாடல், நட்புறவான பேச்சு

மாணவர்களே, நாம் உண்மை பேசுதல் எனும் கருத்துப் பற்றி மாணவ கலந்துரையாடலின் ஒருபகுதியை விவாத முறையில் தருகின்றோம். அதனை தொடர்ந்து எவ்வாறு வளர்த்து செல்ல வேண்டும் என்பதை நீங்கள் ஆசிரியர் உதவியுடன் பூர்த்தி செய்க.

இன்று நாம் கலந்துரையாட எடுத்துக்கொண்ட பொருள் உண்மை பேசுதல் என்பதாகும்.உண்மையைப் பேசுவதால் உயர்வு அடையலாம். அரிச்சந்திரன் உண்மைப் பேசி வந்ததால் தனது வாழ்க்கையில் மிக கூடிய துன்பங்களை அநுபவித்தார். பின் உண்மையால் உயர்வடைந்தார்.

இதேபோன்று வள்ளுவப் பெருந்தகை

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த"

நன்மை பயக்கும் எனின் எனக் கூறியுள்ளார் எனவே உண்மையைப் பேசுதல் சிறப்புத்தான் ஆனால் நன்மை பயக்குமானால் பொய் சொல்வதில் குற்றமில்லை எனச் சொல்கிறார் திருவள்ளுவர்...............

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

- "சூழல் மாசடைவதை தடுக்க யாது செய்யலாம்" என மாணவர் மத்தியில் கேள்வி எழுப்பி அவர்களை கலந்துரையாட செய்து, அவர்கள் கூறிய விடயங்களை மாணவர்கள் தொகுத்து எழுதுக.

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

## 2.3.3 பாத்திரமேற்றுப் பேசுதல், நடித்து பேசுதல்

மாணவர்கள் கீழ்க்காணும் பயற்சி தாம் வினோதவுடைப் போட்டியில் பங்கு பற்றுவராக எண்ணி, தம்மை பற்றி விபரித்து கூறுகின்ற மாதிரி பாத்திர மேற்று பேசிய பேச்சை ஒவ்வொரு பாத்திரங்களின் கீழ் எழுதுக.

ஒரு சோதிடன் :........................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

ஒரு விவசாயி :........................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

நான் ஒரு மந்திரவாதி :...............................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

நான் ஒரு வைத்தியன் :...............................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

## 2.3.4 பொம்மலாட்டப் பேச்சு

மேலே காணப்படும் படத்தில் காணப்படும் பொம்மைகள் கதைப்பதாக கற்பனை பண்ணி ஓர் அசைவு நாடகத்தை எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

## 2.3.5 விமர்சித்தல், விவாதித்தல், தர்க்கித்தல்

நீங்கள் விரும்பி வாசித்த ஓர் சிறுகதை பற்றி எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

குறிப்பிட்ட கதையை நீங்கள் விரும்புவதற்கான காரணம் யாது ?

.............................................................................................................................................

.............................................................................................................................................

இதைப்போன்ற கதையை எழுத உமக்கு விருப்பமா.?

.............................................................................................................................................

.............................................................................................................................................

மேற்காணும் பாடலில் நீர் ரசித்த பகுதி எது.?

.............................................................................................................................................

.............................................................................................................................................

## 2.3.6 கதை கூறல்-பல்வகைக் கதைகள், சிறுவர் கதைகள், சிறுவர் சிறுகதைகள்.

மாணவர்கள் தென்னாலிராமன் கதை, அலிபாபாவும் 40 திருடரும், ரொபின்சன் குருசோ கதைகளை மாணவர் படிக்கலாம்.

முதலில் அலிபாபாவும் 40 திருடர்களும் கதையில் இரண்டு சகோதர்கள் எனும் கதையினை படியுங்கள்.

### இரண்டு சகோதரர்கள்

முன்னொரு காலத்திலே பராசிக நாட்டில் பேரிசா என்று ஒரு குட்டிக்கிராமம் இருந்தது. அங்கே இரு சகோதரர் இருந்தனர். ஒருவனின் பெயர் காசிம். அவன் வயதில் மூத்தவன். இளைய சகோதரனின் பெயர் அலிபாபா.

அலிபாபா எல்லோரிலும் அன்பு உடையவன். அவன் நேர்மை நியாயம் கொண்டவன். அவன் எளிமையாகவும் எல்லோருடனும் அன்பாகவும் பழகுவான். அவன் ஒரு ஏழை. அலிபாபாவுக்கு எல்லோரும் தன்னை அறிந்து இருக்க வேண்டும் என்பதில் ஆசை. அலிபாபா றோட்டில் மூன்று கழுதைகளில் விறகுகளை சுமந்தபடி போகும் வேளையில் மக்கள் அதோ அலிபாபா போகிறார் எனக் கூறுவார்கள்

அவனுடைய சகோதரன் காசிம் வித்தியாசமானவன். அவன் பேராசை கொண்டவன். அவன் பெரும் பணக்காரனாக வரஆசைப்பட்டான். அவன் தன்னை யார் நோகடித்தாலும் கவலைப்படமாட்டான். அவன் தன்பாட்டிலே வேலை செய்வான். அவனுடைய பொழுதுபோக்கு தனது காசை எண்ணுவதே ஆகும்.

காசிம் விதவைப் பெண் ஒருத்தியை மணம் முடித்து பெரிய செல்வந்த வியாபாரி ஆனான். அவனிடம் சொந்தமாக பல ஒட்டகங்களும் பெரிய பங்களாவும் இருந்தது.

அலிபாபா விறகு வெட்டுபவனாக தொழில் புரிந்தான். ஒவ்வொரு நாள் மாலையிலும் அவன் தனது மூன்று கழுதைகளிலும் விறகுகளை ஏற்றி நகருக்கு கொண்டு வ ருவான். நகரில் அதனை விற்பான்.

அலிபாபா தனது மனைவியுடனும் மகனுடனும் சிறிய வீட்டில் வசித்து வந்தான்.

இக்கதையைப் படித்து இவ்விரண்டு சகோதரர்களில் யாரை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் என்பதை எழுதுக

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

## 2.3.7 விவரணப் பேச்சு, நேர்முக வர்ணனைப் பேச்சு

மாணவர்கள் கிரிக்கட் வர்ணனையை ரேடியோவிலும், தொலைக்காட்சியிலும் கேட்டிருப்பீர்கள். இதே போன்று உங்கள் ஊர் சந்தையிலும் வியாபாரிகள் பொருட்களைப் பற்றி விவரணம் செய்வதை அவதானித்து, நீங்கள் கேட்டவற்றை எழுதுங்கள்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

நீங்கள் கடற்கரைக் காட்சி யொன்டறில் கண்டவற்றை விவரணமாக எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

உங்களின் பாடசாலையில் இரு இல்லங்களுக்கிடையில் உதைபந்தாட்டப் போட்டி நிகழும் வேளையில், உம்மை அவ்விளையாட்டு பற்றி ஒலி பெருக்கியில் விவரணம் செய்யுமாறு பணிக்கப் பட்டதாக கற்பனை செய்து நீர் எவ்வாறு உதைபந்தாட்டம் பற்றி விவரணம் செய்வீர் என்பதை கீழேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

## 2.3.8 தாளலய நாடகம்

தாளலய நாடகம் லய வரிசையில் அமையும், கிராமியப் பாடல்கள், மலையக பாடல்கள், வில்லுப்பாட்டு ஆகியன தாளலயப்பாடல்கள் ஆகும்.

தாளத்திற்கேற்ப பாடக்கூடிய முறையில் அமைந்த நாட்டுப் பாடல்.

ஆண்:- வெங்காயக் கூடு தூக்கி வீதிவழி போறபெண்ணே சிங்கார நடை நடந்து சிரித்துக் கொண்டு போவதென்ன ?

பெண்:- சங்கத்திலே நான் குடுத்து சல்லிக்காசு சம்பாதித்தன் தங்கத்திலே வளையல் வாங்கி என் கரத்தில் நான் அணிவேன்.

ஆண்:- நைலோனும் வாங்கித் தாறன் நைலேசும் வாங்கித் தாறேன் கைலேஞ்சி வாங்கித் தாறேன் கால்சிலிப்பர் வாங்கித் தாறேன்.

பெண்:- அப்பன் அறிந்தால் உன்னை அடித்து நொருக்கிடுவான். முப்பத்திரண்டு பல்லை முழுசாகக் கட்டவைப்பான்.

ஆண்:- ஆச்சியின்ரை அண்ணையெல்லோ ஆசையான உன்ரை தேப்பன் நாச்சியார் உன்ரை ஆச்சி நல்ல மாமி எனக்குமல்லோ?.


பெண்:- உண்ணாணப் போகாதே உன்ரை ஆச்சியறிய கண்ணானை எனக்குமல்லோ கலியாணம் பேசுகினம்

ஆண்:- எங்கையடி பேசுகினம் எவனையடி பேசுகினம் மங்களமாய் தாலிகட்ட மாப்பிள்ளை நானிருக்க.

பெண்:- அப்பன் ஏசினாலென்ன ஆச்சி ஏசினாலென்ன ?. துப்பல் வத்தும் நேரத்துக்கே தூக்கிக்கொண்டு போயிடுவான்.

ஆண:- வெங்காயக் கூடு விற்க சங்கத்துக்குப் போகவேணும் அங்கைபார் ஆச்சிவாறா இஞ்சாலை நானும் போறன்.

① கீழே காணும் பாடலை முதலில் படித்துப் பார்க்கவும்.



புள்ளிப் புள்ளி மான்

இராகம்:- சாருகேசி

தாளம்:-ஏகம்

(சதுஸ்ர நடை)

| | | | |
|---|---|---|---|
| 1. | புள்ளிப் | புள்ளி | மானே |
| | துள்ளித் | துள்ளி | ஓடிவா |
| | அள்ளி | இந்தப் | புள்ளியை |
| | ஆர்உ | னக்குத் | தந்தவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கண்ணி | ரண்டும் | கூர் | மை |
| | காதி | ரண்டும் | கேண் | மை |
| | பெண்ணி | னத்தின் | சாய | ல் |
| | தெரியு | துந்தன் | வடி | வில் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | வண்ண | வண்ணப் | பூக் | கள் |
| | வகைவ | கையாய் | கனி | கள் |
| | கண்ணி | றைந்த | காட் | சி |
| | காண்ப | திலே | மகிழ்ச் | சி |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | பென்னம் | பெருங் | காட் | டில் |
| | தன்னந் | தனி | செல்கை | யில் |
| | உன்னு | டலில் | முள்ளு | கள் |
| | உறுத் | துவது | இல்லை | யோ |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | எட்டி | ஓடும் | மா | னே |
| | என்னி | டமாய்நீ | வந் | தால் |
| | புட்டிப் | பாலும் | தந் | து |
| | போற்றி | உன்னை | வளர்ப் | பேன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | கட்டில் | மெத்தை | தரு | வேன் |
| | காத | ணிகள் | தரு | வேன் |
| | குட்டிப் | புள்ளி | மா | னே |
| | குதித்து | ஓடி | வா | நீ |

2வது பாடல்

ஏற்ற நீர்ப் பாட்டி னிசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொழியினிலும்
கண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடமார் பழகுபல பாட்டினிலும்

3வது பாடல்

பொலி பொலிதாயே பொலி தம்பி ரானே பொலி
பூமி பொலி பூமாதேவித் தாயே
மண்ணின் களமே மாதாவே நிறைகளமே
பொன்னின் களமே பூமாதேவீ
அம்மா பொலி பொலி பொலியே

4வது பாடல்

சீர் கொண்ட புகழ்க் காரை நகரில் வாழ் - மாதாவின்புகழ்
செந்தமிழ் வசந்தன் சிற்திசை பாடவே
கார் கொண்ட புகழ்க் கரட மும்மத - மருதூ ரைங்கரன்
கற்பகப் பொற்பதம் எப்போதும் போற்றுவாம்

5வது பாடல்

கப்பல் திசை கெட்டது கரைக்குள் அடையாதோ
கட்டையினில் வைத்த பிண மற்றுயிர் கொளாதோ
உப்பள மதிற்பதர் விதைக்க முளை யாதோ
உத்தரமும் ஊமைய னுரைக்க அறியானோ

இப்பிறவியர் குருடு இப்ப தெளியாதோ
எப்பாமா மழை தருவ தென்றினி திருந்தாய்
தப்பினால் உலக முறு வார்கள் துயர் கண்டாய்
தற்பரா பரனுதவு சக்தி கண்ண கையே

6வது பாடல்

"ஆரடித்து நீரழுதீர்
அமுத கண்ணீல் நீர் ததும்ப
பேரை உலைத் தாக்கால்
பெருவிலங்கு பூட்டிடுவேன்"

"அத்தை மடி மேலும்
அம்மான் மார் தோள் மேலும்
வைத்து முத்தாட்டும்
மரகதமே கண் வளராய்"

## 2.4 பாவோதுவர்

### 2.4.1 இலகுவான குழந்தைப் பாடல்கள்.

முதலில் பாரதியார் பாடிய சின்னஞ்சிறுகிளியே கண்ணம்மா பாடலைப்பார்ப்போம். மாணவர்கள் பாடலைப்பாடும் போது சந்தலயம் தொனிக்கப்பாடுதல் வேண்டும்.

சின்னஞ் சிறு கிளியே, - கண்ணம்மா !
செல்வக் களஞ்சியமே !
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரிய வந்தாய் !
பிள்ளைக் கனியமுதே, - கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே !
அள்ளி யணைத்திடவே - என் முன்னே
ஆடி வருந் தேனே !
ஓடி வருகையிலே - கண்ணம்மா
உள்ளங் குளிரு தடி
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ:
உச்சி தனை முகந்தால் - கர்வம்
ஓங்கி வளரு தடீ:
மெச்சி யுனையூரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடீ.
கன்னத்தில் முத்தம்மிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா !
உன்மத்த மாகு தடீ:
சற்றுன் முகஞ் சிவந்தால் - மனது
சஞ்சல மாகு தடீ:
நெற்றி சுருங்கக் கண்டால் - எனக்கு
நெஞ்சம் பதைக்கு தடீ:
உன்கண்ணில் நீர்வழிந்தால் - என்னெஞ்சில்
உதிரங் கொட்டு தடீ!

*என் கண்ணிற் பாவையன்றோ? கண்ணம்மா !*
*என்னுயிர் நின்ன தன்றோ ?*
*சொல்லு மழலையிலே - கண்ணம்மா !*
*துன்பங்கள் தீர்த்திடுவாய் !*
*முல்லைச் சிரிப்பாலே - எனது*
*மூர்க்கந் தவிர்த்திடு வாய்.*
*இன்பக் கதைகளெல்லாம் - உன்னைப்போல்*
*ஏடுகள் சொல்வதுண்டோ ?*
*அன்பு தருவதிலே - உனை நேர்*
*ஆகும்மொர் தெய்வ முண்டோ?*

*மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்*
*வைர மணிகளுண்டோ ?*
*சீர் பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்*
*செல்வம் பிறிது முண்டோ ?*

## 2.4.2 பல்வேறு சந்தப்பாடல்கள் கிராமியப்பாடல்கள்

முதலில் கும்மிப் பாடல் ஒன்றை பாடுவோம்

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையார் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே எங்கள் ( செந்தமிழ் )

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு - உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு - நல்ல
காதல் புரியும் அரம்பையர்போல் - இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

3. காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

4. முத்தமிழ் மாமுனி நீள்வரையே - நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு - செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே - அவை
யாவும் படைத்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

5. நீலத் திரைக்கடலோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டி கிடக்கும் தமிழ்நாடு ( செந்தமிழ் )

6. கல்வி சிறந்த தமிழ் நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் - மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு ( செந்தமிழ் )

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

8. சிங்களம் புட்பகம் சாவக - மாதியே
தீவு பலவினுஞ் சென்றேறி - அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் - நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு ( செந்தமிழ் )

9. விண்ணை இடிக்கும் தலையிமயம் - எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் - சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் - தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு ( செந்தமிழ் )

10. சீன மிசிரம் யவனரகம் - இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு ( செந்தமிழ் )

**⑦ கீழ்க் காணும் பாடல்களை பாடி கேள்விகட்கு விடைதருக.**

## <u>எங்கள் பள்ளிக்கூடம்</u>

அன்பு தம்பி தங்கையர்
ஆசையாக சென்றிடும்
இன்பமான ஓரிடம்
எங்கள் பள்ளிக்கூடமே.

இனிய காவில் பூக்கள் போல்
இயற்கை அழகில் செல்லுவர்
பணிந்து ஆசான் சொற்படி
பாடந்தன்னைச் சொல்லுவர்

ஒன்று கூடிப் பாடல்கள்
ஒற்றுமையாய்ப் பாடுவர்
கண்ணைப் போல சூழலை
காத்து இன்பங் கொள்ளுவீர்!

நாளை உலகின் நாயகர்
நாமே என்று உணருவர்
தோளைக் கொடுக்கும் பள்ளிக்கு
தொடர்ந்து நன்றி கூறுவோம்!

(1) இப்பாடல் எதனை குறித்துப் பாடப்பட்டுள்ளது ?

.......................................................................................................

(2) எமது சூழலை எவ்வாறு காக்க வேண்டும் ?

.......................................................................................................

(3) ஆசான் என்பது யாரைக் குறிக்கிறது ?

.......................................................................................................

(4) தோள் என்பதன் ஒத்த வடிவம் என்ன ?

.......................................................................................................

(5). ஒற்றுமையின் எதிர்வடிவம் என்ன ?

.......................................................................................................

## அண்ணல் காந்தி

அண்ணல் காந்தி என்றொருவர்
அவனியில் வாழந்தார் கேள் பாப்பா !
பழுதற மானிடர் வாழும் வகை
பண்புடன் சொன்னவர் அவர் பாப்பா !

அன்பும் அறமும் அஹிம்சையும்
அறிவும் பெற்றார் கேள் பாப்பா !
இந்திய நாட்டின் தேசிய பிதா
இன்பெயர் பெற்றவர் அவர் பாப்பா !

அன்புடன் வாழும் வழி வகைகள்
அறியச் செய்தார் கேள் பாப்பா !
உண்மை சத்தியம் நேர்மையென்று
உலகில் உயர்ந்தவர் அவர் பாப்பா

அருமை புத்தன் யேசுவுடன்
அண்மையில் சேர்ந்தார் கேள் பாப்பா!
வாய் சொல் மட்டும் காட்டாமல்
ெ ந்தே மறைந்தவர் அவர் பாப்பா!

பிள்ளைகளே இது பெரியார் அண்ணல் காந்தி மகானைப் பற்றிய செய்தியாகும். இதுபோல இவரைப்பற்றி நீங்கள் ஒரு பாடல் இயற்றுங்கள்.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(1) அவனி என்றால் என்ன ?

.................................................................................................................................

(2) மானிடர் என்பது யாரரைக் குறிக்கும் சொல்லாகும் ?

.................................................................................................................................

(3) உண்மை, சத்தியம், நேர்மை இம்மூன்றினைக் குறிக்கும் ஒரு சொல் தருக. ?

.................................................................................................................................

(4) இந்தியா இலங்கையின் எப்பகுதியில் உள்ளது ?

.................................................................................................................................

(5) அருமை என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக ?

.................................................................................................................................

2. அடுத்து கிராமியப் பாடல் ஒன்றினைப் பார்ப்போம் ?

1. நெல்லு பொதியோடும் வந்தீரோ - தம்பி
   நெல்லு மலை நாடும் கண்டீரோ - தம்பி
2. உள்ளிப் பொதியோடும் வந்தீரோ - தம்பி
   உள்ளி மலை நாடுங் கண்டீரோ - தம்பி
3. அரிசி பொதியோடும் வந்தீரோ - தம்பி
   அரிசி மலைநாடுங் கண்டீரோ - தம்பி
4. வேந்தருக்கு வேந்தராய் வந்தீரோ - தம்பி
   வேந்தர் தம்மணி முடியும் கண்டீரோ - தம்பி

அடுத்து ஒரு தாலாட்டு பாடலைப் பார்ப்போம்

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
சீரார் பசுங்கிளியே தெவிட்டாத செந்தேனே
பேரார் குலக் கொழுந்தே பெருமானே ஆராரோ

பச்சை இலுப்பை வெட்டிப் பால் வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமே பொன்னாலை தொடு கயிறு முத்தாலே

முத்தென்று முத்தோ, முது கடலின் ஆணி முத்தோ
சங்கீன்ற முத்தோ, சமுத்திரத்தின் ஆணிமுத்தோ
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சு நீரழுதீர் அஞ்சாதே கண்மணியே
அம்மான் அடிச்சாரோ, ஆமணக்கம் கம்பு வெட்டி
பேத்தியடிச்சாரோ, பிரபந்தடியாலே
ஆச்சி அடிச்சாரோ ஆவரசந் தண்டு வெட்டி

## 2.4.3 மாணவர்களுக்கு தேவையான பாடல்கள்.

சேவல் கூவும் காகம் கரையும்
செக்கச் சிவந்த சூரியனும்
ஏவல் புரிய உலகை நோக்கி
எழுந்து வருவான் அதிகாலை
பாலைப் போல நிலவு வானில்
பவனி வரப் போகுது
கோலக் கடல் அலக்கை கை தட்டிக்
குது கலிக்கப் போகுது
நீலவாணும் கண் சிமிட்டி நின்று பார்க்கப்போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறான்

## இடம் பிடிக்கணும் தம்பி

குயிலைப் பாரு தம்பி - அது
கூவி மகிழுது தம்பி
மயிலைப் பாரு தம்பி - அது
மகிழ்ந்து ஆடுது தம்பி

நிலவைப் பாரு தம்பி - அது
நித்தம் ஓடுது தம்பி
தென்றலைப்பாரு தம்பி - அது
தீண்டித் தழுவுது தம்பி

இயற்கைச் செல்வம் எல்லாமே
ஏதோ ஒன்று செய்யுது பாரு
சு[illegible] இருக்கலாமா ? - நீ
சோம்பித் திரியலாமா ?

நல்லாப் படிக்கணும் தம்பி - நீ
நல்லது செய்யணும் தம்பி
எல்லோர் மனதிலும் தம்பி - நீ
இடம் பிடிக்கணும் தம்[illegible] !

## 2.4. பாடல்கள் பொருள் புலப்படுமாறு / உணர்ச்சி புலப்படுமாறு பாடுதல்.

ஔவையார் பாடிய வாக்குண்டாம் பாடல் சிலவற்றை படிப்பதோடு அதன் பொருள் அறிந்து உணர்ச்சியுடன் பாடவும்.

வாக்குண்டா[illegible] நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா. தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

நீரளவே ஆகுமாம் நீர் ஆம்பல்: தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று .

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை.

## 2.5 ஆக்க முறையான பேச்சுக்களை நிகழ்த்துதல்

### 2.5.1 குறித்த ஒரு தலைப்பை ஆயத்தம் செய்து பேசுதல்

கீழ்க்காணும் தலைப்பில் ஒரு பேச்சை ஆயத்தம் செய்வதற்காக எழுதவும்.

**எனது பூந்தோட்டம்**

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

**நான் ஒரு வள்ளலானால்**

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

## 2.5.2 ஒரு பொருள் பற்றிய விளக்கப் பேச்சு

கீழ்க்காணும் ஆக்க முறையான பேச்சின் ஆரம்பம் தரப்பட்டுள்ளது தொடர்ந்து மாணவர்கள் எழுதுங்கள்.

**அன்பு**

எல்லோரிடம் அன்புகொள் உலகமே உன்மீது அன்புகொள்ளும், அன்பின் வலிமையை உணர்ந்து அன்பின் முன் மண்டியிட்டான் கலிங்கத்து மன்னன் அசோகசக்கரவர்த்தி. அவன் அன்பு தான் இன்ப ஊற்று, அன்புதான் உலகஜோதி அன்புதான் உலகமகா சக்தி என்றான்.

அன்பு பல வகையில் செலுத்தலாம், இரக்கம், கருணை, காருண்யம், பந்துத்துவம் ,பட்சபாசம், நேசம் விசுவாசம், அபிமானம், காதல், பக்தி என பலவகைப்படும்.

எளியவர்கள் மேல் செலுத்தும் அன்பு - இரக்கம்

அறிவு பலம் , சரீரபல / மற்றவலிமையற்றவர்கள் மேல் செலுத்தும்.

**அன்பு - கருணை**

ஜீவராசிகள் மேல் காட்டும் அன்பு - காருண்யம்

உறவினர் மேல் காட்டும் அன்பு - பந்துத்துவம்

எஜமான் மீது வேலையாள் காட்டும் அன்பு - பட்சம்

தாய் தன் குழந்தை மீது காட்டும் அன்பு - பாடம்

நண்பர்கள் மேல் காட்டும் அன்பு - நேசம்

வேலையாள் எஜமானிடம் காட்டும் அன்பு - விசுவாசம்

நாடு தாய் மொழி மீது செலுத்தும் அன்பு - அபிமானம்

கணவன் மனைவி மீது செலுத்தும் அன்பு - காதல்

மனிதன் இறைவன் மீது காட்டும் அன்பு - பக்தி

அன்பினில் பல ரகங்கள் உண்டு அன்பு உள்ளம் படைத்தவர்களாக ஒவ்வொரு மனிதனும் இருந்து விட்டால் உலகே இன்பமயமாக இருக்கும்

கீழ்க்காணும் தலையங்களின் கீழ் பேச்சு முறை கட்டுரை வரைக.

**அமைதி**

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

**2.5.3 ஒரு நிகழ்வு பற்றி வர்ணனைப் பேச்சைப் பற்றி கட்டுரைவரைக**

எங்கள் பரிசளிப்பு விழா

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

நான் கண்ட கனவு

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

நான் பார்த்த கார்ட்டூன்படம்

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

**நான் பார்த்த ஒரு விபத்து**

**நான் பார்த்த ஒரு திருவிழா**

### 2.5.4 உடனாக்கச் சொற்பொழிவும் / உடனாக்க நாடகம்

*கொம்பியூட்டர் விளையாட்டு பற்றி சொற்பொழிவு.*

நவீன யுகத்தின் கண்டுபிடிப்புகளில் கொம்பியூட்டர் மிக அத்தியாவசியமானதாகும்.பல பேர் செய்த வேலைகளை இலகுவாகவும்,எளிமையாக செய்வதில் கொம்பியூட்டர் முன்னணியில் உள்ளது. இன்று விளையாட்டுக்கள் கூட கொம்பியூட்டரில் விளையாட முடியும். இன்றைய சிறுவர்களின் பொது அறிவு, பொது விவேக ஆற்றலை வளர்ப்பதிலும் கொம்பியூட்டர் சேவை ஆற்றுகின்றது.

❋ மாணவர்கள் கீழ்க்காணும் தலையங்கங்களின் உடனாக்கச் சொற்பொழிவுகளை எழுதுக.

ஆகாய வீமானம்

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

உடனாக்க நாடகம் :

மாணவர்கள் ஒளவையாருக்கு முருகப்பெருமான் சுட்டபழம் வழங்கியதை உடனாக்க நாடகம் நடித்து பயிற்சி பெறல் வேண்டும்.

## 2.5.5 கற்பனை கதையாக்கி கூறல்

கீழே வரும் கற்பனைகதைகளை நீங்கள் பூர்த்தி செய்யவும்.

ஒருநாள் ஆமையொன்று மெல்ல மெல்ல நடந்து வந்தது. பசியுடன் வந்த நரியொன்று ஆமையை உண்ண எண்ணியது. நரி ஆமையின் ஓட்டின் மேல் காலை வைத்தது. ஆமை தனது உடம்பை உள்ளே இழுத்தபடி "நரியண்ணா நான் இப்போது கடிக்க கடினமாக உள்ளேன்" நீங்கள் என்னை நீரில் ஊறவிட்டால் இலகுவாக உணணலாம் எனககூறியது.........................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

.........................................................................................................................................................................

## 2.5.6 புதிய பாடல்களை ஆக்கிப் பாடுதல்.

முதலில் ஒரு பாடலைப் பார்ப்போம்

காற்று நன்றாய் அடிக்குது
காகம் மேலே பறக்குது
ஆற்றலோடு அலைகளும்
அடித்தடித்து அழைக்குது.

◎ இரவில் பால் நிலாவை பார்த்துப்பாடிய கவிதை கீழே உள்ளது அதனை மாணவர்பாடி மகிழலாம்.

### பால் நிலா

வான் கடலில் நிலவோடம் ஒடும்
விண் மீன்கள் கண்சிமிட்டி ஆடும்
கார் முகில்கள் வந்ததனை மூடும்
கருகி மனம் வேதனையில் வாடும்.

பார் முழுதும் பாலொளியை வீசும்
பார்க்கின்ற விழியெல்லாம் கூசும்
காதலர்கள் தூது மொழி பேசும்
காணாத கண்களதை ஏசும்

முகில் விலகி நிலவுமுகம் காட்டும்
மனம் குளிர தண்ணொளியைக் கூட்டும்
பால் நிலவைக் காட்டி அன்னை ஊட்டும்
பிள்ளையதை உண்டு பசி ஓட்டும்

ஏனங்கே நிற்கின்றாய் மாமா ?
எட்டாத கனியாகலாமா ?
வாவென்றும் வராவிட்டால் மாமா
வந்திடுவார் ஆம்ஸ்ரோங் மாமா.

• நான் வைத்தியரானால் எனும் பாடலைப் பார்ப்போம்.

### நான் வைத்தியரானால்

வைத்தியனாய் நானிருந்தால்
வையம் போற்ற வாழ்ந்திடுவேன்.
கைலஞ்சம் எடுக்காமல்
கருணையோடு செயல்படுவேன்.
சாதி, பேதம் பார்க்காமல்
சகலருக்கும் உதவிடுவேன்.
நீதி தவறிப் போகாமல்
நாளும் சேவை செய்திடுவேன் !
சீறிச் சினந்து நிற்காமல்
சிரிப்புடனே பழகிடுவேன்.
மீறி எதையும் செய்யாமல்
மனமிரங்கி உதவிடுவேன்.

எதிரியையும் நண்பராக்கி
என்வசமே வைத்திடுவேன்.
நாதியற்ற மக்களுக்கும்
நல்லுதவி புரிந்துடுவேன்.

மாணவர்கள் இயற்கையின் கொடையொன்றை ரசித்து நீங்கள் கவிதை இயற்றி எழுதுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

## 2.5.7 சந்தர்ப்பத்திற்கேற்ப சுருக்கியும் பெருக்கியும் பேசுதல்

### போக்குவரத்துச் சாதனங்கள்

இலங்கையில் போக்குவரத்து சாதனங்களாக ஆகாய விமானம், மோட்டார் கார், கப்பல், வள்ளம், பஸ் வண்டி, லொறி, புகையிரதம், ஓட்டோ, மிதி வண்டி ஆகியன பாவிக்கப்படுகின்றன. ஒருவர் ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு செல்வதற்கு போக்குவரத்து சாதனங்கள் உதவி புரிகிறது. இலங்கை போக்குவரத்து சாதனங்கள் பெருகிய அளவிற்கு பாதைகள் அதிகரிக்கவில்லை இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

மேலே காட்டப்பட்டது போன்று கீழ் காணும் தலைப்புகளில் பேச்சு ஒன்றினை எழுதவும்.

### மின்சாரத்தின் பயன்கள்

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

✦ இன்றைய தொலைக் காட்சி

ஞாயிறு

**ரூபவாஹினி**

6.57 நிகழ்ச்சி முன்னோட்டம்
7.00 ஆயுபோவான்
9.30 "பிக் ஐடியாஸ்"
11.00 ஆயுபோவான் தொடர்ச்சி
12.30 கார்ட்டூன்
1.00 கார்ட்டூன்
1.10 டாக்டர் கியூன் (தொடர் நாடகம்)
2.00 சிவரஞ்சனி தொலைக்காட்சி நாடகம் (தமிழ்)
2.30 பொன்மாலைப் பொழுது
3.00 தொலைக்காட்சி நாடகம் ( சிங்க )
3.30 றோபோகோப் ( ஆங்கிலம் )
4.15 சிறுவர் நிகழ்ச்சி
4.30 நேபாள் மக்கள் ( சார்க் விடியோ நிகழ்ச்சி )
5.00 செய்திகள்
5.10 நகைச்சுவை நிகழ்ச்சி ( ஆங்கிலம் )
5.25 சைவநீதி ( தமிழ் )

5.50 மும்மணிகளுக்கு அஞ்சலி
6.00 இசைக் கருவிகள்
6.30 செய்திகள் ( தமிழ் )
6.50 நிகழ்ச்சி முன்னோட்டம்
7.00 செய்திகள் சிங்களம்
7.25 இசை நிகழ்ச்சி
8.00 செய்திகள்
8.30 அம்மாய் தாத்தாய் ( அங் - 3 )
9.15 தேசிய விளையாட்டு விழா முக்கிய நிகழ்வுகள்
9.45 செய்திகள்
10.05 நிகழ்ச்சி முன்னோட்டம்
10.10 த எக்ஸ் பைல்ஸ்

**எம். ரி. வி.**

8.55 நிலைய ஆரம்பமும் நிகழ்ச்சி முன்னோட்டம்

9.00 கரிமேடு கருவாயன் (தமிழ்திரைப்படம்)
11.30 பிஸ்னஸ் வீக்
12.00 சாட் ஷோ ( இசை நிகழ்ச்சி )
1.00 எம்.ரி.வி விளையாட்டு உலகம்
3.05 கிரிக்கட்
7.00 செய்திகள் சிங்களம்
7.15 கிரிக்கட்
8.00 செய்திகள் (சிங்களம்)
8.05 கிரிக்கட்
12.00 நாளைய நிகழ்ச்சி நிரல்

இவ் நிகழ்ச்சி நிரலில் மாணவர் விரும்பும் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்க.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

கீழ்க்காணும் குறிப்புக்களை இணைத்துக் கட்டுரை வரைக.

திமுதிமு, திகுதிகு, அக்கம்பக்கம் , கொளுந்துவிட்டு, தீயணைப்பு படை, செஞ்சிலுவை சங்கம் , மின்சாரக் கோளாறு, அங்குமிங்கும் , செந்நாக்கு, கரும்புகை, மின் தூக்கி, பலமைல் தூரம், பலஅடுக்குகளை, மாடி, அலுவலகம் தொலைபேசி, நூற்றுக்கணக்கான, தீயணைப்பு நிலையம் வருமுன் காத்தல்.

## தீயின் கொடூரம்

## 2.6. சொற்க்களஞ்சிய விருத்தி

### 2.6.1 பரிச்சயமான சொற்றொடர்களுடன் அறிமுகமான சொற்களை கலந்து பேசுதல்.

| பரிச்சியமான சொற்கள் | அறிமுகமான சொற்கள் | |
|---|---|---|
| அம்மா | வா , | |
| அப்பா | போ , | செல் |
| அக்கா | இரு , | அமர் |
| அண்ணன் | படி , | கல் |
| தங்கை | கொடு , | வழங்கு |
| தம்பி | நடி , | |
| மாமா | படு , | துயில் |
| மாமி | தொடு , | முட்டு |
| | பறி , | பிடுங்கு |
| | கூறிய , | சொன்ன |
| | பருகு , | அருந்து |

கீழே காணும் உதாரண வாக்கியங்களுக்கேற்ப வாக்கியம் அமைக்கவும்

உ+ம்

அப்பா செல்லுங்கள்.

அம்மா கதிரையில் அமருங்கள்.

அண்ணா கல்வி கற்கின்றார்.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

அடுத்து சில வாக்கியங்கள் பரிச்சயமான சொற்களோடு அறிமுகமான சொற்களைக் கலந்து தரப்பட்டுள்ளது. இதே போன்று புதிய வாக்கியங்களை நீங்கள் எழுதவும்.

உ+ம்

1. சந்திரன் விண்ணில் இருக்கின்றான்.
2. விண்மீன்கள் வானில் மின்னுகின்றது.
3. பூம்பொழிலில் மலர்கள் மலர்கின்றன.
4. பூக்களின் மேல் அளிகள் மொய்க்கின்றன.

5. மாணவர்கள் ஏரிக்கரையோரம் விளையாடுகிறார்கள்.

6. மின் விளக்குகள் பளிச்சென மின்னுகின்றன.

மேலே உள்ளது போன்று வாக்கியங்கள் எழுதவும்

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

3. ..............................................................................................................................

4. ..............................................................................................................................

5. ..............................................................................................................................

6. ..............................................................................................................................

7. ..............................................................................................................................

8. ..............................................................................................................................

9. ..............................................................................................................................

10. ..............................................................................................................................

**2.6.2 புதிய சொற்களை ஏற்ற சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்தி பேசுதல்.**

உ+ம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடிவாரம் | - | மலைச்சாரல் | இட்டியம் | - | பாகம் |
| அதிதனம் | - | கொடை | இதழ் | - | உதடு |
| ஆதவன் | - | சூரியன் | உரிமை | - | ஆட்சி |
| ஏந்திழை | - | பெண் | ஒப்புதல் | - | சம்மதித்தல் |
| கண்கூடு | - | காட்சியளவு பிரதியட்சம் | நந்தவனம் | - | பூந்தோட்டம் |
| புள் | - | பறவை | பரி | - | குதிரை |

சில வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கேற்ப வாக்கியங்கள் அமைக்கவும்

1. மாம் பொழிலில் இருந்து கோகிலம் கூவுகிறது.
2. வாரிசூழ் உலகை பலமன்னர் ஆண்டு வந்தனர்.
3. வானத்தில் புட்கள் பறக்கின்றன.
4. ஆதவன் வானத்தில் பவனி வருகிறான்
5. நந்தவனத்தில் ஏந்திழைகள் பூ கொய்கிறார்கள்.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

பின்வரும் கதையைப் படித்து புதிய சொற்கள் சிலவற்றைக் கண்டுபிடியுங்கள்.

உதாரணம்.

1. ஆங்கிலேயர்
2. உபசரித்தம்
3. ஆடம்பரம்
4. இழிவானது
5. விருந்தினர்

## உயர்ந்த செயல்

ஒரு தடவை மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேச ஒரு ஆங்கிலேயர் அவரிடம் வந்தார். அவரை வரவேற்று, அவரது மனம் சந்தோஷப்படும்படி அவரை உபசரித்தார் மகாத்மா காந்தி.

அந்த ஆங்கிலேயர் சில நாட்கள் அவருடன் தங்கியிருக்க வேண்டும் என்று விரும்பினார். பொதுவாக அவர்கள் ஆடம்பரப்பிரியர்களாகையால் எந்த வேலைக்கும் உதவி செய்ய ஆட்களை வைத்துக் கொள்வார்கள்.

அதுபோல் அந்த ஆங்கிலேயரும் தனது அறையைச் சுத்தம் செய்ய, சாப்பிடும் பாத்திரங்களைச் சுத்தம் செய்ய ஒரு ஆள் வேண்டுமென்று விரும்பினார். உடனே மகாத்மா காந்தியிடம் தன் விருப்பத்தை கூறினார். காந்தியும் மறுநாளே ஒரு வேலைக்காரனை ஏற்பாடு செய்வதாக அந்த ஆங்கிலேயரிடம் கூறினார்.

அவரின் விருப்பப்படியே மறுநாளில் இருந்து அவரது அறை நன்கு சுத்தம் செய்யப்பட்டது. அவரது உணவுப் பாத்திரங்களும் நல்ல முறையில் சுத்தம் செய்யப்பட்டன.

"நான் உறங்கி எழுவதற்கு முன்னேயே நீங்கள் அமர்த்திய வேலைக்காரன் என் அறையையும் பாத்திரங்களையும் நல்ல முறையில் சுத்தம்செய்து விடுகிறான்" என்று அந்த வேலைக்காரனைப்பற்றி காந்தியிடம் மிகவும் பெருமையாகச் சொன்னார் அந்த ஆங்கிலேயர்.

ஒரு நாள்....

அந்த ஆங்கிலேயர் மற்ற நாட்களில் எழுந்திருக்கும் வழக்கமான நேரத்திற்கு முன்பாக எழுந்து விட்டார். தனது சமையலறையில் பாத்திரங்கள் சுத்தம் செய்யப்படும் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தவர் ,பெரிதும் அதிர்ச்சி அடைந்தார்.

அங்கே மகாத்மா காந்தி அவரின் பாத்திரங்களை மிகவும் சுறுசுறுப்புடன் சுத்தம் செய்து கொண்டு இருந்தார், ஆங்கிலேயர் பெரிதும் பதறிப்போய் வேகமாக உள்ளே போனார். "ஐயா! என்ன கொடுமை இது ? என் பாத்திரங்கள் நீங்கள் சுத்தம் செய்வதா ? இந்த இழிவான வேலையை இத்தனை நாள் செய்தது நீங்கள்தானா? கூடாது. கூடவே கூடாது. இந்த வேலையை இனி நீங்கள் செய்ய நான் அனுமதிக்க மாட்டேன்!" என்றார் அந்த ஆங்கிலேயர்.

அவரது பேச்சைக் கேட்ட மகாத்மா காந்தி, "ஐயா ! நீங்கள் என் விருந்தாளி. உங்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது என் கடமை. விருந்தினர்களுக்காகச் செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதை இழிவாகக் கருதக்கூடாது. என்னை பொறுத்த வரை எந்த வேலையும் எனக்கு இழிவானதல்ல. சுத்தத்தையும் , சுகாதாரத்தையும் நான் மிகவும் விரும்புவேன். வேலையில் ஏற்றதாழ்வு என்று எதுவுமேயில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைபடுகிறேன் !" என்று புன்னகை தவழச் சொன்னார் மகாத்மா காந்தி.

இது, அந்த ஆங்கிலேயரின் மனதில் ஒரு உண்மையான நீதியை ஆழமாகப் பதிந்து விட்டது. அன்றிலிருந்தே, தன்னுடைய வேலைகள் அனைத்தையும் தானே செய்து கொள்ளப் போவதாக காந்தியிடம் கூறினார் அந்த ஆங்கிலேயர்.

இக்கதையயைப் படியுங்கள் இதில்லுள்ள புதிய சொற்களை ழங்காக தெளிவாக எழுதுங்கள்.

| | |
|---|---|
| 1. ............................................ | 2. ............................................ |
| 3. ............................................ | 4. ............................................ |
| 5. ............................................ | 6. ............................................ |
| 7. ............................................ | 8. ............................................ |
| 9. ............................................ | 10. ............................................ |
| 11. ............................................ | 12. ............................................ |

விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும் நாடுகளும்

| கண்டுபிடிப்புக்கள் | கண்டுபிடித்தவர்கள் | நாடுகள் |
|---|---|---|
| 1. விமானம் | ஹென்சன் ( 1843ல் ) | இங்கிலாந்து |
| | ரைட்பிரதர்ஸ் ( 1903 ) | |
| 2. புகையிரதம் | ஸ்டீவன்சன் | இங்கிலாந்து |
| 3. மோட்டார் வண்டி | ஹென்றிபோர்ட் ( 1884 ) | அமெரிக்கா |
| 4. வானொலி | மார்க்கோனி ( 1902 ) | இத்தாலி |
| 5. மின்சாரம் | பென்ஜமின் பிராங்ளின் | அமெரிக்கா |
| 6. கமரா | தோமஸ் வெல்ஜ்உட் ( 1882 ) | அமெரிக்கா |
| 7. சினிமா | தோமஸ் அல்வா எடிசன் (1889 ) | அமெரிக்கா |
| 8. கிராமபோன் | தோமஸ் அல்வா எடிசன் ( 1876 ) | அமெரிக்கா |
| 9. கைக்கடிகாரம் | பீட்டர் ஹெல் ( 1500 ) | ஜேர்மனி |
| 10. அச்சு இயந்திரம் | ஹீடன் பெர்க் ( 1850 ) | ஜேர்மனி |
| | கேக்ஸ்டன் ( 1476 ) | இங்கிலாந்து |
| 11. பவுன்டன் பேனா | வாட்டமென் ( 1864 ) | அமெரிக்கா |
| 12. டயர் | டன்லப் ( 1883 ) | ஸ்கொட்லாந்து |
| 13. டெலிபோன் | அலெக்ஸாண்டர் கிரகாம்பெல் ( 1836 ) | அமெரிக்கா |
| 14. தையல் மிசின் | தின்மானியர் ( 1830 ) | பிரான்ஸ் |
| 15. தட்டச்சு | சோபாஸ் ( 1873 ) | இங்கிலாந்து |
| 16. கைத்துப்பாக்கி | கோல்ட் ( 1835 ) | அமெரிக்கா |

பிள்ளைகளே மேலே உள்ள பட்டியலை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்குப் பட்டியலைப் பார்க்காமல் விடைஎழுதுக.

① வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

..................................................................................................................................

② டெலிபோனை கண்டு பிடித்தவர் யார் ? எந்த ஆண்டு ?

..................................................................................................................................

③ இங்கிலாந்தைச் சேர்ந்த சோபஸ் கண்டுபிடித்தது எதனை ?

..................................................................................................................................

④ அமெரிக்காவைச் சேர்ந்த சினிமாவைக் கண்டு பிடித்தவர் யார் ?

..................................................................................................................................

⑤ டயரைக் கண்டுபிடித்தவர் பெயர் என்ன ? எந்த நாடு ?

..................................................................................................................................

## 2.6.3 சொற்றொடர்கள் , பழமொழிகள் உவமைத் தொடர்கள் முதலானவற்றையும் கையாண்டு பேசுதல், சொற்பொழிவாற்றல்.

மாணவர்கட்கு சில உதாரண சொற்றொடர் வாக்கியங்களை கீழே தந்துள்ளோம். அவற்றை அவதானித்து கீழ்க்காணும் சொற்களுக்கு வாக்கியம் அமைக்கவும்.

1. ஆட்டுக்குட்டிகள் துள்ளிக் குதிக்கும் போது நமக்கு ஆனந்தம் பிறக்கும்.
2. கடற்கரையில் சூரியன் மறையும் போது வானம் செக்க செவேல் எனக் காணப்படும்.

1. பரிதாபம் :........................................................................................
2. அணுவும் :........................................................................................
3. ஆடம்பரம் :........................................................................................
4. ஈவு இரக்கம் :........................................................................................
5. பல முனை :........................................................................................
6. பகிரங்கம் :........................................................................................
7. சத்தியம் :........................................................................................
8. சமயோசிதம் :........................................................................................
9. சங்கடம் :........................................................................................
10. சரணாலயம் :........................................................................................

## 2.6.3 பழமொழிகள்

நம் மூதாதையர்கள் தங்களுடைய அறிவு. ஆராய்ச்சி, உலக அனுபவங்கள் இவற்றால் கண்டறிந்த உண்மைமிகுந்த அறிவுரைகள், பொருட்செறிவு நிறைந்த சொற்றொடர்களே பழமொழிகள் ஆகும். இவைகளை பொன்மொழிகள் என்றே கூறலாம். இப்பழமொழிகளைத் தகுந்த இடங்களில் பயன்படுத்த நம் பேச்சு நடையும், எழுத்து நடையும் சிறப்புடையனவாகத் திகழும். சில பழ மொழிகள் உவமைகளாகவும் பயன்படுத்தலாம்.

*பழமொழிகள் சில..........*

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடாது செய்பவர் படாது படுவர்.
3. அடியாத மாடு படியாது.
4. அள்ளாமல் குறையாது இல்லாமல் பிறவாது .
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
6. அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்.
7. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

8. அழுத பிள்ளை பால் குடிக்கும்.

9. ஆத்திரகாரனுக்கு புத்தி மட்டு.

10. ஆடையில்லாதவன் அரை மனிதன்.

11. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.

12. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.

13. ஆனைக்கும் அடி சறுக்கும்.

14. இக்கரைக்கு அக்கரை பச்சை.

15. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.

16. இருக்கிறதை விட்டுப் பறக்கிறதை பிடிக்கலாமோ.

17. இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை.

18. இளமையில் கல்.

19. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்.

20. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

21. உயர உயர பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?

22. உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூடியுமா?

23. உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி

24. ஊமை ஊரைக் கெடுக்கும்.

25. எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கு தூக்குபவர் யார்?

26. எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ.

27. எரிகிற வீட்டில் பிடிங்கியது லாபம்.

28. எரிகிற கொள்ளியில் எது நல்ல கொள்ளி?

29. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

30. ஏழைச் சொல் அம்பலம் ஏறாது.

31. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

32. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

33. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?

34. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

35. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

36. கடைத் தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே.

37. கழுதைக்கு தெரியுமா கற்பூரத்தின் வாசனை.

38. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

39. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.

40. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

41. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

42. குரைக்கிற நாய் கடிக்காது.

43. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

44. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

45. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவான்னேன்.

46. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.

47. கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளில் தெரியும்.

48. கெஞ்சினால் மிஞ்சுவார், மிஞ்சினால் கெஞ்சுவார்.

49. கோல் எடுத்தால் குரங்கும் ஆடும்.

50. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்.

51. சாக துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால் அளவு.

52. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

53. சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.

54. சிறு துளி பெரு வெள்ளம்.

55. சுத்தம் சோறு போடும்.

56. சுண்டக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்.

57. சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும்.

58. சும்மா இருந்த சங்கை ஊதி கெடுத்தானாம் ஆண்டி.

59. செவிடன் காதில் சங்கு ஊதின கதையாயிற்று.

60. சொன்னதைச் செல்லுமாம் கிளிப்பிள்ளை.

61. தனி மரம் தோப்பாகாது.

62. தன் வினை தன்னைச் சுடும்.

63. தானே பழுக்காததை தடி கொண்டு அடிப்பதா.?

64. தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறு வேறு.

65. துணிந்தவனுக்கு துக்கமில்லை.

66. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.

67. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

68. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு நல்ல பெண்ணிற்கு ஒரு சொல்.

69. நத்தையின் வயிற்றிலும் முத்து பிறக்கும்.

70. நிறை குடம் தளும்பாது.

71. நுணலும் தன் வாயால் கெடும்.

72. நூலைப்போல சேலை தாயைப் போல பெண்.

73. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

74. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.

75. பல்லுப் போனால் சொல்லுப் போச்சு.

76. பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்.

77. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.

78. பதறாத சொல் சிதறாது.

79. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

80. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

81. புலால் விற்ற காசு நாறுமா?

82. பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்.

83. பூவுடன் கூடிய நாரும் மணம் பெறும்.

84. பெருங்காயம் இருந்த பாண்டம் மணக்காமல் இருக்குமா ?

85. போதும் என்ற மனமே பொன் செய் மருந்து.

86. மந்திரம் கால் மதி முக்கால்.

87. மருந்தும் விருந்தும் மூன்று நாட்கள்.

88. மரத்தை நட்டவன் தண்ணீர் ஊற்றுவான்

89. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.

90. மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம்.

91. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

92. மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா.?

93. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டால் முடியுமா ?

94. யானை வரும் பின்னே. மணியோசை வரும் முன்னே.

95. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

96. வளரும் காய் பிஞ்சிலே தெரியும்.

97. விளையாட்டே வினை ஆகும்.

98. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

99. விதையொன்று போட சுரையொன்று காய்க்குமா.?

100. வெறுங்கை முழம் போடுமா ?

### 2.6.3 விளக்கத்திற்குத் தகுந்த பழமொழியின் எண்ணை கட்டத்தில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறுதுளி பெரு வெள்ளம் | ☐ | நன்கு கற்ற அறிஞர்கள் வீண் பெருமை பேசாமல் அடக்கம்மாக இருப்பர். |
| 2. | பணம் இல்லாதவன் பிணம்! | ☐ | பிடிவாத குணம் உடையவர்கள் தாங்கள் கூறுவது தான் சரி என்று சாதிப்பர். |
| 3. | நிறைகுடம் தளும்பாது | ☐ | உப்பு சரியான அளவில் இல்லை என்றால் பண்டங்கள் ருசிகெட்டு, வீண்ணாகும். |
| 4. | தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்! | ☐ | சிறிது சிறிதாக சேர்த்து வைத்தால், நாளாக ஆக அது பெரிய அளவில் சேர்ந்து விடும். |

| | | | |
|---|---|---|---|
| 5. | உப்பில்லாப் பண்டம் குப்பையிலே ! | ☐ | செல்வம் இல்லாதவனை யாரும், மதிக்கமாட்டார்கள், ஏனெனில் அவனால் ஒருகாரியத்தையும் சாதிக்க முடியாது. |
| 6. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும்! | ☐ | கிழிந்த உடையானாலும் துவைத்து சுத்தப்படுத்தி அணிதல் நல்லது. சுத்தம் சுகம் தரும். |
| 7. | அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு! | ☐ | ஒருவன் பணத்துடன் தனிவழியில் செல்லும் போது திருடர்களுக்கு அஞ்சுவான். அது போல் குற்றம் புரிந்தவர் மன-அமைதியின்றி அச்சத்துடன் இருப்பர். |
| 8. | கந்தையானாலும் கசக்கிக் கட்டு ! | ☐ | விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம் |
| 9. | பேராசை பெரு நட்டம் ! | ☐ | ஒருவர் மனதில் ஏற்படும் இன்பதுன்பங்களை அவருடைய முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். |
| 10. | மடியில் கனம் இருந்தால் வழியில் பயம்! | ☐ | எந்தப் பொருளையும் அளவோடு உபயோகிக்க வேண்டும். |
| 11. | புத்திமான் பலவான் ஆவான் ! | ☐ | ஒருவனின் சிறுவயது பழக்கங்களை வைத்தே அவனைப் பற்றி கூறவேண்டும் |
| 12. | மின்னுவது எல்லாம் பொன்னல்ல ! | ☐ | உடல்வலிமை உடையவன் தன் எதிரிகளை வென்றுவிடுவான். எக்காரியத்தையும் எளிதாக செய்து விடுவான். அப்பலம் உடையவனை அறிவு உள்ளவன் எளிதில் வெல்லுவான். |
| 13. | மனம் இருந்தால் மார்க்கமுண்டு! | ☐ | கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக்கூடாது. |
| 14. | முயற்ச்சி உடையார் இகழ்ச்சி அடையார் ! | ☐ | மக்கள் ஒன்றின் மீது ஆசைபடலாம் ஆசை அளவோடு இருக்க வேண்டும் அளவுக்கு மீறி ஆசைப்பட்டால் பல இன்னல்கள் ஏற்படும் |
| 15. | விளையும் பயிர் முளையிலே தெரியும் ! | ☐ | ஒருவருக்கு உதவ வேண்டும் என்ற உண்மையான எண்ணம் இருந்தால் நம் உதவியை நாடி வருபவர்களுக்கு எப்படியும் உதவ முடியும். |

# 3. வாசித்தல்

## 3.1 சரியான உச்சரிப்புடன் உரத்து வாசித்தல்.

### 3.1.1 சரியான உச்சரிப்பு, தெளிவு, விளக்கம், விரைவு என்பவற்றோடு வாசித்தல்

கீழே உள்ள கதையை தெளிவாக விளக்கமாக வாசிக்கவும்.

## ஆமை செய்த தவம்

ஒரு காலத்தில் ஒரு ஆமை வசித்து வந்தது. அந்த ஆமைக்கு இரண்டு வாத்துக்கள் நண்பர்களாய் இருந்தன. வாத்துக்களுக்கு இறக்கைகள் இருந்ததால் அவை பல இடங்களுக்கும் பறந்து சென்றுவரும். ஒவ்வொரு இடத்திலும் தாம் கண்டு களித்த இயற்கைக் காட்சிகள் , நீந்திக்களித்த நீர் நிலைகள், சந்தித்த பறவைகள் போன்ற பல அனுபவங்களை ஆமையிடம் சொல்லி மகிழும்.

இவற்றைக் கேட்கும் ஆமைக்கோ, தானும் அவை போன்று பல இடங்களுக்கும் சென்று பல இடங்களுக்கும் சென்று பல அனுபவங்களைப் பெற்று இரசிக்க வேண்டும் என்ற ஆவல் பிறக்கும்.

ஆனால், வாத்துக்களுக்கு இருப்பது போன்ற இறக்கைகள் தனக்கு இல்லையே, "இறைவன் ஏன் என்னை இப்படி வஞ்சிக்க வேண்டும்? இந்தக்கடினமான ஓட்டால் எனக்கு என்ன பயன் ? இதற்குப் பதில் வாத்துக்களைப் போல இரண்டு இறக்கைகளைப் படைத்திருந்தால் வாத்துக்கள் போன்று சுதந்திரமாய் நானும் பல இடங்களுக்குப் பறந்து சென்று, பல இயற்கைக் காட்சிகளை கண்டு களித்திருப்பேனே." என்று ஏங்கும்.

ஒரு நாள் இரண்டு வாத்துக்களும் வெளியூர் சென்று விட்டு, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள ஆமையிடம் வந்தன.

"ஆமை நண்பா! இந்த முறை எங்களுக்கு என்ன அற்புதமான அனுபவம் ஏற்பட்டது தெரியுமா ? நாங்கள் ஒரு பறவைகள் சரணாலயத்திற்குச் சென்று வருகிறோம். ஆஹா எத்தனை நூற்றுக்கணக்கான பறவைகள் தெரியுமா ? ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை, ஒவ்வொரு ரகம், ஒவ்வொரு நிறம். பார்க்கவே கண்கொள்ளாக் காட்சி.

பாவம் உன்னைத்தான் இறைவன் இப்படிப் படைத்து விட்டான். கிணற்றுத் தவளைபோல உலகம் தெரியாமல் வாழ்கிறாய். உன்னை நினைத்தால் எங்களுக்குப் பரிதாபமாய் இருக்கிறது!" என்றன வாத்துக்கள்.

இதைக் கேட்ட ஆமைக்கு அழுகையே வந்து விட்டது. "நண்பர்களே! நான் இறைவனிடம் இதுபற்றிக் கேட்கத்தான் போகிறேன்" என்றது ஆமை.

வாத்துக்கள் ஆமைக்கு ஆறுதல் சொல்லிவிட்டு தங்கள் இருப்பிடம் திரும்பின. ஆமை அந்த நிமிடமே இறைவனை நினைத்துக் கடும் தவம் இருந்தது. பல நாட்கள் அது ஊன் உறக்கமின்றி உலக ஆசாபாசங்களை மறந்து கடும் தவம் புரிந்தது.

ஒரு நாள் கடவுள் ஆமையின் முன் தோன்றி "ஆமையே ! உன் கடுந்தவத்தை மெச்சினோம். உனக்கு என்ன வேண்டுமோ கேள்" என்றார். ஆமை கடவுளை ஒருமுறை வணங்கி விட்டு. "கடவுளே இந்தக் கடினமான ஓட்டுடன் ஏன் என்னைப் படைத்தீர்? இதைச் சுமந்து கொண்டு உலகமே தெரியாமல் ஒரு கிணற்றுத் தவளைபோல் இருக்கிறேன். எனக்கு இந்த ஓடும் பிடிக்கவில்லை. வாழ்க்கையும் பிடிக்கவில்லை.

நான் பறவைகளைப் போல உல்லாசமாக வானில் பறந்து திரிய வேண்டும். ஆகவே எனது முதுகில் இருக்கும் ஓட்டை நீக்கி விட்டு, இரண்டு இறக்கைகளை கொடும் "என்றது. கடவுள் ஆமையைத் தீர்க்கமான ஒரு பார்வையைப் பார்த்துவிட்டு, "ஆமையே! காரணமில்லாமல் முதுகில் நான் ஓட்டைப் படைக்கவில்லை.

எல்லாவற்றையும் கணக்கிட்டுத்தான் படைத்துள்ளேன் ஆகவே படைத்ததை இனி என்னால் மாற்றமுடியாது. ஆனால் நீ உனது முதுகில் இருக்கும் ஓட்டின் முக்கியத்துவத்தை விரைவில் உணர்ந்து கொள்வாய்" என்று கூறி விட்டு மறைந்தார்.

சில நாட்கள் கழித்து வாத்துக்கள் வந்து ஆமையை சந்தித்து நலம் விசாரித்தன."என்ன ஆமை நண்பா! கடவுளை நோக்கி கடும் தவம் இருந்தாய். அடிக்கடி வந்து பார்த்தோம். கடவுள் தோன்றினாரா? நீ வரம் கேட்டாயா ?" என்று கேட்டன..

ஆமையின் கண்களில் நீர் திரண்டது "தவமிருந்தது வீண். ஏற்கனவே படைத்ததை மாற்றமுடியாது என்று கடவுள் கையை விரித்து விட்டார்" என்று தளதளத்த குரலில் சொன்னது ஆமை.

வாத்துக்களுக்கு எப்படி சமாதானம் சொல்வதென்றே தெரியவில்லை. அப்போது அருகிலிருந்த புதரில் இருந்து சலசலவென்று சத்தம் கேட்டது. வாத்துக்கள் இரண்டும் திரும்பிப் பார்த்தன. "ஐயோ! வேட்டை நாய்! ஓடு!" என்றது ஒரு வாத்து, இரண்டுவாத்துக்களும் பறக்கமுயன்ற போது, இரு வேட்டை நாய்களும் பாய்ந்து ஆளுக்கு ஒரு வாத்தைப் பிடித்தன. இதைக் கண்டு நடுங்கிபோன ஆமை "விருட்" டென்று தன் உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டு அந்த இடத்திலேயே கிடந்தது.

வாத்துக்களின் மரண ஓலத்தை ஓட்டுக்குள் இருந்தபடியே ஆமையால் கேட்க முடிந்தது. அப்போது ஆமை "கடவுளே ! எனக்கு ஓட்டை படைத்ததன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டேன். ஆபத்து சமயங்களில் என்னைக் காப்பாற்றிக்கொள்ள இந்தச் செயலை அடிக்கடி செய்தாலும், இறக்கைகளின் மேல் கொண்ட ஆசையால் இந்த ஓட்டின் முக்கியத்துவத்தை மறந்தே போய்விட்டேன். அதை எனக்கு உணரச் செய்ததற்கு நன்றி! " என மனதிற்குள் சொல்லிக் கொண்டது ஆமை.

*கீழே காணும் பாடலை தெளிவாகவும் விளக்கமாகவும் வாசிக்கவும்.*

"கொக்கரக்கோ என்று சேவல் கூவி விட்டது.
குயிலுங் கூடக் குக்கூ என்று பாடிவிட்டது
திக்கனைத்தும் இருள் விலகி ஓடி விட்டது
செங்கதிரும் வானில் மெல்ல ஏறி விட்டது.

*கீழ்க்காணும் பயிற்சியை உச்சரிப்பு தொணி விருத்தி செய்வதற்காக உரத்த குரலில் பயிற்சி செய்யவும்*

இப்பயிற்சிக்காக கந்தசஸ்டி கவசத்தில் வரும் சில வரிகள் கையாளப்பட்டுள்ளது.

சரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரி ரிரிரி
வணபவ சரவ வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நக நக நக நக நக நக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டகுடகு டங்கு டிங்குகு

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதி செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்

### 3.1.4 வாசிக்கும் அம்சங்களுக்கேற்ப ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்.

| தல் | கள் | ல் | டும் |
|---|---|---|---|
| படித்தல் | வந்தார்கள் | | வேண்டும் |
| கடித்தல் | நின்றார்கள் | | மாண்டும் |
| எடுத்தல் | போனார்கள் | | தாண்டும் |

⌘ உச்சரிப்பு தெளிவாகவும், விரைவாகவும், விளக்கமாகவும் கற்க, கீழ்க்காணும் பாடலை பாடவும்.

எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவம் எல்லாம்
பரிதிமுன் பனி போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்

### 3.1.2 பிறர் கேட்டு விளங்கிகொள்வதற்காக ஏற்ற தொனியில் வாசித்தல்.

ஆறுமுக நாவலர் மகாவித்தியாலய ஆரம்பத்துறை மாணவ மன்ற பொதுக்கூட்டம் 15.03.1997 கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டம் செல்வி வித்யா அம்பிகைபாகனின் தேவாரத்துடன் ஆரம்பமானது. அடுத்து தலைவர் தலைமை உரை ஆற்றினார். தலைமை உரையில் மாணவர்கள் கல்வித்துறையில் தம்மை ஈடுபடுத்தும் வேளையில் மாணவமன்றக் கூட்டங்களிலும் பங்கேற்று செயல்பட வேண்டும் எனக் கூறினார்.அதையடுத்து செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தார். அறிக்கை சரியானது என சுஜிவன் முன்மொழிய காசிநாதன் வழி மொழிந்தான்.

அடுத்து செல்வன் இராமநாதன் "கல்வியின் சிறப்பு" பற்றி பேசினார். செல்வி யமுனா வால் "செந்தமிழ் நாடேனும் போதினிலே" எனும் பாரதியார் கவிதை பாடப்பட்டது. அதன் பின் ஆண்டு 4 மாணவர்களுக்கும் ஆண்டு ஐந்து மாணவர்களுக்கும் இடையே விஞ்ஞானக் கல்விக்கு ஆங்கிலம் அவசியமா ? இல்லையா ? என விவாதம் நடைபெற்றது. இறுதியாக செல்வன் காந்தனின் தேவாரத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

### 3.1.3 ஒலி வேறுபாடுகளை தெளிவுபடுத்தி வாசித்தல்

னகர, ணகர, வேறுபாடு தரப்பட்டு உள்ளது இதற்கு சரியான கருத்தை தரும் வேறொர் சொற் தொடரை அகராதியில் பார்த்து எழுதுக.

1. அன்னம் -..........
2. அண்ணம் -..........
3. அனைத்து -..........
4. அணைத்து -..........
5. ஆனை -..........
6. ஆணை -..........
7. ஆனி -..........
8. ஆணி -..........
9. உன் -..........
10. ஊன் -..........
11. உண் -..........
12. ஊண் -..........
13. என் -..........
14. எண் -..........
15. என்ன -..........
16. எண்ண -..........
17. ஏனை -..........
18. ஏணை -..........
19. கனம் -..........
20. கணம் -..........
21. கனி -..........
22. கணி -..........
23. கனை -..........
24. கணை -..........
25. கன்னி -..........
26. கண்ணி -..........
27. கான் -..........
28. காண் -..........
29. கனல் -..........
30. கானல் -..........
31. தனி -..........
32. தணி -..........
33. தன் -..........
34. தண் -..........
35. தினை -..........
36. திணை -..........
37. தின்மை -..........
38. திண்மை -..........
39. நான் -..........
40. நாண் -..........
41. பனி -..........
42. பணி -..........
43. பானம் -..........
44. பாணம் -..........
45. புனை -..........
46. புணை -..........
47. பேன் -..........
48. பேண் -..........
49. மனம் -..........
50. மணம் -..........
51. மான் -..........
52. மாண் -..........

**ரகர, றகர வேறுபாடு தரப்பட்டுள்ளது இதற்கு சரியான கருத்தை தரும் வேறு சொற்றொடரை அகராதியில் பார்த்து எழுதுக.**

1. அரம் -..........
2. அறம் -..........
3. அறி -..........
4. அரி -..........
5. அறிதல் -..........
6. அரிதல் -..........
7. அரு -..........
8. அறு -..........

29. துரவு -..........
30. துறவு -..........
31. துரை -..........
32. துறை -..........
33. தூரல் -..........
34 தூறல் -..........
35. தெரி -..........
36. தெறி -..........

9. அருகு -..........................................

10. அறுகு -..........................................

11. அரை -..........................................

12. அறை -..........................................

13. இரை -..........................................

14. இறை -..........................................

15. உரி -..........................................

16. உறி -..........................................

17. உரை -..........................................

18. உறை -..........................................

19. எரி -..........................................

20. எறி -..........................................

21. கரி -..........................................

22. கறி -..........................................

23. கரை -..........................................

24. கறை -..........................................

25. கீரி -..........................................

26. கீறி -..........................................

27. குரு -..........................................

28. குறு -..........................................

37. நரை -..........................................

38. நறை -..........................................

39. நிரை -..........................................

40. நிறை -..........................................

41. பரி -..........................................

42. பறி -..........................................

43. பறை -..........................................

44. பரை -..........................................

45. பிர -..........................................

46. பிற -..........................................

47. பிரி -..........................................

48. பிறி -..........................................

49. பிரை -..........................................

50. பிறை -..........................................

51. புரம் -..........................................

52. புறம் -..........................................

53. பெரும் -..........................................

54. பெறும் -..........................................

55. பிரப்பு -..........................................

56. பிறப்பு -..........................................

லகர, ளகர , ழகர வேறுபாடு தரப்பட்டுள்ளது. இதற்கு சரியான கருத்தை தரும் வேறொர் சொற்தொடரை அகராதியில் பார்த்து எழுதுக.

1. அலகு -..........................................

2. அளகு -..........................................

3. அழகு -..........................................

4. அலி -..........................................

5. அளி -..........................................

6. அழி -..........................................

7. அலை -..........................................

8. அனை -..........................................

9. அழை -..........................................

10. ஆலை -..........................................

11. ஆளை -..........................................

28. கிலி -..........................................

29. கிளி -..........................................

30. கிழி -..........................................

31. குலம் -..........................................

32. குளம் -..........................................

33. குழம் -..........................................

34. கல் -..........................................

35. கள் -..........................................

36. காளி -..........................................

37. காலி -..........................................

38. காழி -..........................................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | ஆழை | -....................................... | 39. | குளி | -....................................... |
| 13. | இலை | -....................................... | 40. | குழி | -....................................... |
| 14. | இளை | -....................................... | 41. | குலி | -....................................... |
| 15. | இழை | -....................................... | 42 | மூலை | -....................................... |
| 16. | உலை | -....................................... | 43. | மூளை | -....................................... |
| 17. | உளை | -....................................... | 44. | வலி | -....................................... |
| 18. | உழை | -....................................... | 45. | வளி | -....................................... |
| 19. | ஒலி | -....................................... | 46. | வழி | -....................................... |
| 20. | ஒளி | -....................................... | 47. | விலி | -....................................... |
| 21. | ஒழி | -....................................... | 48. | விழி | -....................................... |
| 22. | கலம் | -....................................... | 49. | விளி | -....................................... |
| 23. | களம் | -....................................... | 50. | வாலை | -....................................... |
| 24. | கழம் | -....................................... | 51. | வாளை | -....................................... |
| 25. | கலி | -....................................... | 52. | வாழை | -....................................... |
| 26. | களி | -....................................... | 53. | வேலம் | -....................................... |
| 27. | கழி | -....................................... | 54. | வேழம் | -....................................... |
| | | | 55. | வேளம் | -....................................... |


| | | |
|---|---|---|
| பருத்தல் | சென்றார்கள் | தூண்டும் |
| வடித்தல் | வருவார்கள் | தோண்டும் |
| நடித்தல் | போகிறார்கள் | படம் |
| தருதல் | சொன்னார்கள் | மடம் |
| முடித்தல் | கதைத்தார்கள் | தடம் |
| துடித்தல் | மடித்தார்கள் | விடம் |
| மடித்தல் | துடித்தார்கள் | கடம் |

கீழ்காணும் பாடலை உணர்ச்சியுடன் வாசிக்கவும்

ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடு வில்லாலேளா
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லென்றோ
ஏழ்மை வேடனிறந்தில னென்றெனை ஏசாரோ. ?

**3.1.5 படங்கள் அட்டவணைகள், வரைபுகள், சுருக்க வடிவங்கள் குறியீடுகளை வாசித்தல்**

## கீழ்க்காணும் குறியீடுகளின் அர்த்தங்களை கவனியுங்கள்




♦ அடுத்து சுருக்க வடிவங்கள் சில தரப்பட்டுள்ளன. அவற்றின் விபரத்தை எழுதவும்

மே/பா :..............................................................................

பி.ப.ப :..............................................................................

தே.க.நி :..............................................................................

இ.போ.ச :..............................................................................

இ.பு.நி :..............................................................................

கி.மு :..............................................................................


கி.பி :..............................................................................

**அடுத்து வரைபுகள் சிலவற்றைப் பார்போம்.**

1) ஆண்டு 5 விஞ்ஞான பரீட்சையில் பெற்ற புள்ளிகள் வருமாறு :-

| | காந்தன் | இராமன் | பரதன் | வீமன் |
|---|---|---|---|---|
| விஞ்ஞானம் | 75 | 60 | 78 | 68 |

இதனை வரைபு படத்தில் பார்த்தால்




1. மிக கூடிய புள்ளியை பெற்ற மாணவன் யார் ?

..........................................................................................


2. மிக குறைந்த புள்ளியை பெற்ற மாணவன் யார் ?

..........................................................................................

3. மிக குறைந்த புள்ளியை பெற்ற வீதம் யாது ?

..........................................................................................

2) கீழ் காணும் வரைபடம் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




1. ஆகக்கூடிய புள்ளி பெற்றவன் யார்.?

............................................................................................................................................................................

2. குறைந்த புள்ளி பெற்றவன் யார்.?

............................................................................................................................................................................


⌛ குறியீடுகளும் அவற்றின் அர்த்தங்களும் கீழே தரப்பட்டுள்ளன.?









கீழ்காணும் உருவங்கள் சொல்லும் வாக்கியத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக?

(1) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -


(2) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

(3) 


- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கீழ் காணும் உருவங்களுக்கு சொற்கள் தரப்பட்டுள்ளன. அச்சொற்கள் கொண்டு உருவாகும் வசனத்தை எழுதுக.








(4) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

(8) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

(5) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

(9) 

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## 3.1.8 குறியீடுகளை அனுசரித்து வாசித்தல்

கீழ்காணும் வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுக.

1. இலங்கை எமது தாய் நாடு
2. பாடசாலையில் மாணவர்கள் படித்தனர்
3. கற்றது கை மன் அளவு
4. வாய்மை துய்மை

பாடபுத்தகத்திலுள்ள ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற பாடத்தை படித்து கீழ் காணும் குறியீடுகள் வரும் வாக்கியங்களை எழுதுக.

. , , , ; , : , ? , ! , " " , ( )

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

## 3.1.9 பாடல்கள், கவிதைகள் சந்தம், தாளையம், ஒத்திசைக்கேற்ப வாசி கவும்.

சந்திரமதி சந்திரமதி என்ன செய்கிறாய் ?
கன்றுக்குட்டி தின்பதற்க்கு புல் அறகின்றேன்
புல்லுத் தின்ற கன்றுக்குட்டி என்ன வாயிடும்?
பூதம் போல பருந்து வந்து துள்ளியோடிடும்.

முகில்கள் எல்லாம் ஓட்டம்
முழுவதும் மழைப் பாட்டம்
வெயிலால் பயிர் வாட்டம்
வேகும் புழுக் கூட்டம்

வெள்ளைக் கொக்கு ஒன்று வந்தது
மீனைக் கொத்திப் பார்த்தது
துள்ளித் துள்ளி மீனும் ஓடித்
தூரப் பாய்ந்து போனது
எல்லையற்ற கோபத்தோடு
இன்னும் கொக்கு முயன்றது
கல்லில் துள்ளி வீழ்ந்த மீனைக்
கௌவிக் கொண்டு பறந்தது.

**கலியுக காகம்**

பறந்த காகம் ஒன்றுக்கு
பசியும் உடனே எடுத்ததாம்
எறிந்த இலையைக் கண்டதாம்
எடுத்துப் பிரித்துப் பார்த்ததாம்

வடையில் பாதி இருந்தாம்
வாயால் கொத்தி எடுத்ததாம்
மாடி வீட்டு முகட்டில்
மகிழ்ந்து பறந்து அமர்ததாம்

குட்டி நாயும் வந்ததாம
கொஞ்சும் பாடேன் என்றதாம்
கெட்டியாக வடையினை
காலில் காகம் பிடித்ததாம்

நாடோர் புகழும் நாயண்ணா
நல்ல பாட்டுப் பாடுவேன்
கேட்டே மகிழ்வீர் என்றதாம்
காகா.....என்றே கரைந்ததாம்

எத்தனை அறிவு உனக்குதான்
ஏய்க்க முயன்றேன் தோல்வியே
என்றே நாயும் புகழ்ந்ததாம்
எழுந்து ஓடி சென்றதாம்

## 3.1.10 பாடல்களை சந்தி பிரித்து பொருள் விளக்கத்திற்குகேற்ப வாசித்தல்

சுவையாகி கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டோலை வாசியானின்றான் குறிப்பறியும்
மாட்டாதவன் நல்ல மரம்

*இதனை சந்தி பிரித்து பார்ப்போம்*

சுவை ஆகி கொம்பு ஆகி, காட்டு அகத்தே
நிற்கும் அவை அல்ல நல்ல மரங்கள் சபை
நடுவே நீட்டு ஓலை வாசியான் நின்றான்
குறிப்பு அறிய மாட்டாதவன் நல்ல மரம்

*அடுத்து ஒரு பாடலை சந்தி பிரித்து பார்ப்போம்*

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை
சாற்றுங்கால் நீதி வழுவாது நெறி முறையில்
மேதினியில் இட்டார் பெரியோர் இடாதார் இழி
குலத்தோர் பட்டாங்கில் உள்ள படி.

## 3.2 விளங்கி கிரகிப்பதற்காக மௌனமாக வாசித்தல்.

### 3.2.1 பல்வகையான (இலகுவான) இலக்கிய வடிவங்கள் நடைமுறைத் தேவைக்கென எழுத்துவடிவங்களை மௌனமாக வாசித்தல்.

### கவிதை

### பள்ளி செல்லும் சகோதரரே !

பள்ளி விட்டுப் பறந்தோடி - விடுமுறையில்
அள்ளி ஆனந்தத்தை அணைத்திட்ட அன்புச் சகோதரரே
கள்ளமிலாக் கல்வியதை நாளை கற்கப்போறீர்
வெள்ளணையில் விழித்தெழுந்து கல்வி கற்கப் போறீர்
துள்ளிக்குதித்து பல் துலக்கி துப்புரவாய் முகம்கழுவி
பள்ளிப் பையெடுத்து நாளை காலை பள்ளி செல்வீர்
வெள்ளிப்பூக்களாய் ஞாயிறு இரவின் - தாரகைகள் மறைந்ததும்
நல்ல கல்வி கற்றிடவே நாளை பள்ளி செல்வீர்
புத்துலகம் கண்டாயிற்று, புதுவருடம் உதித்தாயிற்று
சித்தமுடன் இறைவனையும் சிறப்பாக வழிபட்டே
நித்தம் அறிவு வளர்த்திடவே நிந்தனையின்றிப்
புத்தம் புது வகுப்பேறிப் புது மகிழ்வு பெற்றுய்வீர்

நிந்தனைகள் நின் அகத்தை விட்டு அகன்றோட
சிந்தனைகள் சிறப்புடனே வந்தாட - நிதமும்
வந்தனைகள் வசந்தமுடன் சேர்ந்தாடிடவே
மந்தையரின் சிந்தை விட்டு பள்ளி செல்வீர்

## கட்டுரை

# காடு அரசாங்கத்துக்குரிய இடமாகும்

எமது நாட்டில் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. காடானது எமது நாட்டின் வளங்களுள் மிகப் பிரதானமாகும். இவ்வாறான வளம் மிகு காட்டை அழிப்பது சட்டவிரோதமான செயலாகும். காடுகள் யாவும் அரசாங்கத்துக்குரிய சொத்துக்களாகும். காடுகளை அரசாங்கம் பல லட்சம் ரூபாய் செலவழித்துப் பாதுகாக்கின்றது. காடுகளினால் நாம் அநேக பிரயோசனைங்களை அடைகின்றோம். முதலாவதாக காடுகளினாலேதான் நாட்டில் மழை பொழிகின்றது. மழையினாலே தான் நாடு செழிப்படைகின்றது.

அடர்ந்த காட்டுப்பகுதிகளில் பல அரிய மிருகங்களும் , பறவைகளும் வசிக்கின்றன. இவைகள் வளர்ந்து பெருகுவதற்கு காடுகள் அத்தியாவசியமாகும். முதிரை, பாலை, தேக்கு, வேம்பு போன்ற பெரிய மரங்கள் காடுகளில் காணப்படுகின்றது. பலர் காடுகளிலுள்ள பல விலை உயர்ந்த மரங்களை அரசாங்கத்திற்குத் தெரியாமல் வெட்டி விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு சட்டவிரோதமாக மரம் வெட்டுவோரை அரசாங்கம் கைது செய்து தகுந்த தண்டனை அழிக்கின்றது. இருந்தும் பலர் களவாக இத்தொழிலில் ஈடுபடவே செய்கின்றனர்.

அரசாங்கம் காடுகளைப் பராமரிப்பது நாட்டுமக்களின் நன்மைக்காகவே என ஒவ்வொரு மனிதரும் நினைத்து அரசாங்கச் சொத்தான காடுகளுக்கு தீங்கு செய்வதை தவிர்க்க வேண்டும்.

1. காட்டினால் நாமடையும் பிரயோசனங்கள் யாவை ?

.............................................................................................................................................

2. நீர் அறிந்த காடுகளிலுள்ள விலங்குகளின் பெயர்களைத் தருக.

.............................................................................................................................................

3. காடுகளில் காணப்படும் மிகப் பெரிய மரங்கள் யாவை ?

.............................................................................................................................................

4. காடுகளிலுள்ள மரங்களை தறிபப்வர்களுக்கு என்ன கிடைக்கும் ?

.............................................................................................................................................

5. மரங்களினால் நீர் அடையும் பிரயோசனங்கள் பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

நாட்டின் உயர்ந்த பகுதியிலிருந்து வந்தது பற்றிய கட்டுரை ஒன்றைப் பாருங்கள்.

## கல்ஹின்ன

நான் பிறந்த ஊர் இலங்கையிலுள்ள மத்திய பிரதேசத்திலுள்ள கண்டி மாநகரத்திற்கண்மையிலுள்ள கல்ஹின்ன என்ற ஊராகும். இங்குள்ள நிலம் நிலமட்டத்திலிருந்து 5000 அடி உயரமானதாகும். இங்கு கூடுதலான குளிர் காணப்படுகின்றது. அத்துடன் இங்கு பிரயாணம் செய்வதும் மிகுந்த பயங்கரமானதாகும். வளைந்த நெளிந்த பாதைகளினாலே பஸ் செல்லும் போது, மனம் திக் திக் என அடித்துக் கொள்ளும். சற்று பஸ்ஸின் சில்லு சறிக்கினாலும் அதலபாதாளத்தில் விழவேண்டிய நிலைமை ஏற்படும். எனினும் அங்கும் அதிக மக்கள் வாழத்தான் செய்கிறார்கள். பாடசாலைகள் மதவழிபாட்டிடங்கள் யாவும் இங்கு அமைந்துள்ளன.

## உடைந்த குடையின் சுயசரிதை

எங்கள் வீட்டின் மூலையில் ஒரு உடைந்த குடை கிடந்தது. நான் அதனை குப்பையில் வீசுவதற்காக எடுத்தேன் - தம்பி என்னை வீசுவதற்கு முன் எனது கதையைக் கேள் என்று அந்த உடைந்த குடை தனது கதையைக் கூறத் தொடங்கியது.

நான் இந்தியாவிலுள்ள மதுரை மாவட்டத்திலே தயாரானேன். என்னை அவர்கள் மிகவும் அருமையாக தயாரித்தானர். எனக்கு பலவிதமான அழகுள்ள கம்பிகளை பொருத்தினார்கள். அதன் மேல் அழகான துணியினால் போர்த்தினார்கள், பின் எனது அடிபாகத்திற்கு பளபளவென்று மினுக்கிய கைப்பிடி ஒன்றைப் பொருத்தினார்கள். இவ்வாறு என்னுடன் சேர்த்து ஆயிரம் பேரளவில் தயாரிக்கப்பட்டோம். பின் கப்பல் மூலம் உங்கள் நாடான இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டோம்.

நான் இலங்கை நாட்டின் தலைநகரான கடையொன்றில் கண்ணாடி அலுமாரியில் இருக்கும் போதுதான் உனது தாயாரால் விரும்பி வாங்கப்பட்டேன். என்னை அவர் மிக அருமையாகத்தான் வைத்திருந்தார். ஒரு நாள் நான் அவரின் கையிலிருந்து தவறி விழுந்துவிட்டேன். விழுந்த என் மேல் கார் வண்டியொன்று ஏறிச்சென்றது அதனால் எனது கைப்பிடி கம்பிகள் எல்லாம் நொறுங்கிவிட்டன. உனது அம்மா வேதனையடைந்தவாறே என்னை எடுத்துப் பார்த்தார். பின் நான் இனி உபயோகமில்லாதவன் என என்னை இந்த மூலையில் வீசிவிட்டார். இப்படியாக பல மாதங்கள் கிடந்தேன். இன்று நீ என்னை வெளியே வீசப்போகிறாய் இதுதான் எனது கதை என்று தனது கதையைக் கூறிமுடித்தது.

பிள்ளைகளே நீங்களும் இது போல பின்வரும் தலைப்புக்களுக்கு சிறு கட்டுரை வரைக.

1. மிருகக்காட்சிசாலை
2. சீமெந்துத் தொழிற்சாலை
3. ஒரு கிழிந்த துணியின் கதை

பிள்ளைகளே உங்களைப் போன்ற மாணவன் ஒருவன் எழுதிய நான் ஒரு கைக்கடிகாரம் என்ற கைக்கடிகாரத்தின் சுயசரிதையைக் கேளுங்கள்.

## நான் ஒரு கைக்கடிகாரம்

நான் ஒரு கைக்கடிகாரம். என் பெயர் சிட்டிசன். நான் ஜப்பானில் ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். என்னுடன் ஏராளமான சகோதரர் பிறந்தனர். அவர்கள் பல வடிவங்களில் காட்சி அளிப்பார்கள். நானோ தங்கத்தாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளேன்.

என்னிறம் மஞ்சளும் வெள்ளையும் ஆகும். எங்களை ஒரு நாள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்தனர். எங்களை கொழும்பில் உள்ள ஒரு கடையில் கண்ணாடிப் பேழைக்குள் அடுக்கி வைத்தனர்.

ஒரு நாள் என்னை ஒருவர் வாங்கிச் சென்றார். அவர் மகள் "சுமிக்கு பிறந்த நாள் பரிசாகக்கொடுத்தார். சுமி என்னை பாடசாலைக்குச் செல்லும் போது அணிந்து செல்வாள். அவள் என்னை அவளுடைய நண்பர்களிடம் காட்டி பெருமை கொண்டாள்.

ஒரு நாள் நான் கைதவறி கீழே விழுந்து நொருங்கினேன். இனி தேவைப்படாத என்னை குப்பைத்தொட்டியில் வீசி எறிந்தாள் என்றாலும் எனது கடந்த கால வாழ்வை நினைக்கும் போது எனக்கு பெருமையாக இருக்கிறது.

## நாடகம் | செஞ்சோற்றுக் கடன்

பாத்திரங்கள் - கன்னன் (கர்ணன்), குந்தி, கண்ணன்

(அரங்கிலே கண்ணனும் குந்தியும் இருக்கிறார்கள், திரை விலகுகிறது)

குந்தி - கண்ணா நீ அறியாததா? ஒரு மார்க்கம் சொல் ஐயனே!

கண்ணன் - தர்மம் வெல்லும் அம்மா! அஞ்சாதீர்கள்

குந்தி - தாய் மனம் கேட்கமாட்டேன் என்கிறதே ! தவியாய்த் தவிக்கறதேயடா கண்ணா ? நான் என்ன செய்வேன்?

கண்ணன் - தருமனின் தாய் சஞ்சலப்படலாமா இப்படி?

குந்தி - தருமனின் தாய் தான் நான்: அறத்துக்கு இலக்கணம் வகுத்த அறிஞன், பொறுமை என்ற கொள்கையை, இலட்சியத்தை,நடைமுறையிலேயே நடத்திக்காட்டியவன்.

என் மைந்தன் தருமன், இல்லை என்று கூறவில்லை. தருமனின் தாய்க்குச் சந்தேகம் வந்திருக்கக்கூடாதுதான்! அறமே வெல்லும் என்பது பற்றிய உறுதி, அசையாத உறுதி, எனக்கு இருந்திருக்க வேண்டும்! ஆனால்.........

கண்ணன் - குந்தி தேவியாரே, ஏன் இப்படிச்சஞ்சலப்படுகிறீர்கள்? தங்கள் புத்திரர்கள் பரத கண்டத்தின் பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக மிளிரும் இலட்சிய புருஷர்களல்லவா? வில்லுக்கு விஜயன்; மல்லுக்கு வீமன்; பக்கபலமாக நகுலசகாதேவர்கள்.

குந்தி - அறிவேன் கண்ணா, அறிவேன். அவர்கள் எல்லோருக்கும் மேலாக நீ இருக்கிறாய், எங்கள் உயிர்த்துணையாக ! அதனாலேதான் உன்னிடம் ...........

கண்ணன் - என்றுமில்லாத தடுமாற்றம் இன்று மட்டும் எப்படி அம்மா உண்டாயிற்று ? ஏன் இப்படியெல்லாம் கலங்குகிறீர்கள்?. காரணம் தான் என்ன அதற்கு?.

குந்தி - காரணம் ........... கன்னன்: அவன் ஒருவன்தான் அருச்சுனனுக்கு ஈடான வீரன் என்றா... அன்று!

கண்ணன் - ஆம் தேவியாரே. கன்னனை நினைத்துக் கலங்கியிருந்தால், தங்கள் கலக்கம் நியாயமானதுதான். ஆனால் அந்தக் கலக்கத்தைக் கடப்பதற்கு மிகவும் சுலபமானதொரு மார்க்கம் உண்டு.

குந்தி - சுலபமான மார்க்கமா ?

கண்ணன் - ஆமாம் மிகவும் சுலபமான மார்க்கம்.

குந்தி - என்ன, அருச்சுனன் வெற்றி பெறுவதற்குச் சுலபமான மார்க்கமா?

கண்ணன் - ஆம் தேவியாரே: அந்த மார்க்கமும் தாங்கள் தான், தாங்களாலே தான் அது .......

குந்தி - என்ன என்னாலா ..................... கிழவியைக் கேலிசெய்கிறாயா கண்ணா?

கண்ணன் - இல்லை தாயே; தங்கள் ஒருவரால் மட்டுந்தான் அது சாத்தியமாகும். தாங்கள் தூது போக வேண்டும்.

குந்தி - வேடிக்கைதான் கண்ணா! நீ தூது போய்ப் பேசியும் ஆகாத காரியம் என்னாலா ஆகப் போகிறது ? தூதெல்லாம் பேசியும் அவர்கள் இசைந்து வராதபடியாலேதானே, போரே தொடங்கியிருக்கிறோம், இனியும் என்ன தூது வேண்டியிருக்கிறது, தூது?

கண்ணன் - இல்லை தாயே! கௌரவர்களிடம் இனித்தூது பேசிப்பயனில்லை. கன்னனிடம் தான் தூது போக வேண்டும், அதுவும் தாங்கள் தான் போக வேண்டும்.

குந்தி - என்ன? கன்னனிடம் தூது சென்று நான் இரந்து வேண்டுவதா? அருச்சுனனுக்கு உயிர்ப்பிச்சை தரும்படி வேண்டுவதா? அதுவும் அவன் பகைவனிடமே பணிந்து வேண்டுவதா? தாய் பெண்தான்; பெண் மனம் நோய்யதுதான்: ஆனால், பகைவனிடஞ் சென்று உயிர்ப்பிச்சை கேட்குமளவிற்கு நான் நொய்யவள் இல்லை. உரமும் வரமும் பெற்று உயர்ந்து நிற்கும் பெருவீரர்களை ஈன்ற தாய் நான்.

கண்ணன் - கன்னனுக்கும் தாய் தாங்கள் தானே?

குந்தி - என்ன ? என்ன சொன்னாய் ? கனனன் என் மகனா ? தேரோட்டி மகனல்லவா அவன் ? இது என்ன விளையாட்டு கண்ணா ? ஏன் இந்த வேடிக்கை ? வேடிக்கைக்கும் விகடத்துக்கும் இதுவா நேரம்.?

கண்ணன் - வேடிக்கையுமில்லை ; விளையாட்டுமில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன்.கன்னன் தங்கள் மகன் அருச்சுனனுக்கு அண்ணன். கன்னன் பாண்டவர்களும் சகோதரர்கள்;ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்.

குந்தி - (தனக்குத் தானே கூறுவது போல) பேழையில் வைத்து ஆற்றோடு விட்டேன். இப்போது தான் தொடர்பு சிறிது துலக்கமாகிறது. பிறந்ததும் ஆற்றோடு போகவிட்ட என் பிள்ளை, அபாயங்களுக்கு உட்படாமற் பிழைத்திருக்கிறானா.? அந்தபிள்ளையா இவன் ? கன்னனா அந்தப் பிள்ளை.

கண்ணன் - கதிரவன் அருளால் தங்களுக்குப் பிறந்த திருமகன் தான் தாயே, கன்னன் அவன் தங்கள் மைந்தன். தேரோட்டியிடம் வளர்ந்தானேயொழிய அவன் உண்மையிலே தங்கள் மைந்தன், அங்க தேச அதிபதி ; பார் புகழும் கொடை வள்ளல். அவன் நிச்சயமாகத் தாயின் வேண்டுகோளைப் புறக்கணிக்க மாட்டான்.

குந்தி - நான் வருகிறேன். கண்ணா, இப்பொழுதே நான் போகவேண்டும். என் மூத்த மைந்தனை நான் பார்க்க வேண்டும். கண்ணாரக் காண வேண்டும். கட்டி அணைக்க வேண்டும். நிச்சயமாய் என் மைந்தன் தாய் சொல்லைத் தட்டவே மாட்டான். நான் போகிறேன். போய் அவனிடம்........................( போகப்புறப்படுகிறாள் ).

கண்ணன் - கொஞ்சம் நில்லுங்கள் தாயே ; அவனிடம் ஒரே ஒரு வாக்குறுதி பெறவேண்டும். அதுவும் அருச்சுனனுக்கு இழுக்கு ஏற்படாத வகையில் கன்னனுக்கும் அருச்சுனனுக்கும் போர் நடைபெறும்போது..........

குந்தி - இல்லை போர் நடவாது கன்னனுக்கும் அருச்சுனனுக்கும் போர் நடவாது. நான் தடுத்துவிடுவேன்;

அழுது கெஞ்சி, மன்றாடி, இரந்து வேண்டி.........

கண்ணன் - இல்லை தாயே, அது தங்களால் இயலாத காரியம். ஆசை இருந்தால் முயன்று பாருங்கள். இல்லாத பட்சத்தில் ஒருவரம் கேளுங்கள். கன்னனிடம் நாக பாசத்தை ஒரே ஒரு தடவைக்கு மேல் அருச்சுனன் மீது ஏவ வேண்டாம் என்று கேளுங்கள். இரண்டாவது தடவை ஏவினாலோ ................ அருச்சுனனைக் காணமாட்டீர்கள். ஆகையால், கேளுங்கள் இந்தவரத்தை அவ்வளவும் போதும்.

குந்தி - கண்ணா ! நீ கபடநாடக சூத்திரதாரி. உன் செயல்களுக்கு அர்த்தம் கற்பிக்க என்னால் முடியாது. கன்னனும் அருச்சுனனும் போர்களத்தில் முரணாகதபடி பார்த்துக் கொள்வது என் பொறுப்பு. தாய் என்ற அன்போடும் உரிமையோடும் நான் இதனைச் சாதித்தே தீருவேன். வருகிறேன் கண்ணா, என் மூத்த மகனை நான் உடனே காணவேண்டும் ( போகிறாள் )

கண்ணன் - ( சிறு சிரிப்போடு ) நான் செய்தேன் ; நான் செய்கிறேன் ; நான் செய்வேன்.

## கடிதம்

வெளியூரில் வேலை பார்க்கும் தந்தையாருக்கு பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்புவிழா பற்றிய கடிதம் ஒன்று.

மணிக்கூட்டு வீதி ,
யாழ்ப்பாணம்
10-12-1996

அன்புள்ள அப்பாவிற்கு,

வணக்கம், உங்கள் கடிதமும், காசும் கிடைத்தது. மிகுந்த மகிழ்ச்சி. நான் சுகமாக இருக்கிறேன். நீங்களும் நலமுடன் இருக்க இறைவனைப் பிராத்திக்கிறேன். சென்ற மாதம் 26ம் திகதி எங்கள் பாடசாலையில் பரிசளிப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக எமது ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாநிகழ்ச்சிகள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் பெரியோர்களால் பாடசாலை மண்டபம் நிறைந்து காணப்பட்டது. இவ்விழாவில் மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி ஜனாதிபதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதில் எனக்கு பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்றமைக்காக முதலாம் பரிசு கிடைத்தது. எனது மகனுக்கும் பரிசு கிடைத்தது.

இந்நிகழ்ச்சியை நீங்கள் பார்க்காமல் விட்டது எனக்கு பெரிய கவலையாக உள்ளது. எனினும் எனக்கு கிடைத்த பரிசினை உங்களுக்குக் காட்டுவதற்காக கவனமாக வைத்திருக்கின்றேன்.

இவ்விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் டேப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. நீங்கள் வந்தால் போட்டு பார்க்கலாம். உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும் என்றும் உங்கள் அன்பு மகன் நீங்கள் வாழ்த்துவீர்களென நினைக்கிறேன்.

இப்படிக்கு
என்றும் உங்கள் அன்பு மகன்
எஸ்.பிரகாஷ்

*பிள்ளைகளே, நீங்களும் உங்கள் அப்பாவிற்கு அல்லது அம்மாவிற்கு அல்லது நண்பனுக்கு இது போல ஓர் கடிதத்தை வரையுங்கள்.*

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

## தனிப்பட்டவர்களுக்குக் கடிதம் எழுதுதல் :-

உதாரணம்- I

175/136 A-1, மெலிபன் வீதி,
கண்டி
10 - 01 - 1997

அதிபர்
இந்து மகளீர் வித்தியாலயம்
கண்டி.

கனம் அதிபர் அவர்கட்கு,

எனக்கு இன்று கடுமையான வயிற்று வலி இரண்டு மூன்று தடவைகள் மயங்கி விழுந்துவிட்டேன். தயவு செய்து வீடு செல்வதற்கு தங்களின் அனுமதியை வேண்டி நிற்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
உண்மையுள்ள மாணவி
எஸ்.வசந்தி

உதாரணம்- II

275, பிரதான வீதி
மஸ்கெலியா
21 - 1 - 1996

ஆசிரியர்
தினபூமி பத்திரிகை,
கொழும்பு

கனம் ஆசிரியர் அவர்கட்கு,

தங்கள் பத்திரிகையில் வரும் சிறுவர் மடல் பகுதியைத் தவறாது படித்து வருபவர்களுள் நானும் ஒருவன். சிறுவர் மடல் பகுதிக்கு நானும் ஆக்கங்கள் எழுத விரும்புகிறேன். பிரசுரிப்பீர்களா ? என்பதை தயவு செய்து எனக்கு உடனடியாக அறியத்தருமாறு அன்புடனும் பணிவுடனும் வேண்டுகிறேன் - நன்றி.

இப்படிக்கு
உண்மையுள்ள
மாணவன்
ஏஸ்.நாதன்

*பிள்ளைகளே நீங்களும் இது போல் கடிதங்கள் பலவற்றை எழுதிப் பழகுங்கள்.*

***சிகிரியா மலைக்குச் சுற்றுலா சென்ற காட்சியை வர்ணித்து தனது நண்பிக்கு எழுதிய கடிதத்தைப் பாருங்கள்.***

சந்தனக்கூடல்
நேகம்பஹ
3-2-97

அன்புள்ள நண்பன் அமீனுக்கு,

நான் நலமேயிருக்கிறேன் நீரும் நலமாயிருக்க இறைவனை வேண்டுகிறேன். சென்ற கிழமை நான் எனது பாடசாலை ஆசிரிய மாணவர்களோடு சிகிரியா மலைக்குச் சென்றேன். அதுபற்றி உமக்கு எழுதுகிறேன் கவனமாகப் படித்து பாரும். நிறைய விடயங்கள் இதில் உண்டு.

சிகிரிய மலையடிவாரத்தைப் பார்த்தால் ஒரு சிங்கம் படுத்திருப்பதைப் போல உள்ளது. இதனாலேயே இதனை சீகிரிய என வழங்குகின்றனர் கோட்டையையும் அரண்மனைகளையும் எதிரியிடமிருந்து பாதுகாக்க கட்டிய இரண்டு அகழிகளைக் கண்டேன். மலையில் ஏற ஏற அங்கு பல குகைகள் காணப்பட்டன. ஒரு பெரிய பாறையில் நீர் தேங்கி நிற்கும் தொட்டியும் காணப்பட்டது. பக்கத்தில் முன்னைய அரசனான காசியப்பனின் வரவேற்பு மண்டபமும் இருந்தது. காசியப்பன் கலை உணர்வு மிக்கவனாதலால் இங்கு பல ஓவியங்களையும் சிற்பங்களையும் செதுக்கியுள்ளான் என ஆசிரியர் கூறினார். 50 அடி உயரத்தில் உட்குழிந்த குகையின் சுவர்கள் கண்ணாடி போல பளபளப்பாக இருந்தது மறுபக்கத்தில் மலரேந்திய மங்கையர்கள் பலரின் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. இவை 1500 ஆண்டுகள் சென்ற பின்பும் நிறம் மாறாமல் இருப்பது எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது.

அடுத்த ஆச்சரியம் சிங்கத்தின் முன்னங்கால்களிடையே படிக்கட்டுக்கள். அதில் இறங்கவே பயமாக இருந்தது. மலையின் மேற்பரப்பில் அழகிய பூஞ்சோலைகள், நீச்சல்குளங்கள் , எல்லாம் இருந்தன. மலையின் உச்சிக்கு மிகவும் சிரமப்பட்டு ஆசிரியரின் உற்சாக வார்த்தைகளால் ஏறிப்பார்த்தபோது அது எவ்வளவு பெரிய உயரத்தில் உள்ளதெனத் தெரிந்தது. பழைய கோட்டை கொத்தளங்கள் , அகழிகள், குளங்கள் எல்லாம் நன்றாகத் தெரிந்தது.

அடுத்து ஆசிரியர் இந்த ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களை பின்பற்றியவை. அஜந்தாவில் மலைகளைப் குடைந்து குகைகள் அமைத்தனர். குகைச்சுவரில் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளது. அஜந்தா இந்தியாவிலுள்ள ஓர் இடமாகும். சித்திரங்கள் புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன என ஆசிரியர் கூறினார். எல்லா வற்றையும் பார்த்து அறிந்த நாம் பிற்பகலில் வீட்டை அடைந்தோம்.

நீரும் இந்த சுற்றுலாவில் கலந்து கொள்ளாதது மிக மிகக் கவலை. வசதிப்பட்டால் எப்படியாவது இந்த மலையைச் சென்று பார்க்கத் தவற வேண்டாம். வேறு விபரம் இல்லை. இத்துடன் முடிக்கிறேன்.

வணக்கம்.

இப்படிக்கு
அன்பு நண்பன்
இஸ்மயில்

## விளம்பரங்கள், விளம்பரம் பற்றிய உரையாடல்.

இந்த விளம்பரத்தைப் பாருங்கள் : படியுங்கள் படித்து விட்டீர்களா ? அப்படியானால் இவ்விளம்பரம் பற்றிய பின்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

**Bright Book Centre (Pvt) Ltd.**

**தபால் மூலம் கல்வி நெறிகள்**

**மொழிக்கல்வி**

ஆங்கிலம்/ சிங்களம்/ தமிழ் பேச வேண்டும் என்ற விருப்பம் ஆனால் தவறாக பேசிவிடுவோமோ என்ற தயக்கம் இது தானே உங்கள் பிரச்சனை.

90 நாட்களில் ஆங்கிலம்/சிங்களம்/தமிழ் பேச எழுத, வாசிக்க நவீன உளவியல் அடிப்படையில் மிக மிகப் புதுமையான முறையில் மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம் அநேக மாணவர்களின் நன்மதிப்பை பெற்ற பாடநெறியை தபால் மூலம் கற்றுக்கொள்ளலாம்.

**தொழில்முறைப் பாடநெறி**

**METHOD OF BOOK KEEPING**

கடைக்கணக்கு முதல் கம்பனிகணக்கு வரை எழுத தபால்மூலம் கற்றுத்தரப்படும் இந்நெறி பயில்வது மூலம் கணக்கு பரிசோதகர், கணக்கு விகிதர், கணக்கு பதிவாளர், கணக்காளர் ஆகிய தொழில்களை மேற்கொள்ள கூடியதாக இருக்கும்.

**ஆண்டு-5 புலமைப்பரிசில் முன்னோடி பயிற்சி**

1996, 1997 ஆண்டில் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான முன்னோடி பயிற்சிநெறி தபால் மூலம் நடைபெறுகின்றது.

**G.C.E (O/L) முன்னோடி பயிற்சி**

கல்விப்பொதுத் தராதரப் பத்திர (O/L) பரீட்சைக்கு முன்னோடி பயிற்சியாக "கல்வி மஞ்சரி" வெளிவருகின்றது. கல்விமஞ்சரி இதழ் 3ல் 1995ம் ஆண்டு தமிழ் மொழி இலக்கியம், விவசாய விஞ்ஞானம்,ஆகியவற்றின் வினா விடை உண்டு.

பாடநூல்கள் : **ஆண்டு 4 புதியபாடத்திட்ட நாமும் சுற்றாடலும் ( A/L) கான தமிழ்மொழிப் பாடநூல்கள், இந்து நாகரீகம், பொருளாதாரம் , அரசியல் விஞ்ஞானம், G.A.Q பாடநூல்கள் வாலிவதைபடலம், கானல் வரி பத்மாவதி சரிதம், கோடை, வெளி வந்துள்ளன.**

**Bright Book Centre (Pvt) Ltd.**
*S-27, First Floor, P.O.Box - 162*
*Colombo Central Super Market Complex,*
*Colombo - 11. T.P. 434770*

1. இவ் விளம்பரத்தை யார் அறிவித்து இருக்கிறார்கள் ?

.....................................................................................

2. யாருக்காக இந்த விளம்பரம் எழுதப்பட்டுள்ளது.?

.....................................................................................

3. எந்த இடத்திலிருந்து இந்த விளம்பரம் அனுப்பப்பட்டுள்ளது?

.....................................................................................

4. இதிலுள்ள புத்தகங்களின் பெயர்கள் 5 எழுதுக.

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

5. இந்த விளம்பரத்திலுள்ள சொற்கள் கூடுதலானவையா? குறைந்தளவினதாயதா ?

.....................................................................................

.....................................................................................

**சவூதி அரேபியா உடனடியாக புறப்படலாம்**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்**

சிறந்த சப் ஏஜன்ட்மார்களைத் தெரிவு செய்து அரேபியாவுக்கு எமது சொந்த [illegible]லவில் விடுமுறையை கழிக்கவோ அல்லது புனித உம்ரா செய்யவோ அனுப்பி வைப்போம்

இரு [illegible]சாப்தங்களுக்கும் மேலாக சவூதி அரேபியாவில் அநுபவம் பெற்ற

**ZAG ZOOG**
**H.A.Z. RECRUITMENT BUREAU**
**JEDDAH.** மூலமாக

பின்வரும் வேலை வாயப்புக்களை இலங்கையின் பிரபல முன்னணி நிறுவனமான

**ARAB LANKA (REHAB) PVT. LTD.**

*வழங்குகிறது.*

**மிகச் சிறந்த சம்பளத்துடன் கூடிய அரிய வேலை வாய்ப்புக்கள்.**

| | |
|---|---|
| ஹவுஸ் மேட்ஸ் | - சம்பளம் 500 முதல் 600 சவூதி ரியாழ் வரை |
| ஹவுஸ் டிரைவர்ஸ் | - சம்பளம் 600 முதல் 700 சவூதி ரியாழ் வரை. |

தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட, மற்றும் சகல வசதிகளும் எமது நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்படும்.

பிள்ளைகளே இந்த விளம்பரத்தைப் பாருங்கள். நன்கு படித்தபின் இதற்குரிய வினாக்களை நீங்களே தேர்ந்து எடுத்து விடைகளையும் எழுதுங்கள்.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

**3.2.2 மௌன வாசிப்பின் பல்வேறு திறன்களை வகுத்துக் கொள்ளல்.**

# உடைகள்

## உரை நடைப்பகுதி

நாங்கள் உடைகள். நாகரீகம் அடைந்த இந்தக் காலத்து உடைகள். நாங்கள் உலகத்தின் மூலை முடுக்கெங்கும் பரந்து வாழ்கின்றேம். மிருகங்களும் பறவைகளும் எங்களைப் பயன்படுத்துவதில்லை. மனிதனே எங்களை அணிந்து தன்னை அழகுபடுத்துகிறான். அதனால், மனிதன் எங்கெல்லாம் வாழ்கிறானோ, அங்கங்கெல்லாம் நாங்களும் வாழுகின்றோம் அல்லும் பகலும் அவனோடு ஒட்டி உறவாடி, அவனுக்குச் சேவை செய்கிறோம். சேவை செய்து, அவனையும் மகிழ்வித்து நாங்களும் மகிழ்கிறோம் அதுவே எங்கள் வாழ்க்கை.

எங்கள் குடும்பம் மிகப் பெரியது, எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் பல பல வகையினர்! பல பல பெயரினர்: வேட்டி, சால்வை, சட்டை, சேலை, சாரம், பாவாடை, காற்சட்டை என்பன அவர்களின் பெயர்களிற் சில. அன்றியும் அவர்கள் பல பல நிறத்தினர், பல பல வடிவத்தினர். அவர்களிற் பெரும்பாலோர் பருத்திப் புடைவையால் ஆன உடம்பினர். அவர்கள் பெறுமதி குறைந்தவர்கள் சாதாரண மக்களாலும் வாங்கப்படக் கூடியவர்கள்.

(1) மேலே உள்ள உரை நடைப்பகுதி மூலம் அறிவது யாது ?

.......................................................................................................................

(2) உடையைப் பயன்படுத்தாதவை எவை?

.......................................................................................................................

(3) உடைகளின் பெயர்கள் சிலவற்றை எழுதுக.

.......................................................................................................................

(4) பெறுமதி குறைந்தவர்களின் பெயர் என்ன?

.......................................................................................................................

(5) உடைகளால் மனிதர்கள் அடையம் பயன்கள் யாவை?

.............................................................................................................................

வசனம் அமைக்குக

1. மூலை முடுக்கு -.............................................................................................

2. ஒட்டி உறவாடி -.............................................................................................

3. அல்லும் பகலும் -.............................................................................................

4. சேவை -.............................................................................................

5. மகிழ்ச்சி -.............................................................................................

*செஞ்சோற்றுக் கடன் நாடகத்தை நன்றாக படித்த பின் கீழ் காணும்* **வினாக்களுக்கு விடை தருக.**

1. குந்தி தேவி கண்ணனிடம் செல்லக் காரணம் யாது?

.............................................................................................................................

2. கேட்போர் இயல்பு அறியாது பேசுவதாக குந்திதேவி "கேலி செய்கிறாயா கண்ணா" எனக் கேட்க காரணம் யாது ?

.............................................................................................................................

3. குந்தி தேவி உயர்ந்த தாய் என நிருபிப்பது எந்த வாக்கியம்?

.............................................................................................................................

4. குந்தி தேவி தனக்குள் நினைக்கும் வாக்கியம் யாது?

.............................................................................................................................

5. கண்ணனை ஒரு கபட நாடக சூத்திர தாரி எனக் கூறக்காரணம் யாது?

.............................................................................................................................

## 3.2.3 விளங்கிக் கிரகித்து துலங்கலுக்காக வாசித்தல்

### விளம்பரங்கள், அறிவுறுத்தல்கள், அழைப்பிதழ்களை கிரகித்தல்

நீங்கள் பலவித அழைப்பிதழ்களைப் பார்த்திருக்கிறீர்கள் தானே? திருமண அழைப்பிதழ், பிறந்தநாள் அழைப்பிதழ், கலை விழா அழைப்பிதழ், திருவிளக்கு பூஜை அழைப்பிதழ், சமய அழைப்பிதழ்கள் போன்றபல வகைகள் அவற்றில் காணப்பட்டனவா ? நீங்கள் அவ்வழைப்பிதழ்களைக் கவனமாக வாசியுங்கள். அழைப்பிதழ் கள் கிடைக்காவிட்டால் அவற்றை தேடி எடுத்து அவற்றிலுள்ள விடயங்களை வாசித்துப் பாருங்கள்.

உதாரணத்துக்கு கீழே சில அழைப்பிதழ்கள் இடம்பெற்றுள்ளன அவற்றைப் படித்து பாருங்கள்.

# திருவிளக்கு பூஜை

**இன்று மாலை 4 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருவிளக்கு பூஜையும் மாதாந்திர பஜனையும் நடைபெறும்**

அவர்தம் கைப்பட அர்ச்சனை பண்ண விரும்பும் பக்மதர்கள் இலவச அனுமதிச் சீட்டு பெறவேண்டும் இலவச அனுமதிச் சீட்டு 3.30 மணிக்கு மண்டபவாயிலில் வழங்கப்படும்.

பக்தர்கள் அனைவரும் நேரத்துக்கு வருகை தந்து பூஜையில் கலந்து சிறப்பித்து சிறப்புப் பெற்றுச் செல்லும்படி கேட்டுக்கொள்கிறோம்.

① இத் திருமண அழைப்பிதழ் யாரால் அனுப்பப்பட்டுள்து?

..............................................................

② மணமக்களின் பெயர்களை தருக ?

..............................................................

③ மணமகன் பார்க்கும் வேலை யாது ?

..............................................................

④ திரு விளக்குப் பூஜை எத்தனை மணிக்கு நடைபெறும் ?

..............................................................

⑤ இலவச அனுமதி சீட்டு வழங்கப்படும் இடம் யாது ?

..............................................................

## பிறந்த நாள் அழைப்பிதழ்

(22.04.1997)

இறைவனின் கடாட்சத்தினால் செல்வன். அ·்.ப்ராஜ் அயூப் (அமீன்) யாழ்ப்பாணம் எம்.ஒ.வீதியைச் சேர்ந்த அயூப் தம்பதிகளின் செல்வ புதல்வன் அ·்.ப்ராஜ் தனது 8வது பிறந்த நாளை 22-04-1997 அன்று சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறார். அன்று பிற்பகல்4 மணிக்கு நடைபெறும் சிறப்புவிருந்தில் கலந்து சபையைச் சிறப்பித்து அவரை வாழ்த்துமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். நன்றி. இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி.அயூப் தம்பதிகள்
10, எம்.ஒ.லேன்
யாழ்ப்பாணம்.

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் ,

நிகழும் மங்களகரமான தாது வருஷம் ஆவணிமாதம் 18ம் நாள் (12.09.97) சனிக்கிழமை காலை 9.30 முதல் 10.15 வரை உள்ள அத்த நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபயோக சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| திரு.திருமதி.ஆறுமுகம் ஆசாரி அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன் | திரு.திருமதி.சுந்தரமூர்த்தி ஆசாரி அவர்களின் புதல்வி திருநிறை செல்வி |
| **புவனேந்திரன்** | **சசிகலா** |
| அவர்களுக்கும் (அக்கௌண்டன் - யாழ்) | அவர்களுக்கும் (ஆசிரியை-தாளையடி) |

இறைவன் திருவருள் கொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பம் சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறும், வரவேற்புபசார விருந்திலும் கலந்து சபையைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்*

| | |
|---|---|
| திரு.திருமதி.ஆறுமுகம் குடும்பத்தார் 30, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் | திரு.திருமதி.சுந்தரமூர்த்தி குடும்பத்தார் 21,கங்கா வீதி, தாளையடி. |

1. பிறந்த நாள் எத்தனையாவதாக உள்ளது ?

..............................................................

2. பிறந்த நாளை எந்த ஊரில் கொண்டாடுகிறார்கள்?

..............................................................

3. அழைப்பிதழ் யாரால் அனுப்பப்பட்டுள்ளது ?

..............................................................

## விநாயக
## சதுர்த்தி பூஜை

நாளை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஸ்ரீ விநாயக பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனை நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

பக்தர்கள் அனைவரும் அவர்தம் கைகளினால் ஸ்ரீ விநாயக பெருமானுக்கு அபிஷேகம் பண்ணும் பாக்கியம் உண்டு. அபிஷேகத்திற்குரிய பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்த்ர்கள் அனைவரும் வருகை தந்து பூஜையில் கலந்து கடைசிவரை இருந்து சிறப்பித்து சிறப்புப் பெற்று செல்லும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*அனைவரும் வருக !*
*இடர் நீங்கி இன்பம் பெறுக !*
*ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமி மிஷன்*

1. விஷேட அபிஷேக ஆராதனை யாருக்காக நடாத்தப்படுகின்றது?

.....................................................................

2. இவ்வழைப்பை அனுப்பியவர்கள் யாவர் ?

.....................................................................

3. விநாயக பெருமானுக்கு எதனால் அபிஷேகம் பண்ணுவார்கள்?

.....................................................................

4. எத்தனை மணிக்கு பூஜை நடைபெறும் ?

.....................................................................

5. எந்த இடத்தில் பூஜை நடைபெறுவதாக இதில் எழுதப்பட்டுள்ளது ?

.....................................................................

## செய்தி அறிக்கை , நிகழ்ச்சி நிரல்

இது தொலைக் காட்சி சேவை வழங்கும் நிகழ்ச்சி முன்னோட்ட அறிவிப்புகளாகும். இந்த நிகழ்ச்சிகளை நன்கு அவதானித்துப் படியுங்கள். பின் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தாருங்கள்.

| ஞாயிறு | ரூபவாஹினி | | திங்கள் |
|---|---|---|---|
| 6.51 | நிகழ்ச்சி ஆரம்பம் | 5.10 | நகைச்சுவைச் சித்திரம் |
| 6.57 | நிகழ்ச்சி முன்னோட்டம் | 5.25 | விலங்குகள் தொடர்பான தகவல் நிகழ்ச்சி |
| 7.00 | ஆயுபோவன் நிகழ்ச்சி | | |
| 9.30 | மானவ வாரன (சிங்கள நாடகம் ) | 5.50 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| | | 6.00 | இசைக்கருவிகள் |
| 10.00 | புவியின் உயிரினங்கள் ( விவரணச் சித்திரம்) | 6.30 | செய்திகள் ( தமிழ் ) |
| | | 6.50 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 11.00 | ஆயுபோவன் | 7.00 | செய்திகள் (சிங்களம்) |
| 12.30 | விஞ்ஞான நிகழ்ச்சி | 7.25 | பஹுசர-சிங்கள இசை நிகழ்ச்சி |
| 1.00 | 'பட்ஜி' விவரணச் சித்திரம் | | |
| 1.10 | ஆங்கில நாடகம் | 8.00 | செய்திகள் ( சிங்களம் ) |
| 2.00 | சிவரஞ்சனி (தமிழ் நாடகம்) | 8.35 | அம்மய் தாத்தாய் ( சிங்கள நாடகம் ) |
| 2.30 | பொன்மாலைப் பொழுது | 9.10 | ரூ ரச ரூ |
| 3.00 | கிம்ஹானெ சிஹினய (சிங்கள நாடகம்) | 9.45 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 3.30 | விஞ்ஞான நிகழ்ச்சி | 10.05 | நாளைய நிகழ்ச்சி (முன்னோட்டம்) |
| 4.15 | சொற்களும் படங்களும் ( சிறுவர் நிகழ்ச்சி ) | 10.10 | சுகாதார நிகழ்ச்சி |
| 4.30 | சிறுவர் நிகழ்ச்சி | 10.20 | துப்பறியும் நிகழ்ச்சி ( ஆங்கிலம் ) |
| 5.00 | செய்திகள் (சிங்களம் ) | 11.10 | ஒளிபரப்பு முடிவு |

1. சிறுவர் நிகழ்ச்சி எந்த நேரத்தில் ஆரம்பமாகி எந்த நேரத்தில் முடிவுறுகிறது?

.....................................................................

.....................................................................

2. 9.15க்கு நடைபெற விருக்கும் நிகழ்ச்சி எது?

.....................................................................

4. நகைச்சுவைச் சித்திர நிகழ்ச்சி காலையிலா மாலையிலா நடைபெறவுள்ளது ?

.....................................................................

5. எம்.ரி.வி ஒளிபரப்பில் சாட் ஷோ இசை நிகழ்ச்சி நடைபெறும் நேரம் எது ?

.....................................................................

திங்கள் கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சி முன்னோட்டம் பற்றி ஓர் அறிக்கை தயாரிக்குக.

.....................................................................

.....................................................................

.....................................................................

வானொலி நிகழ்ச்சியின் குறைபாடுகள் பற்றிய அறிக்கையைப் பார்த்து அதே போன்று தொலைக்காட்சி நிலையத்திறக்கு அறிக்கை எழுதவும்.

15-02-97 அன்று நான் வானொலி நிகழ்ச்சியைக் கேட்டேன். காலை 5 மணிக்கு நற்சிந்தனையுடன் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. நிகழ்ச்சியில் அடிக்கடி விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுவதால் நிகழ்ச்சிகள் இடை நடுவில் கேட்கமுடியாது உள்ளது மேலும் சிறுவர் நிகழ்ச்சிக்கு அதிக நேரத்தை ஒதுக்கி மாணவர்கள் பயனடையக் கூடிய முறையில் பாடல், கதை , கட்டுரை , கவிதை , கடிதங்கள் போன்றவைகளையும், பழமொழிகள், பொன்மொழிகள் போன்றவற்றையும் ஒளிபரப்புமாறு நிகழ்ச்சி அமைப்பாளரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிள்ளைகளே, நீங்களும் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கேட்டிருக்கிறீர்கள்தானே. மேற்கூறியது போன்று உங்கள் சொந்த ஆக்கத்தில் ஒரு அறிக்கை ஒன்றை தயாரியுங்கள்.

❶ தொலைக்காட்சி அறிக்கை

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

❷ வானொலி சிறுவர் மலர்

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

கீழ்க்காணும் கவிதையை வாசியுங்கள்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடேனும் பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே - எங்கள்.

வேதம் நிறைந்த தமிழ் நாடு - உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு - நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல் - இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு

## கதை - மருந்தும் விருந்தும்

அந்த வேலியோரம் படுத்துக் கிடந்த ஒரு பசு அது காதுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டது. வாலையையும் விசுக் விசுக் கென்று வீசியடித்தது. பெருமூச்சு விட்டுக் கொண்டு "அம்பே" என்றது. எங்கிருந்தோ பறந்த வந்த ஒரு காகம் "அக்கா அக்கா" என்றது. பசு அதனை நிமிந்து பார்த்துக் கண்ணைச் சிமிட்டியது. என்ன அக்கா ? என்று காகம் கேட்க, "என் வேதனை என்னோடு உனக்கேன் அதைச் சொல்ல ? என்று கேட்டது பசு "சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்" என்றது காகம். "துரும்பாவது உதவும் நீ எதற்கு உதவுவாய்? அழுக்கு காக்கை " என்று ஏளனம் செய்தது பசு. காகம் எதுவுமே பேசவில்லை. பசுவின் முதுகில் மெல்ல இறங்கியது. பசுவின் உடம்பு முழுக்க பரிசோதித்துப்பார்த்து , பசுவின் வேதனையை புரிந்து கொண்டகாக்கை தனது சொண்டைக் கொண்டு சிகிச்சை செய்ய ஆரம்பித்தது. தன் வேதனை குறைய குறைய ஆடாமல், அசையாமல் அமைதியாகக் கிடந்தது. பசு இறுதியில் பசுவின் காதுக்குள் தன் சொண்டை விட்டு மருந்து செய்தது காக்கை. அப்பாடா இப்போதுதான் நிம்மதி என் வலியெல்லாம் பறந்து விட்டது. நீ சிறந்த மருத்துவன் இதை அறியாமல் ஏளனம் செய்து விட்டேன். மன்னித்துக் கொள். உனக்கு என்ன கைமாறு செய்வேனோ அறியேனே என்றது பசு "அக்கா, உனக்குத் தெரியாமலே செய்து விட்டாயே. எனக்கு இன்றுதான் நல்ல விருந்து அக்கா ! அக்கா என்று கூறிச் சிரித்துக் கொண்டே பறந்து போனது காகம்.

காகத்திற்கு என்ன விருந்து கிடைத்தது ? சொல்ல முடியுமா.

## 3.3. சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல்

### 3.3.1 வாசிக்கும் புதிய சொற்களை இனங்காணல்.

புதிய சொற்தொகுதி சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொல்லை தமிழ் அகராதியைப் பார்த்து எழுதுக.

1. திரளை -..............................................
2. உற்சாகம் -..............................................
3. வியப்பு -..............................................
4. விபரம் -..............................................
5. பாரிடம் -..............................................
6. தந்திரம் -..............................................
7. மந்திரம் -..............................................
8. சாதம் -..............................................

50. கொய்தல் -..............................................
51. சந்தர்ப்பம் -..............................................
52. சுபாவம் -..............................................
53. சிந்தை -..............................................
54. விந்தை -..............................................
55. வளம் -..............................................
56. நேயம் -..............................................
57. பூரிப்பு -..............................................

9. விடுதி -..................................................

10. புனிதம் -..................................................

11. மார்க்கம் -..................................................

12. திறமை -..................................................

13. சம்மதம் -..................................................

14. பள்ளம் -..................................................

15. பட்சணம் -..................................................

16. அந்தரம் -..................................................

17. கீதம் -..................................................

18. நாழிகை -..................................................

19. சோடி -..................................................

20. அலுப்பு -..................................................

21. உவர்ப்பு -..................................................

22. கனிந்து ..................................................

23. அலுவல் -..................................................

24. விண்ணப்பம் -..................................................

25. சேவை -..................................................

26. மரவுரி -..................................................

27. பெறுமதி -..................................................

28. வனம் -..................................................

29. அம்பு -..................................................

30. கடுஞ்சொல் -..................................................

31. சாரல் -..................................................

32. இறுமாப்பு -..................................................

33. பகிரங்கம் -..................................................

34. ஆண்மை -..................................................

35. ஈகை -..................................................

36. மிடிமை -..................................................

37. வெளவுதல் -..................................................

38. ஆவல் -..................................................

39. கரகோசம் -..................................................

40. மறுமொழி -..................................................

41. அடியார் -..................................................

42. புதுமை -..................................................

58. பக்குவம் -..................................................

59. பணிதல் -..................................................

60. ஆசி -..................................................

61. ஆனந்தம் -..................................................

62. தாகம் -..................................................

63. கருணை -..................................................

64. உரிமை -..................................................

65. பிரச்சினை -..................................................

66. மாற்றான் -..................................................

67. அல்லல் -..................................................

68. ஓவியம் -..................................................

69. ஆசனம் -..................................................

70. நுட்பம் -..................................................

71. நடனம் -..................................................

72. உருவம் -..................................................

73. மறை -..................................................

74. வித்தகர் -..................................................

75. தொழுகை -..................................................

76. வாஞ்சை -..................................................

77. தூரிகை -..................................................

78. அக்கறை -..................................................

79 சங்கடம் -..................................................

80. பாவி -..................................................

81. பரிவு -..................................................

82. பொழில் -..................................................

83. தோகை -..................................................

84. வேணி -..................................................

85. குடபால் -..................................................

86. அருக்கன் -..................................................

87. பொன்னுலகு -..................................................

88. மங்குதல் -..................................................

89. மாளிகை -..................................................

90. உற்சாகம் -..................................................

91. பிரசித்தம் -..................................................

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43. | உத்தரீயம் | -.............................................. | 92. | தாகம் | -.............................................. |
| 44. | பூதலம் | -.............................................. | 93. | கனகம் | -.............................................. |
| 45. | யோசனை | -.............................................. | 94. | பாறங்கல் | -.............................................. |
| 46. | சன்மானம் | -.............................................. | 95. | பரன் | -.............................................. |
| 47. | கிளைஞர் | -.............................................. | 96. | அல்லுதல் | -.............................................. |
| 48. | அகம் | -.............................................. | 97. | உவப்பு | -.............................................. |
| 49. | மட்டி | -.............................................. | 98. | விண்டலம் | -.............................................. |

## எதிர் கருத்து சொற்களை எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புதிய | -.............................................. | 32. | உடன்பாடு | -.............................................. |
| 2. | கடினம் | -.............................................. | 33. | உடுத்தல் | -.............................................. |
| 3. | ஆனந்தம் | -.............................................. | 34. | உயரம் | -.............................................. |
| 4. | அப்பால் | -.............................................. | 35 | உயர்வு | -.............................................. |
| 5. | விற்றல் | -.............................................. | 36. | உயர்திணை | -.............................................. |
| 6. | அண்மை | -.............................................. | 37. | உரக்க | -.............................................. |
| 7. | அதர்மம் | -.............................................. | 38. | உள்ளே | -.............................................. |
| 8. | அமைதி | -.............................................. | 39. | உள்ளூர் | -.............................................. |
| 9. | அருபம் | -.............................................. | 40. | உறக்கம் | -.............................................. |
| 10. | அழகு | -.............................................. | 41. | உற்பத்தி | -.............................................. |
| 11. | அன்பு | -.............................................. | 42. | எண்ணம் | -.............................................. |
| 12. | ஆக்கம் | -.............................................. | 43. | எண்ணி | -.............................................. |
| 13. | இகழ் | -.............................................. | 44. | எளிமை | -.............................................. |
| 14. | இசைதல் | -.............................................. | 45. | எளிது | -.............................................. |
| 15. | இசைவு | -.............................................. | 46. | எழில் | -.............................................. |
| 16. | இணைப்பு | -.............................................. | 47. | ஒருமைப்பாடு | -.............................................. |
| 17. | இணைந்து | -.............................................. | 48. | ஒளி | -.............................................. |
| 18. | இயற்கை | -.............................................. | 49. | ஒற்றுமை | -.............................................. |
| 19. | இயன்ற | -.............................................. | 50. | ஒழுக்கம் | -.............................................. |
| 20. | இரக்கம் | -.............................................. | 51. | ஓலம் | -.............................................. |
| 21. | இளமை | -.............................................. | 52. | ஓய்வு | -.............................................. |
| 22. | இளவல் | -.............................................. | 53. | ஓரம் | -.............................................. |
| 23. | இறக்கம் | -.............................................. | 54. | கடுமை | -.............................................. |
| 24. | இறந்த | -.............................................. | 55. | கர்வம் | -.............................................. |
| 25. | இறப்பு | -.............................................. | 56. | கலந்து | -.............................................. |
| 26. | இறுதி | -.............................................. | 57. | கவனம் | -.............................................. |

27. இறுக்கி -............................................

28. இனிமை -............................................

29. ஈட்டி -............................................

30. ஈதல் -............................................

31. உச்சி -............................................

58. காடு -............................................

59. நற் குணம் -............................................

60. கூர்மை -............................................

61. சண்டை -............................................

62 சாதுவான -............................................

## எதிர் சொற்களை எழதுக

1. சான்றோர் -............................................

2. சிறந்த -............................................

3. சிறு -............................................

4. சிறுமை -............................................

5. சிற்றூர் -............................................

6. சிற்றாறு ............................................

7. சுத்தம் -............................................

8. செருக்கு -............................................

9. செழுமை -............................................

10. சேர்ந்து -............................................

11. சேமித்து -............................................

12. சோகம் -............................................

13. சோர்வு -............................................

14. சோம்பல் -............................................

15. தக்க -............................................

16. தன்னூர் -............................................

17. தெளிவு -............................................

18. தொடங்கி -............................................

19. தொடங்குதல் -............................................

20. தொடர்பு -............................................

21. தொலைவு -............................................

22. தோற்றம் -............................................

23. நஞ்சு -............................................

24. நன்மை -............................................

25. நாட்டம் -............................................

26. நாட்டல் -............................................

32. நோய் -............................................

33. பயனுள்ள -............................................

34. பரந்து -............................................

35. பழமை -............................................

36. பாதி -............................................

37. பாராட்டு -............................................

38. பின்னர் -............................................

39. பிரிவு -............................................

40. பெருகும் -............................................

41. பெரியோர் -............................................

42. போர் -............................................

43. மணம் -............................................

44. மதித்தல் -............................................

45. மறக்க -............................................

46. மறுப்பு -............................................

47. மக்கள் -............................................

48. மானம் -............................................

49. மானிடர் -............................................

50. மாதர் -............................................

51. மிகுதி -............................................

52. மிருது -............................................

53. மின்னல் -............................................

54. முன்னணி -............................................

55. மூத்தோர் -............................................

56. மென்மை -............................................

57. மேதை -............................................

27. நிகழ்ந்த -...............................................

28. நிறைவு -...............................................

29. நிறை -...............................................

30. நுனி -...............................................

31. நெருக்கம் -...............................................

58. வலக்கை -...............................................

59. வரவு -...............................................

60. வளமை -...............................................

61. வாங்கி -...............................................

62. வாழ்தல் -...............................................

### 3.3.3 பல சொல் ஒரு பொருள்

கீழேயுள்ள பல சொற்கள் குறிக்கும் ஒரு பொருளின் பெயரை எழுதுக.

1. அகம், இல்லம், இல் , கிருகம்
2. அம்புலி , திங்கள் , மதி, நிலா
3. கதிரவன், ஞாயிறு , பகலவன்
4. அன்னை, மாதா , தாய், தாயார்
5. எழில், வனப்பு, வடிவு , கவின்
6. தாள், அடி , கால்
7. சிசு , சேய் , குழவி, மகவு , பிள்ளை
8. தோழர், உற்றார் , சிநேகிதர்
9. அரவம், ஓசை , தொனி , சப்தம்
10. சுடர், கதிர் , சோதி , பிரகாசம் , வெளிச்சம்
11. அவை, குழு , சங்கம் , சபை
12. சாலை , தடம் , வழி , தெரு
13. இறைவன், ஆண்டவன் , தேவன்
14. மாந்தர், மானிடர், மக்கள்
15. கவிதை, செய்யுள், பண், பா, பாடல்

### ஒரு சொல் பல பொருள்

1. கிழமைகளுள் ஒன்று, மாதம், பிறை
2. கிழமைகளுள் ஒன்று சந்திரன், உலோகம்
3. நீர் நிலை, எண், இயல்பு
4. அளவு, பாதம், செருப்பு, செய்யுள் உறுப்பு
5. மனம் , வீடு , அகங்காரம்
6. கரை , பாலம் , பஞ்சுமெத்தை , வரம்பு

7. பழமை , சூரியன், கடவுள் , திருமால் , மூலம்

8. நீராவி , உயிர், புகை

9. பாட்டு , ஓசை, இனிமை, இணக்கம் , புகழ்

10. இடப்பக்கம் , இளக்காரம் , சந்தர்ப்பம் , இருக்கும்இடம்

11. நோவு , வானிடி, தாக்குகை , ஒலி

12. சுவை, சாறு, மிளகுநீர் , பாதரசம்

## பலசொல் - ஒரு பொருள் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பரிவு , பற்று , நேயம் , பிரிவு | - | அன்பு |
| 2. | ஆவல் , விருப்பம் , அவா | - | ஆசை |
| 3. | யுத்தம், போர் , அமர் , சமர் | - | சண்டை |
| 4. | விழி , நயணம் , நேத்திரம் | - | கண் |
| 5. | களங்கம் , குறை , பிழை , மாசு , தவறு | - | குற்றம் |
| 6. | நியாயம் , தருமம் , நீதி , நேர்மை | - | அறம் |
| 7. | இறைச்சி, புலால் , ஊன் | - | மாமிசம் |
| 8. | ஆதி , ஆரம்பம் , தொடக்கம் | - | முதன்மை |
| 9. | உள்ளம், அகம் , நெஞ்சு | - | மனம் |
| 10. | இன்னல், இடர், அல்லல் , இடும்பை | - | துன்பம் |
| 11. | ஞானம் , விவேகம், புத்தி | - | அறிவு |
| 12. | கானகம், அடவி, வனம், ஆரணியம் | - | காடு |
| 13. | பரவை, ஆழி , சமுத்திரம் | - | கடல் |
| 14. | உறக்கம் , துயில் , நித்திரை , துஞ்சல் | - | தூக்கம் |
| 15. | கஜம் , கரி , வாரணம் , வேழம் | - | யானை |

## 3.3.4 இணைமொழிகள்

கீழ்க்காணும் இணை மொழிகளை வைத்து வாக்கியம் எழுதுக .

குறுக்கும் நெடுக்கும் :..........................................................................................

அதிரும் புதிரும் :..........................................................................................

அங்கும் இங்கும் :..........................................................................................

பத்துப் பத்து :..........................................................................................

சீரும் சிறப்பும் :..........................................................................................

சாக்குப் போக்கு :..................................................................................................................

சீராட்டிப் பாராட்டி :..................................................................................................................

தப்புந் தவறுமாக :..................................................................................................................

நோய் நொடியின்றி :..................................................................................................................

பேரும் புகழும் :..................................................................................................................

காய் கனிகள் :..................................................................................................................

வாடி வதங்கி :..................................................................................................................

நகை நட்டுகள் :..................................................................................................................

வேலை வெட்டி :..................................................................................................................

மூலை முடுக்கு :..................................................................................................................

பொய்யும் புளுகும் :..................................................................................................................

வம்பு தும்பு :..................................................................................................................

கள்ளங் கபடம் :..................................................................................................................

ஆடி அசைந்து :..................................................................................................................

மரம் மட்டைகள் :..................................................................................................................

அல்லும் பகலும் :..................................................................................................................

### 3.3.5 தனிச்சொல் : புதிய சொற்கள் : சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| அகம் | பரன் | வல்லமை |
| இதம் | பணிவு | வீரியம் |
| ஆவல் | பாரிடம் | வையகம் |
| இரதம் | பீடம் | புலமை |
| ஈகை | புகழ் | புனிதம் |
| எழில் | பூங்கா | வனப்பு |
| பூங்கா | மாது | விடுதி |
| நிதம் | மூலிகை | வியப்பு |
| நயம் | மெலிவு | மானம் |
| தாது | மேழி | புலமை |

### புதிய சொற்கள்

கணனி

ஆத்ரீயம்

சிவிகை

பணிமனை


மேற்கொள்

## சுருக்கக் குறியீடுகள்


| | |
|---|---|
| அ.ப | : அரசபணி |
| ம.ப.ப் | : மறுபக்கம் பார்க்க |
| பி.கு | : பிற் குறிப்பு |
| கி.மு. | : கிறீஸ்துவுக்கு முன் |
| கி.பி | : கிறீஸ்துவுக்கு பின் |
| மு.ப | : முற்பகல் |
| பி.ப | : பிற்பகல் |

### 3.3.6 சொல் விளையாட்டு : குறுக்கெழுத்துப் போட்டி : புதிர்கள் விடுகதைகள்

முதலில் கீழ்க் காணும் சொல் விளையாட்டைப்பார்த்து சொல் விளையாட்டு ஆக்கத்தை உருவாக்கவும்




கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பு




இடமிருந்து வலம்

1. இறைவனை இப்படியும் அழைப்பர்
4. இதன் மதிப்பு அதிகம். இதனால் அணிகலன் செய்து அணிவார்கள்

மேலிருந்து கீழ்

1. உறவினருடன் தொடர்பு சிறந்த வழி
2. கீழிருந்து மேலாக சென்றால் வழி திறக்கும்
3. பாகம் பாகமாக இருப்பதை இப்படியும் அழைப்பார். இச் சொல் குழம்பி வருகிறது.

### 3.3.7 அகராதியை பயன்படுத்தும் பழக்கம்

மாணவர்கள் சிறிய தொரு கொப்பியில் அகராதி செய்து பழக வேண்டும். கீழே உள்ள அட்டவணையை நிரப்புக.

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ |
|---|---|---|---|---|---|---|---|---|
| அகதி | ஆகாயம் | இரத்தம் | ஈகை | உடல் | ஊர் | எங்கே | ஏப்பம் | ஐயம் |
| அக்கினி | ஆக்கம் | இராசி | ஈடன் | உணவு | ஊற்று | எடுபிடி | ஏவல் | ஐயோ |
| அட்சயம் | ஆதி | இறகு | ஈடு | உயிர் | ஊன்று | எட்டம் | ஏறல் | ஐவர் |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

## 3.4 கற்றல் முதலிய தேவை கருதி வாசித்தல்

### 3.4.1 மாணவர்கள் நாளாந்தம் காண்பவற்றை தேவை கருதி வாசித்து விளங்கி கிரகித்தல்.

கீழ்க்காணும் விளம்பரங்களை வாசித்து கிரகிப்பது மூலம் கீழே கேட்கப்படும் வினாக்கட்கு விடை தருக.

**நேத்திராலோகத் தைலம்**

சுத்தம்மான எண்ணெய் வகையினால் தயாரிக்கப்படும் இக் கூந்தல் தைலமானது நூறு ஆண்டுகாலம் இலங்கை மக்களால் மாத்திரமின்றி உலக மக்களாலும் பாவிக்கப்படும் அரும்பெரும் தைலமாகும். தலை சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கும் நல்ல நிவாரணம்

1/4 போத்தல் - ரூபா 45.00
( தபாற் செலவு ரூபா 15.00 )
1/2 போத்தல் - ரூபா 87.50
( தபாற் [illegible] ரூபா 15.00 )
முழு போத்தல் - ரூபா 175.00
( தபாற் செலவு ரூபா 16.75 )

V.P.P உண்டு
கலாநிதி டபிள்யூ.கே.ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11
தொலைபேசி - 325095

---

ஸ்ரீ ராம ஜெயம்

கொழும்பு தெஹிவளை நெடுமால் ஸ்ரீ வெங்கடேஷ்வர மகாவிஷ்ணு மூர்த்தி தேவஸ்தானம்

நாளை ஞாயிற்றுக்கிழமை (02-03-97) பகல் 11.00 மணிக்கு ஸ்ரீ வெங்கடேஷ்வர பெருமாளுச்கு விஷேட அபிஷேகம், தீபாராதனை, சகஸ்ரநாம, அர்ச்சனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**

இல.7, விஷ்ணு கோவில் வீதி,
தெஹிவளை
தொலைபேசி இல. 712768

இங்கனம்
திருமதி.N.இராமரத்தினம்
(ஆதீனகர்த்தா)

R.No. 129097

---

*தென் இந்திய புனித யாத்திரை*

**புட்டப்பர்த்தியில் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் ஸ்தலத்தில்**
**குருபூர்ணிமா தினம்**

தென் இந்திய ஸ்தலங்கள் - முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் - திருப்பதி யாத்திரை 15.7.97 தொடக்கம் 27.7.97 வரை

மலைக்கோட்டைப் பிள்ளையார், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, பிள்ளையார் பட்டி, மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, மாங்காடு காமாட்சி, சுந்தரேஸ்வரர், தஞ்சை பெரிய கோவில், கும்பகோணம் வைத்தீஸ்வரன், சீர்காழி, சிதம்பரம், கபாலீஸ்வரர், அஷ்டலஷ்மி, மேல்மருவத்தூர், சமயபுரம், முருகப்பெருமானின் 6 படைவீடுகள், சென்னை நகரம், சென்னை சீரடி சாயி பாபா கோவில் மற்றும் பல ஸ்தலங்கள்.

உபதலைவர்
லயன்ஸ் கிளப் ஒப் கொழும்பு மிட் டவுன்
214/5, மெசெஞ்சர் வீதி, கொழும்பு 12.
போன் : 430300, 688347, 586814,344453,327763

மிகவும் குறைந்த கட்டணம்

" இரட்சிப்பு கர்த்தருடையது ! "

கிருபையினாலே விசவாசத்தைக்
கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது
உங்களால் உண்டானதல்ல, இது
தேவனுடைய ஈவு; ஒருவரும்
பெருமைபாராட்டாதபடிக்கு இது
கிரியைகளினால் உண்டானதல்ல.
யோனா 2:9; எபேசியர் 2:8.9

வேதாகமம்
உங்களுடன்
பேசுகின்றது.
அதனை
வாசியுங்கள்

இலங்கை
வேதாகமச்
சங்கம்
293, காலி வீதி
கொழும்பு - 3.

☪ **புனித ஹஜ் பயணம்** ☪

(இன்ஷா அல்லாஹ்) எமது ஹஜ் குழு குறிப்பிட்ட ஹாஜிகளுடன் (100 பேர் ) எதிர்வரும் 11.4.1997 அன்று புனித க.்.பா நோக்கி புறப்படவுள்ளது.

பதிவுகள் நடைபெறுகின்றன முந்துங்கள்

**விபரங்களுக்கு :-**

*மௌலவி அல்ஹாஜ் S.H.M. அலியார்*

*அல்ஹாஜ் T.ஸருன் பகீரான்*

**ஹிரா டிரவல்ஸ்**
77/1, பிரதான வீதி
கொழும்பு - 11.
தொலைபேசி : 328813, 072-73091

**கேள்வி அறிவித்தல்**
**மூலம் முதல்தர சொத்து விற்பனை**

கீழ்க்கண்ட காணிகளை விற்பனை செய்வதற்காக ஹிடெகி பினான்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் ( இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் நிலையான இடம் வகிக்கும். ) கேள்விகளை கோருகிறது.

| | | |
|---|---|---|
| லேக் ட்ரைவ்<br>ராஜகிரிய<br>15 பேர்ச்சுகள் | ஞானேந்திர மாவத்தை<br>நாவல<br>15.5 பேர்ச்சுகளில் இரண்டு<br>மாடி வீடுகள் | மகரகம நகர்<br>3 காணித்துண்டுகள்<br>ஒவ்வொன்றும் 20<br>பேர்ச்சுகள் கொண்டவை |

வரைபடங்களில் காணிகள் அமைந்துள்ளன இடங்கள் குறிக்கப்பட்டுள்ளது.
காணி உரிமைப்பத்திரம் மற்றும் வரைபடம் என்பவற்றை பரிசீலனை செய்ய முடியும். ஒவ்வொரு காணிக்குமான கேள்விப்பத்திரங்களை கீழே தரப்பட்டுள்ள விலாசத்தில் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூ 100/- செலுத்தி, 1997 பெப்ரவரி 24ஆந் திகதியிலிருந்து 1997 மார்ச் 14ஆந் திகதி வரை எந்தவொரு அலுவலக நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி விற்பனைக்கு" என்ற குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள், கீழ்கண்ட விலாசத்திற்கு 1997 மார்ச் 14ஆந் திகதியன்று அல்லது அதற்க்கு முன்னர் பி.ப.12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அதே தினத்தில் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விச் சபையின் இறுதி முடிவிற்கமையவே காணி விற்பனை இடம்பெறும்
தலைவர் - கேள்விச்சபை
ஹிடெகி பினான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
"டரஸ்ட் ஹவுஸ்",347,யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொலைபேசி : 541419, 440547 ,448801,448238

1. இலங்கை மக்களால் நூறு ஆண்டு காலம் பாவிக்கப்படும் தைலத்தின் பெயர் என்ன ?

.............................................................................................................................................

2. இத்தைலம் பாவிக்கப்படுவதால் ஏற்படும் நன்மை யாது ?

.............................................................................................................................................

3. தென் இந்திய புனித யாத்திரையின் நோக்கம் யாது ?

.............................................................................................................................................

4. வேதாகமம் உங்களுடன் பேசுவது எதனை ?

.............................................................................................................................................

5. புனித ஹஜ் பயணம் புறப்படும் திகதி யாது ?

.............................................................................................................................................

6. வெங்கடேஸ்வர பெருமானுக்கு நடைபெறும் பூசைகள் எவை ?

.............................................................................................................................................

7. சொத்து விற்பனை பற்றி அறிவிக்கும் நிறுவனம் எது ?

.............................................................................................................................................

**3.4.2 கற்றலில் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வாசித்தல், கதைகள், விகடத்துணுக்குகள், பொழுது போக்கு வெளியீடுகள்.**

மாணவி ஒருவர் எழுதிய எனது பொழுது போக்கு பற்றிய கட்டுரையை வாசியுங்கள்.

# எனது பொழுது போக்கு

எனது பொழுது போக்கு கதைபுத்தகங்கள் வாசிப்பது கதைகளைக் கேட்பதில் எனக்கு முதல் ஆசையை ஏற்படுத்தியவர் என் ஆச்சி, அம்மாவின் அன்னை படிக்கவே தொடங்காத சினனஞ்சிறு வயதில் இரவெல்லாம் ஆச்சிக்குப் பக்கத்தில் படுத்தபடி கதை கேட்பது என் வழக்கம். ஆச்சியும் ஒரு ஊரிலே ஒரு ராசா என்று தொடங்கி அலுக்காமல் கதை சொல்வார்.


பாலர் வகுப்பில் எங்கள் ஆசிரியையாய் இருந்த அன்னம்மா டீச்சரும் அழகாக கதை சொல்லுவார். அவரும் எனது கதைப்பித்தை வளர்த்தார். என் மாமா ஒரு எழுத்தாளர். நான் இரண்டாம் வகுப்பிலேயே தட்டு தடங்கில்லாமல் வாசிப்பதை அவர் கண்டார். என்னை ஊக்குவிக்க அவர் பாலர் கதைப் புத்தகங்கள் பலவற்றை வாங்கித்தந்தார்.

எங்கள் பாடசாலையில் சிறுவர்களுக்கென்றே நூல் நிலையப்பிரிவு ஒன்று இருக்கிறது. அங்கு புத்தகங்கள் இரவல் எடுக்கவும் முடியும். அங்கு அதிகமாக புத்தகங்களை இரவல் எடுப்பது நான் தான். பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்து உணவுண்டதும் கதைபுத்தகத்தோடு இருந்தால் உலகையே மறந்து விடுவேன்.

சில வேளைகளில் வாசித்து இடை நடுவில் இருந்தால். அதை வாசித்தபிறகு தான் பாடங்களில் கவனம் செலுத்துவேன். அப்பா என் செயலைப்பார்த்து ஏசுவார். முதலில் படிப்பு, பிறகு தான் கதை வாசிப்பு என்பது அவர் இட்ட சட்டம். இந்தச்சட்டம் நியாயமானது தான். இப்பொழுதெல்லாம் ஓய்வுநேரம் பொழுது போக்காகத்தான் கதைபுத்தகங்களை வாசிக்கிறேன். கதை வாசிப்பதால் என் கற்பனை வளர்கிறது. எழுத்து நடையும் திருந்துகிறது.

பத்திரிகைகளில் வந்த சிறுவர்நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்றுள்ள விடையங்களைப் பார்ப்போம்.

# சிறுவர் நிகழ்ச்சி ( பகுதி )



## ஆங்கிலத்தின் அவசியம்

உலகில் எத்தனை இனங்கள் உள்ளனவோ அத்தனை மொழிகளும் உண்டு எனலாம். சில மொழிகள் பேச்சு வழக்கோடு மாத்திரம் உள்ளன. சில மொழிகள் அவற்றின் பிரதேசத்தின் வழக்கோடு மாத்திரம் உள்ளன. வேறு சில மொழிகள் மிக வளர்ந்துள்ளன ஆனால் ஆங்கிலமோ வளர்ச்சியும் சர்வதேச பிரபல்யமும் பெற்றுள்ள ஒரு பிரத்தியேக மொழியாகும்.

விஞ்ஞானமா, கலைகளா, தொழில்நுட்பமா, வர்த்தகமா, அரசியலா, இலக்கியமா, இன்னமும் எத்தனை துறைகளுண்டோ அவையெல்லாம் ஆங்கிலத்தினாலேயே உலகிற்கு அறிமுகமாகின்றன. ஆங்கிலத்தினாலேயே அத்துறைகளும் வளம் பெறுகின்றன.

ஆங்கில மொழியின் அவசியம் அதிகரிக்க வேறும் காரணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானது அம்மொழியின் செல்வாக்கு உலக கலாசாரங்களிடையே பதிந்துள்ளன. அம் மொழியின் பயன்பாடுமாகும். இம் மொழியினூடாகவே உலகின் நிலைமைகளையும் அறிய வேண்டியுள்ளது. உலகின் பல்வேறு துறைகளிலும் சிறந்த நூல்கள் ஆங்கில மொழியிலேயே உள்ளன. ஏனைய மொழியில் மதிப்பிட முடியாத அறிவுச் சுரங்கங்களையெல்லாம் ஆங்கிலம் ஆழமாக ஆராய்ந்துள்ளது. எனவே அறிவைத்தேடின் ஆங்கிலத்தை தேடு என்றாகி விட்டது. ஆங்கிலத்தைக் கற்றவர்கள் பல்வேறு மொழிகளில் காணப்படும் முத்தான அரிய அறிவுப் பொக்கிஷங்களை அறிய வாய்ப்புண்டு.

பல இன பல் மொழி, பலமத மக்கள் வாழும் இலங்கையில் ஆங்கிலம் ஒரு தொடர்பு மொழியாக வளருகிறது. இது அம்மக்களிடையே புரிந்துணர்வு தேசிய ஒற்றுமை, அமைதி என்பவற்றை ஏற்படுத்தும். அது மாத்திரமல்ல ஆங்கிலம் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் மொழி. மனித சமுதாயத்தை மேம்படுத்தும் மொழி என்றும் கூறுவது மிகையாகாது.

ஆகவே நாம் ஆங்கிலத்தை கற்காமல் புறக்கணிப்பது பல்வகையிலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பதும் உண்மை.

### புகழ் பெற்றவர்களின்ஆயுள் காலம்

| | | |
|---|---|---|
| பாரதியார் | 1882 | - 1921 |
| பாரதிதாசன் | 1891 | - 1964 |
| ஜவஹர்லால் நேரு | 1889 | - 1964 |
| டாக்டர் இராஜேந்திர பிரசாத் | 1884 | - 1963 |
| மாவீரன் நெப்போலியன் | 1769 | - 1821 |
| நைட்டிங்கேள் அம்மையார் | 1820 | - 1910 |
| சேர் ஐசாக் நியூட்டன் | 1642 | - 1727 |
| மைக்கல் பரடே | 1791 | - 1867 |
| லூயி பாஸ்டர் | 1822 | - 1895 |

### கல்வியே கருத்தனம்

கல்வியை கற்றுவரும் பிள்ளை
பாரினில் உயர்ந்து வரும் முல்லை
கள்ளத்தில் கழித்திருந்த நாளை
பிற்காலத்தில் கவலை தரும் மூளை

கற்றவனுக்கு நிகரில்லை பாரில்
கல்லாதவனுக்கு ஏது புகழ் ஊரில்
எத்திசையும் இவன் பெருமை பேசும்
கல்வி இல்லையெனில் சுற்றமும் ஏசும்

வருவதில்லை கல்வி தானாய் - அது
வந்து விட்டால் இனித்திடும் தேனாய்
கொடுப்பதால் ஊறிடும் நீர் ஊற்றாய் - அதை
பெறுவதால் வளர்ந்திடும் அறிவு நூற்றாய்

கல்வியே முகத்திற்கழகு
கனிவாய் நீயும் பேசிப் பழகு
செல்வம் எப்பொழுதும் பழது - அது
சென்று விடும் ஒரு பொழுது


## தென்னை மரம்

உயர்ந்து வளரும் தென்னை
ஊற்றும் அதிக நீரை
உறிஞ்சிக் கொள்ளும் தென்னை
வழங்கும் நமக்கு தேங்காய்!

ஓடு நீக்கி விட்டால்
உள்ளிருக்கும் தண்ணீர்,
குடுமி வைத்த தேங்காய்
குலுக்கும் போது தெரியும்!

ஒட்டியுள்ள நாரை
ஒன்று சேர்த்துத் திரித்தால்
கட்டுகின்ற வடமாய்
கைக்கு வந்து சேரும்!

உடைக்கும் போது அலறும்
அரைக்கும் போது அமைதியுறும்
கடைகள் எங்கும் கிடைக்கும்
கடவுள் பூசைக்குதவும் !



அறிவொளி

# வாரமலர்

## மீளப்படித்தல் வழிகாட்டி

பிள்ளைகளே இது ஒரு பத்திரிகையாகும். இதில் பெரிய எழுத்துக்களில் உள்ள விடயங்கள் தலைப்புச் செய்திகளாகும். அதன் கீழுள்ள விடயங்கள் தலைப்பின் சாராம்சமாகும்

### பூக்களில் நறுமணம் வீசக் காரணம் ?

வசந்தகாலத்தில் பூங்கா வழியாகச் செல்ல வாய்ப்புக் கிடைத்தால் விதம் விதமான மலர்களின் நறுமணத்தை நுகர்ந்து நமது மனம் உவகையடைகிறது. இயற்கை அழகும் நறுமணமும் தேனும். பூக்களில் நிரம்பியிருப்பது மனிதனுக்காக என்று சிலர் நினைக்கலாம். ஆனால் உண்மை இதுவல்ல. பூச்சியினங்களை தம்பால் ஈர்ப்பதற்காகவே இவையெல்லாம் பூக்களில் அமைந்துள்ளன.

இதனால்தான் அவற்றின் வாசனை மாறுபடுகிறது. இந்த வாசனை பொருள் மெல்ல மெல்ல ஆவியாக மாறி காற்றுடன் சேரும்போது நறுமணத்தை நாம் உணருகின்றோம். நாமும் பூக்களில் இருந்து வாசனைத்திரவியம் பல்வேறு செய்முறைகளால் தயாரிக்கலாம். பூக்களை நீர் நிரம்பிய பாத்திரத்தில் இட்டுக் கொதிக்க வைத்து நீராவியாக மாற்றுவது ஒரு செய்முறை. நீராவியுடன் வாசனை பொருளும் வெளியே வரும்.



### அந்த பெரியநாளில் பரீட்சைக்கு முன்னர்

பரீட்சைநாள் உதயமாகியதும், அமைதியாக இருங்கள். கடுமையான வேலையின் வெற்றிக்கு அது பெரிதும் உதவும்.

### புளோரன்ஸ் நைற்றிங்கேல்

தற்கால தாதிச் சேவையின் தாய் எனப் போற்றப்படுகின்ற புளோரன்ஸ் நைற்றிங்கேல் 1960 ஆம் ஆண்டு தாதிகளைப் பயிற்றுவதற்காக புனித தோமையர் மருத்துவ சாலையில் முதலாவது பயிற்சி நிலையத்தை நிறுவினார்.இவ்வம்மையார் 90 ஆண்டுகள் வாழ்ந்து 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி உயிர் நீத்தார்.

போரில் பிரித்தானியப் படையினர் காயமுற்ற வேளையில் உலகின் முதல் தாதியாக புரட்சிகர சிந்தனையுடன் வீரர்களுக்கு நைற்றிங்கேல் உதவ முன்வந்தார்.

ஒவ்வொருநாளும் இரவில் கையில் விளக்குடன் தூக்கமின்றி நோயாளிகளை கவனத்துடன் பார்வையிட்டு வநத்தால் விளக்கேந்திய பெருமாட்டி என்றும் கைவிளக்கேந்திய காரிகை என்றும் போற்றப்பட்டார்.

### ஒன்றும் கிடையாது

முல்லா ஒருநாள் தலையில் பொதியொன்றைச் சுமந்துகொண்டு கடைத்தெருவில் நடந்து வந்து கொண்டிருந்தார். வழியில் ஒருவன் வந்து, "ஐயா ! சுமையை நான் சுமந்து வருகிறேன் ; எவ்வளவு கூலி தருவீர்கள் ?" என்று கேட்டான்.

"கூலியா.....? ஒன்றும் கிடையாது !" என்று கூறிவிட்டார் முல்லா.

" பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு அவரது சுமையை வலியப்பிடுங்கிச் சுமந்து கொண்டு வந்து அவர் வீட்டு வாசலில் வைத்துவிட்டு " கூலியை கொடுங்கள் " என்று கேட்டான் அந்த விடாக்கண்டன்.

"நான்தான் கூலி ஒன்றும் கிடையாது என்றேனே? " என்றார் முல்லா.

"நீங்கள் சொன்ன அந்த ஒன்றும் கிடையாததைத்தான் கொடுங்கள் என்று கேட்கிறேன்" என்றான் அவன்.

"சரி இவன் வீண்வம்பு செய்வதற்காகவே வந்திருக்கிறான் என்பதை புரிந்து கொண்ட முல்லா அவனை வீட்டுக்குள் அழைத்துப்போனார். அங்கே தரையில் தரைவிரிப்பு விரிக்கப்பட்டிருந்தது.

கூலியாளிடம் "தரைவிரிப்பை எடுத்துவிட்டு அடியில் என்ன இருக்கிறது என்று கையை விட்டுப்பார் !" என்றார் முல்லா.

அவனும் அது போல் தரைவிரிப்புக்கு அடியில் கையைவிட்டு துளாவிப்பார்த்துவிட்டு , "ஒன்றும் கிடையாது" என்றான்.

"நீ கேட்டது அது தானே ? எடுத்துக் கொண்டு போ !" என்றார் முல்லா.

## ஏணி

⌛ நல்ல தருணத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பவன் யோசனை செய்து கொண்டிருப்பான்.தருணத்தை உண்டாக்குபவன் வெற்றியைத் தட்டிக் கொண்டு போவான்.

✍ உன் குறைகள் உன் நெஞ்சை அழுத்துவது நல்ல அறிகுறி. அந்தக் குறைகளை அகற்றப்பாடுபடுவதே உன் வெற்றியின் முதற் படி.

✹ ஒரே வேளையில் பல வேலைகளில் ஈடுபாடு கொள்பவர் உருப்படியாக ஒன்றைச்சாதிப்பது மிகுந்த சிரமமாகும்.

💧 குறைகள் எங்கிருந்தாலும் அவற்றை களைய முற்படுவது சரிதான்; ஆனால் அதைவிட உன் குறைகளையே முதலில் களைவதுவே முக்கியம்.

☺ இரகசியமாகப் பேசவிரும்புவது கோழைத்தனத்தையே குறிக்கும்.

❋ பிறர் செய்யும் பிழைகளை எடுத்துக்காட்டாமல் மூடி மறைப்பதால் ஒரு சிலருக்கு நன்மை கிட்டலாம். ஆனால் அது ஒழுக்கமின்மையையே குறிக்கும்.

✿ வாழ்வு என்பது மாயமல்ல அது உண்மையானது. கனவு வாழ்வல்ல, அது பொய்யானது, எண்ணுபவன் வாழ்கிறான் , மயங்குபவன் அழிகிறான்.

### 3.4.3 குறித்த ஒரு தேவை கருதி வாசித்தல்

மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை அல்லது ஒரு குறிப்பிட்ட சொல்லின் விளக்கத்தை அறிய எதனை வாசித்தல் வேண்டும் என்ற அறிவு பெறுதல் வேண்டும்.

சொற்களின் விளக்கம் பெற அகராதியினை வாசித்தல் வேண்டும். கலை விடயங்களை கற்றுக் கொள்ள கலைக் களஞ்சியம் உகந்தது. சிறுவர்கள் விரும்பிப்படிக்கும் பகுதியை கற்க வேண்டுமாயின் சிறுவர் உலகம், சிறுவர் மஞ்சரி ஆகியவற்றை கற்க வேண்டும்.

மாணவர்கள் தமது வளத்தை அதிகரிக்க பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்தல் அவசியமாகும்.

☠ நீங்கள் படித்த ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தை சுருக்கமாக எழுதுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

☠ மைதானம் பிறந்தது எனும் கதையின் மூன்றாம் பந்தியில் கூறப்பட்டது என்ன ?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

☞ தமிழ் அகராதி யொன்றில் கீழ்க்காணும் சொற்களுக்கு பொருள் அறிந்து எழுதுக.

அருட்டிப்பு :..............................................................................................................

அந்தகாரம் :..............................................................................................................

தொழுதல் :..............................................................................................................

நடு நிலை :..............................................................................................................

பட்டறை :..............................................................................................................

பாணத்தி :..............................................................................................................

புயகம் :..............................................................................................................


### 3.4.4 தகவல் திரட்டுதலுக்காக வாசித்தல்

தகவல் திரட்டுவதற்காக , வாசிப்தற்காக 1996 ஆண்டு வில்ஸ் கிண்ணத்தை கிரிக்கட் சாதனை மூலம் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சி பற்றி மாணவர்கள் அறிய தகவல்களை திரட்டுமுகமாக இங்கிலாந்து பேப்பர் இரண்டில் வந்த செய்திகளை வாசிப்போம்.

உலகுக்கு கிரிக்கட் விளையாட்டை அறிமுகப்படுத்தியதே இங்கிலாந்துதான்.... சர்வதேச கிரிக்கட் சம்மேளனம் இங்கிலாந்தில் தான் இருக்கிறது. சர்வதேச ரீதியில் கிரிக்கெட் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இச் சபையே பொறுப்பு. இந்த நிலையில் இலங்கை அணியின் உலகக் கிண்ண கிரிக்கெட் வெற்றியைப் பற்றி இங்கிலாந்தின் ஜனரஞ்சக பத்திரிகைகளான "த இன்டிபெண்டன்ட்", "த டைம்ஸ்" இரண்டும் தலையங்கம் திட்டியுள்ளன. அவை என்ன கூறுகின்றன என்று பாருங்கள்.

| ( THE TIMES )<br>**ஒரு இனிமையான வெற்றி** | ( THE INDEPENDENT )<br>இலங்கை : ஒரு சிறிய புதுமை |
|---|---|
| எதிர்பார்ப்புக்கு மாறாக அமைந்ததால் இலங்கை அணியின் உலக கிண்ண வெற்றி இனிமை தருகிறது. அத்துடன் உண்மையான விளையாட்டு உணர்வுடன் இயல்பாகவும். பண்பாகவும் அர்ஜீன ரணதுங்கவின் வீரர்கள் விளையாடியமை மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.<br><br>இங்கிலாந்தில் கிரிக்கெட் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த அணியே பொறுப்பு. இங்கிலாந்துக்கு எந்த அணி, எப்போது, எத்தனை வருடங்களுக்கொரு முறை டெஸ்ட் கிரிக்கெட்டில் கலந்து கொள்கிறது என்பதை இந்த சபையே தீர்மானிக்கும்.<br><br>இந்த வகையில் 1982இல் கீத் பிளெட்சரின் தலைமையில் கொழும்புக்கு வந்து இலங்கை அணியுடன் டெஸ்ட் போட்டியொன்றில் விளையாடியது.<br><br>அதற்கு பிறகு இதுவரை 3 முறை மட்டுமே இங்கிலாந்துக்கு இலங்கை அணி கிரிக்கெட் விளையாட வந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒரேயொரு டெஸ்ட் போட்டியே இலங்கைக்கு கொடுக்கப்பட்டது. இந்த வகையில் கடைசி விஜயம் 1991இல் 5 வருடங்களுக்கு முன் இனி வரவிருப்பது 1998இல் அதுவும் ஒரேயொரு டெஸ்ட் போட்டிக்கு.<br><br>இலங்கைக்காக 3 அல்லது 5 டெஸட் போட்டிகளை கொண்ட தொடரை வழங்குமாறு இலங்கையின் கிரிக்கெட் அதிகாரிகள் கேட்டும் மறுப்பது ஏன்?<br><br>இப்போது ஒருநாள் போட்டிகளில் உலக சாம்பியன்களாகி விட்ட இலங்கை அணி இங்கிலாந்தில் விளையாடுவதை அடுத்த வருடம் பார்க்க முடியாதா ? அப்படி முடிந்தால் நன்று. | இலங்கையின் வெற்றியில் இருந்து 3 பாடங்களை படிக்கலாம்<br><br>ஒன்று இலங்கையர்கள் கிரிக்கெட்டை பெரிதாக நினைக்கின்றார்கள். பேராசிரியராக இயன் போத்தமை நியமிக்க முயன்றார்கள். அது முடியாமல் போகவே சர்வதேச ரீதியில் தரமானவராக இருந்த டேல் வொட்மோரை நியமித்தனர்.<br><br>இரண்டாவதாக ஒரு நோக்கத்துடனும் நம்பிக் கையுடனுமே இலங்கையர்கள் கிரிக்கெட்டில் ஈடுபடுகின்றனர்.<br><br>மூன்றாவது அவர்கள் துடுப்பாட்டம் நேர்த்தியையும் , நளினத்தையும் சேர்த்து தடுத்தாடாமல், எதிர்த்தாடும் இலங்கையணியினர் பாணி, இங்கிலாந்து வீரர்களின் பாணிக்கு முற்றிலும் மாறானது.<br><br>பலமான போட்டி நிலவும் சூழ்நிலையில் உலகத்தரத்தை எட்டுவதற்காக எந்தவொரு நாடும் தீவிரம் காட்டும் போது அந்த நாட்டின் அளவு ஒரு தடைக்கல்லாக இருக்காது என்பதை, கிரிகெட்டில் உலக கிண்ணத்தை வென்ற இலங்கை மற்றைய நாடுகளுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.<br><br>1975ல் முதலாவது உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது இலங்கை அணி டெஸ்ட் அந்தஸ்த்தைக் கூட பெற்றிருக்கவில்லை. இலங்கைக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்ததே 1981ல் தான்.<br><br>அப்படியானால் உலகின் எந்தவொரு அணியையும் ஒரு நாள் கிரிக்கெட்டில் எதிர் கொண்டு இலங்கை வெற்றி பெறுவதற்கான ரகசியம் என்ன ? |

குழந்தைகளுக்காக கவிதை பாடி குழந்தைகளை மகிழ்வித்த அழ வள்ளியப்பா பற்றி கவிதையை வாசிப்போம்.



## குழந்தைக் கவிஞர்

அப்பா என்றால் அப்பாதான்
அவரே வள்ளி யப்பாவாம்
இப்பா ரதத்தில் குழந்தைகளின்
இலக்கியம் வளர்ந்த அப்பாவாம்

குழந்தைக் கவிஞர் பெயரினிலே
குன்றாக் கவிதை பலபாடி
மழலைக் கவிகளின் செம்மலென
மங்காப் புகழைப் பெற்றவராம்

நாளைய தலைமுறை நலமுடனே
நன்றாய்த் திகழ வேண்டுமென
இளையவர் இலக்கியத் துறையினிலே
இனிமையாய்ப் பாடிய ஒரு கவிஞர்

தமிழின் பேரவைச் செம்மலெனத்
தந்தது பல்கலைக் கழகமுமே
அமிழ்தினு மினிய செந்தமிழில்
அழகாய் பாடிய நற்கவிஞர்

கள்ளம் இல்லாக் குழந்தைகளின்
கனவில் சுற்றும் அவரேதான்
பிள்ளைக் கவிகளின் அரசு எனப்
பெரிதும் போற்றும் மன்னவராம்

\- பால நடராஜன்

பாடசாலை மாணவர்கள் தொலைக் காட்சி பார்ப்பது நல்லது எனவும் / மாணவர்கள் தொலைக் காட்சி பார்ப்பது நல்லதல்ல எனவும் தகவல் அறிந்து அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| பாடசாலை மாணவர் தொலைக் காட்சி பார்ப்பது நல்லது | பாடசாலை மாணவர் தொலைக் காட்சி பார்ப்பது நல்லதல்ல |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## 3.4.5 அறிவு விருத்திக்காக வாசித்தல்

மாணவர்கள் சிறுவர்களுக்காக வெளிவரும் நூல்களை கற்றிருப்பது அவசியமானதாகும். இதே நோக்கில் வெளிவரும் "அறிவொளி" சிறுவர் நூல் வரிசை எனும் புத்தகங்களையும், வேறு சிறுவர்க்கான கோகுலம், அம்புலி மாமா, பாப்பா மலர் என்பவற்றையும் படிக்கலாம்.

நீங்கள் உங்கள் அறிவு விருத்திக்காக படித்த நூல்களின் பெயர்களையும் அவை வெளியிட்ட நிறுவனம் எழுதியவர் பெயர் என்பவற்றையும் கொண்டு கட்டுரையை பூர்த்தி செய்க.

| இல. | வாசித்த நூலின் பெயர் | எழுதியவர் பெயர் | வெளியிட்ட நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## 3.4.6 நயத்தலுக்காக வாசித்தல் - கவிதை , சிறுகதை

❋ கீழ்க்காணும் கவிதையை வாசித்து நயம் கூறுக.

### கப்பற் பாட்டு

சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல்மீது அவள் கொண்ட பயம் ஒன்று காணும்

*- மகா கவி -*

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

*"உயிர் கொடுத்த உத்தமி" எனும் கதையை படித்து அதன் சிறப்பை எழுதுக.*

### உயிர் கொடுத்த உத்தமி

இரண்டாம் இராசசிங்கன் கண்டியை அரசாண்டு வந்தான். அக்காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோர பகுதியினை ஆண்டு வந்தனர். போர்த்துக் கேயருக்கும் இராசசிங்கனுக்கும் நடைபெற்ற சண்டையில் இராசசிங்கன் தோல்வி அடைந்தான்.

தோல்வியுற்ற அரசனை போர்த்துக்கேயர் துரத்திச் சென்றனர். இராசசிங்கன் ஊவா மாகாணத்தில் உள்ள பயங்கரகம்மனை எனும் கிராமத்தை அடைந்தான். அரசன் அங்கு நின்ற ஒரு பெரிய பலா மரத்தைக கண்டான். அதில் ஆள் நுழையக் கூடிய பெரிய பொந்து இருந்தது. அதனுள் அவன் ஒளிந்து கொண்டான் பலாமரத்தருகே முஸ்லிம் பெண் ஒருத்தி பசு மாட்டில் பால் கறந்தபடி இருந்தாள் அவள் அரசன் மரப்பொந்தினுள் நுழைந்ததைக் கண்டாள். அவ்வேளை போர்த்துக்கேயர் தாம் துரத்தி வந்த அரசனைக் காணாமல் சினங்கொண்டனர் அங்கு நின்ற முஸ்லிம் பெண்ணிடம் வினாவினர்.

ஆனால் அப் பெண்ணோ தான் கண்டதை கூறாது இருந்தாள். இதனால் கோபங்கொண்ட போர்த்துக் கேயர் அவளை வெட்டிக் கொன்றனர். போர்த்துக்கேயர் சென்றபின் வெளியே வந்த இரசசிங்கன் தனக்காக இவள் உயிர் கொடுத்தாளே என அவள் தியாகத்தை மெச்சினான்.

இராசிங்கம் மீண்டும் அரசன் ஆனான். அவளின் நினைவாக பயங்கரகம்மானை என்ற கிராமத்தை அவளுடைய உறவினர்களுக்கு கொடுத்தான்.

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

........................................................................................................................................................................

**3.4.7 வாசிப்பு திறன்களை வளர்த்துக் கொள்ளும் தேவை கருதி வாசித்தல்**

வாசித்தல்

பாடநூல்களில் காணும் உரைப்பகுதியை உரத்த குரலில், தெளிவான உச்சரிப்புடன், வாசிப்பது மூலம் வாசிப்பு வளர்ச்சி பெறும்.

**3.4.8 மௌனமாக வாசித்து விளங்கி கிரகித்தல் பல்வகை எழுத்தாக்கங்களை வாசித்து கிரகித்தல்.**

கீழ்க்காணும் கட்டுரையை மௌனமாக வாசிக்கவும் :-

## ஒழுக்கமே முதன்மையானது !

நல்லொழுக்கமென்பது, தனக்கும், பிறருக்கும் பயனுள்ள வகையில் ஒழுகுதலே ஆகும். மாணவர்கள் முதற்கண் எத்தகைய நடத்தை முறைகள் தனக்கும், சமூகத்திற்கும் பயனளிக்கும் என்பதைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். நற்பண்புகளைப் பெறுவதற்காக அறிவையம், ஆற்றலையும் பெறல் வேண்டும். ஒழுக்கமானது பல அறப்பண்புகளை உள்ளடக்கியது. சமூக சூழ்நிலையுடனும், சமயக் கருத்துக்களுடனும் நெருங்கிய தொடர்புடையது, ஒருவரின் நல்வாழ்வை நிர்ணியப்பது.

குழந்தையாக பிறக்கும் போது கெட்டவனாகவோ , நல்லொழுக்கமுடையவனாகவோ பிறப்பதில்லை. சூழலே அவனை மாற்றுகிறது. எனவே மாணவர்களுக்கு பாடசாலைச் சூழலும் அவர்களின் ஒழுக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள் இலக்கணங்களையும் முற்றாக கற்று முழுதுணர்ந்த பெரு முனிவ்ரான எமது திருவள்ளுவர் இயற்றிய பொய்யாமொழியாகிய திருக்குறள் கூறுகின்றது.

கல்வி அறிவைத்தர வேண்டும். கற்பவைகளை தகுந்தவரிடம் கற்க வேண்டும். வெறுமனே அறிவு பெறல்மட்டும் கல்வியாகாது. உயர் வாழ்வை வகுக்கக்கூடிய ஒழுக்கத்தையும் கற்க வேண்டும். மாணவர்களிடையே நல்லொழுக்கத்தை உண்டாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். உண்மைக்கல்வியின் இலக்கணம் நல்லொழுக்கமே! நல்லொழுக்கமின்றேல் நல்ல குடிமகனை உருவாக்க முடியாது. மாணவர்களிடம் எவ்வளவுதான் அழகு, அறிவாற்றல் இருந்தாலும்.

நல்லொழுக்கம் இல்லாவிடத்து அவர்களால் சமூகத்துக்கோ, நாட்டுக்கோ எப்பயனும் கிடையாது. எனவே பேரறிவை விட நல்லொழுக்கமே முக்கியமாகும்.

எனவே மாணவ மணிகளாகிய என் அருமை சகோதர, சகோதரிகளே கல்வியுடன் சேர்த்து நல்லொழுக்கத்தையும் கற்று, அதனை பின்பற்றி ஆசிரியர்களுக்கும் , பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் நல்லொழுக்கமுடையவர்களாக வாழ்வோம்.

❋ அடுத்து உடைந்த கத்தியின் சுயசரிதையை மாணவர்கள் மௌனமாக வாசித்து கிரகிக்கவும்.

## உடைந்த கத்தியின் சுயசரிதை

நான் ஒரு உடைந்த கத்தி. கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்கு முன் எனது வீட்டு எஜமானன் என்னை சந்தையில் வாங்கினார். அதனால் நான் ஒரு புது உலகத்தை நோக்கி செல்வதை உணர்ந்தேன்.

எனது வருகையால் வீட்டு எஜமானி மிகவும் சந்தோஷப்பட்டாள். அன்றிலிருந்து நான் அவர்களின் சமையலறைக்கு வாரிசானேன். என்னை அவர்கள் மிகவும் மென்மையாக பாவித்தார்கள். வீட்டுக்கு வருபவர்களிடமெல்லாம் என்னை புகழ்ந்து பேசினர். பல பழவகைகளையும் காய்கறிகளையும் மென்மையான பொருள்களையும் என்னைக் கொண்டு வெட்டினார்கள்.

நாள் செல்லச் செல்ல கடினமான பொருள்களை வெட்டவும் உடைக்கவும் ஆரம்பித்தனர். இதனால் நான் மிகவும் வேதனையடைந்தேன் இருந்தும் நான் இவையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு நல்லதையே செய்தேன். கொஞ்சநாள்களுக்குப்பின் என்னால் எதையும் உடைக்கவோ, வெட்டவோ முடியாமல் போனது. இதனால் என்னை வெறுத்தார்கள். என்னை புகழ்ந்து பேசிய எஜமானி இகழ்ந்து பேச ஆரம்பித்தாள். பிறகு என்னை ஒரு மூலையில் எறிந்துவிட்டாள். பிறகு எனது சகோதரி என்னிடத்தை பெற்றுவிட்டாள். நான் உடலால் உடையாவிட்டாலும் உள்ளத்தால் உடைந்து போன ஒரு கத்தி.

## 3.5. வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வாசித்தல்.

### 3.5.1 காண்பவற்றைச் சுயமாக வாசித்தல்

கீழ்க்காணும் சுவரொட்டிகள் விளம்பரங்கள், பெயர் பலகை ஆகியவற்றை வாசிக்கவும்.

**தேசிய சேமிப்பு வங்கி வட்டி வீதங்கள்**

வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள்

| | | |
|---|---|---|
| ✠ | சேமிப்புக் கணக்கு | வருடாந்தம் 12% |
| ✠ | உழைக்கும் போதே சேமிக்கும் திட்டம் | வருடாந்தம் 12% |
| ✠ | நிலையான வைப்புக்கள் | வருடாந்தம் 14% |
| ✠ | நிலையான வைப்புக்கள் ( வட்டி மாதாந்தம் வழங்கப்படும் ) | வருடாந்தம் 13.2% |
| ✠ | நன்கொடைக் கணக்கு | வருடாந்தம் 14% |
| ✠ | சுரக்கும் கணக்கு | வருடாந்தம் 13.8% |

கடனுக்கான வட்டி வீதங்கள்

வீடமைப்புக் கடன்கள் 18% முதல் 21%வரை

**தேசிய சேமிப்பு வங்கி**

**வளமான வருங்காலத்திற்கு வழிகாட்டும்**

**அறிவித்தல்**

**வருடாந்த மகாசபைக் கூட்டம்**

கொழும்பு-கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் 71வது வருடாந்த மகாசபைக் கூட்டம் 1997.03.29 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மருதானை, கப்பித்தாவத்தை, இல.3, கோயில் வீதியிலுள்ள சபை மண்டபத்தில் நடைபெறும். இச்சபையின் உறுப்பினர்கள் அக்கூட்டத்திற் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மகாசபையிற் சமர்ப்பிக்கவுள்ள பிரேரணைகள் அல்லது கேள்விகள் கௌரவ பொதுச் செயலாளருக்கு 1997.03.14ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

**வே. வல்லிபுரம்**
**கௌரவ பொதுச் செயலாளர்**
**கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை**
**கொழும்பு**
**1997.02.28**

**அகில இலங்கை இந்து மாமன்றம் சமய விவகார விழாக்கள் குருகுலம்குழு**

**சமயதீட்சை**

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான தாது வருடம் மாசித் திங்கள் 24ம் நாள்

மகாசிவராத்திரி தினமான
07.03.97 வெள்ளிக்கிழமை
காலை 08.30 மணி முதல்

இந்து மாமன்ற தலைமையகத்தில் நல்லைஆதீனம் ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில் பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானபாணு சிவசார்ய **சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களால்** சமயதீட்சை வழங்க திருவருள் கூடியுள்ளது

Dr. சரஸ்வதி இராமநாதனின் அருளுரையும் இடம்பெறும் இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்கு கொண்டு பயன் பெறும் வண்ணம் தங்களையும் - பாடசாலை மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

**நாணய மாற்று**

03-03-1997

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் வருமாறு.

| | வாங்குதல் ரூபா | விற்றல் ரூபா |
|---|---|---|
| 100 அமெரிக்கா டாலர் | 5741.60 | 5770.20 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | 9308.17 | 9431.68 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | 3373.74 | 3425.41 |
| 100 பிரஞ்சு பிராங் | 995.23 | 1018.53 |
| 100 ஜப்பானிய யென் | 47.45 | 48.20 |

## ஆண்டு 6 புலமைப்பரிசில்
## திரித்துவக் கல்லூரி
## கண்டி

க/திரித்துவக்கல்லூரி சாராத மாணவர்கள் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்போர், 1996 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் நடாத்தப்பெற்ற ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிகள், மாணவர் விபரம், இரு நற்சான்றிதழ்ப் பத்திரங்கள் முதலியவற்றுடன் எதிர்வரும் 25.03.97க்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

- அதிபர் -

**3.5.2. இரசனைக்காக வாசித்தல்-கவிதை, கதை , கட்டுரை விகடத்துணுக்கு ஆகியவை சிலவற்றைப் பார்ப்போம்.**

### வர்ண ஜாலம்

நீலா நீலா இங்கே வா
நீல வானை எட்டிப் பார் !
தூறல் போடும் வானமதில்
தோன்றும் வான வில்லைப் பார்!

எழுவான் கதிரோன் வெள்ளொளியில்
ஏழு நிறங்கள் தெரியுது பார்!
ஏழு நிறங்கள் என்ன வென்று
சொல்வேன் அதனைக் கேட்டுப் பார் !

பச்சை மஞ்சள் கரு நீலம்
சேர்ந்து சிவந்த மஞ்சள் பார்!
சிவப்பு நீல நிறங்களுடன்
சேர்ந்து விளங்கும் ஊதா பார்!

படித்த பாடம் வகுப்பறையில்
சொல்லும் உண்மை இங்கே பார்!
வர்ண ஜாலம் காட்டு மந்த
விந்தை அழகை நேரில் பார்!

### மாலை நல்ல வேளை

வானில் வந்த சூரியன்
மறையும் நேரம் மாலையாம் ;
பாடிப் பறந்த பறவைகள்
கூட்டைத் தேடும் வேளையாம்.

பாடு பட்ட உழவரும்
வீடு சேரும் மாலையாம்;
வேலை என்று சென்ற அப்பா
வந்து சேரும் வேளையாம்

பாலர் நாங்கள் கூடியே
பாடி ஆடும் மாலையாம் ;
தம்பி தங்கை எல்லோரும்
சேர்ந்து பேசும் வேளையாம்

கை கால்கள் கழுவி இறை
புகழைப் பாடும் மாலையாம் ;
பள்ளிப் பாடம் படித்திட
இனிய நல்ல வேளையாம்.

### காந்தியடிகள்

காந்தி அவர்களை விருந்திற்காக அழைத்துச் சென்றனர். அங்கே அவரும் மற்றும் பல பெரியோர்களும் வந்திருந்தனர். தங்க கோப்பைகளிலேயே விருந்தளிக்கப்பட்டது. காந்தி அவர்கள் உணவை உண்டு விட்டு உடனேயே அவருடைய தங்க கோப்பையை வெளியே வீசி விட்டாராம். அங்கிருந்த அனைவரும் "இப்படி தங்க கோப்பையை வெளியே வீசுகிறர்களே ?" என்று வினவினார்களாம். உடனே காந்தி "நான் ஒரு முறை சாப்பிட்ட கோப்பையில் திரும்ப சாப்பிடுவதில்லை " யென்று கூறினாராம். வேண்டுமானால் நீங்கள் வந்து சாப்பிட்டு பாருங்கள், என்றாராம். அவர்களும் அப்படியே வரவும் காந்தி அவர்கள் வாழையிலை யினாலே விருந்தளித்தாராம்.

**தொகுப்பு - கிருஷ்ணா**

ஐ.நா.தகவல்கள்

# UNESCO

யுனெஸ்கோ (UNESCO), யுனிசெப் (UNICEF) அமைப்புக்கள் கல்வியைப் பரப்பவும்,. குழந்தைகள் நல்வாழ்வுக்குமாகவும் ஐ.நா.வினால் 1946ல் துவக்கப்பட்டவை.

அடக்கு முறையை எந்த வடிவத்திலும் எதிர்த்தும், மனித உரிமைகளைப் பாதுகாத்தும் உலகப் பிரகடனம் ஒன்றை ஐ.நா. 1948ல் வெளியிட்டது.

1950ம் ஆண்டு பாதுகாப்பு கவுன்ஸிலில் இருந்து சோவியத் நாடு வெளிநடப்புச் செய்த போது, அமெரிக்கா தலைமையில் கொரியாவுக்கு ஒரு படை அனுப்ப ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றியது.

# சகாரா பாலைவனம்

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள சகாரா பாலைவனம் என்பதும் உங்களுக்குத் தெரியும். சகாரா பாலைவனத்தைப் பற்றி இன்னும் சில செய்திகள் இதோ.

இந்தப் பாலைவனம் ஒன்பது மில்லியன் சதுரகிலோ மீட்டர் பரப்பளவு உள்ளது. சகாராவுக்கு அடுத்த இடங்களில் இருக்கும் ஒன்பது பெரிய பாலைவனங்களை ஒன்று சேர்த்தால் , எவ்வளவு பரப்பளவு வருமோ அது மொத்தத்தையும் இந்தப் பாலைவனமே பெற்றுவிடும்.

இந்தப் பாலைவனத்தின் பெரும்பாலான பகுதிகளில், வறண்ட பாறைகளும், சரளைக்கற்களும் நிறைந்துள்ளன. மீதமுள்ள இடங்களில் மணல் நிறைந்துள்ளது. சில இடங்களில் இந்த மணல் 180 மீட்டர் உயரத்திற்குக் குவிந்து குன்று போல காட்சி அளிக்கிறது.

ஆபிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, டுனீசியா, லிபியா, சூடான் நைஜீரியா சாட், மாலி , மௌரிஷியானியா ஆகியவை எல்லாம் சகாரா பாலைவனத்தைச் சூழ்ந்திருக்கும் நாடுகளாகும். எகிப்து நாட்டின் 75 சதவீத பகுதி இந்தப் பாலைவனத்தில் தான் உள்ளது.

உண்மையிலேயே இது பிரமாண்டமான ஒரு பாலைவனம் தானே!

### 3.5.3 பொழுது போக்கிற்காக வாசித்தல்

மாணவர்கள் கீழ்க்காணும் விடயதானங்களை கற்பதோடு இறுதியில் தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்யுங்கள்.

#### வாஸ்கொடகாமா

ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவை நல்ல முறையில் அறிமுகம் செய்து வைத்தவர் வாஸ்கொடகாமா என்ற கடற் பயணிதான். போத்துக்கல் நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியாவை அடையாலாம் என்று கடல் வழிப்பாதையை இவர் 1498ம் ஆண்டு மே மாதம் கண்டுபிடித்தார். அதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கரடு முரடானதும், பாலைவனம் மற்றும் செங்குத்தான மலைகளைக் கொண்டதுமான தரைப்பாதை வழியாக மாதக்கணக்காகப் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

வாஸ்கொடகாமா இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரத்தில் 1460ல் பிறந்தார். போர்த்துக்கேய மன்னனான எமானுவேல் வழங்கிய நான்கு பாய்மரக்கலங்களுடனும் நூற்றுக்கும் மேலான மாலுமிகளுடனும் லிஸ்பன் நகரிலிருந்து புறப்பட்டார். கடலில் மூன்று மாதங்கள் பயணம் செய்து பல தொல்லைகளையும் துயரங்களையும் தாங்கி 3 மாதங்களின் பின்னர், இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள கோழிக்கோடு துறைமுகத்தை வந்தடைந்தார். இவருடன் பயணம் செய்த மாலுமிகளில் பாதிக்குமேல் இறந்துவிட்டனர். அவருடைய நீண்ட பயணத்தின்போது இடையில் எந்தக் கரையும் வாஸ்கொடகாமாவுக்குத் தென்படவில்லை.

இந்தியாவிலிருந்து போர்த்துக்கல் திரும்பும்போது கப்பல்களில் வாசனைத் திரவியங்களை நிரப்பிச் சென்றார். இதனால் போர்த்துக்கேய மக்களும் மன்னனும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தனர். வாஸ்கொடகாமாவின் இந்தப் பயணத்தின் பின்னரே தென் கிழக்கு ஆசிய நாடுகளில் - இலங்கை , இந்தியா உட்பட - போத்துக்கேய ஆதிக்கம் ஏற்பட்டது. இவர் 1524ம் ஆண்டு காலமானார்.

#### சவ்வரிசி

◎ **சவ்வரிசி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ?**

சில வகை பனை மரங்களின் தண்டுப் பகுதியினுள் உள்ள மாவுப் பொருள் சவ்வரிசியாகத் தயாரிக்கப்படுகிறது.

◎ **இது எப்படி எடுக்கப்படுகிறது ?**

பனை மரம் வளர்ந்து 15 ஆண்டுகளானதும், அது பூக்கத் தொடங்கும் சமயத்தில் மரம் வெட்டப்படும். அதன் தண்டு பிளக்கப்பட்டு அதிலுள்ள மாவுப் பொருள் எடுக்கப்பட்டு தூளாக்கப்படும். இதை அப்படியே தூளாகவும் பயன்படுத்தலாம் அல்லது சிறு சிறு உருண்டைகளாகவும் செய்து பயன்படுத்தலாம்.

◎ **ஒரு மரத்திலிருந்து எவ்வளவு மாவுப் பொருள் எடுக்கலாம் ?**

சுமார் மூன்றாயிரத்து அறுநூறு கிலோ மாவுப் பொருள் எடுக்கலாம்.

◎ **இது எதற்கு பயன்படுத்தப்படுகிறது ?**

பாயாசம், கஞ்சி போன்ற பலவகை உணவுகள் செய்யப்பயன்படுகின்றது. துணிகளுக்குக் கஞ்சி போட்டு மொட மொடப்பாகுக் வதற்கும் பயன்படுகிறது.

◎ **இந்த வகை பனைமரங்கள் எங்கு அதிகமாக வளர்கின்றன ?**

இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் அதிகம் வளர்கின்றன.

#### அழும் மண் புழு

வடமேற்கு அவுஸ்திரேலியாவில் மிகப்பெரிய மண்புழுக்கள் உள்ளன. அவை 12 அங்குல நீளம் இருக்கும். ஒரு அங்குல விட்டம் இருக்கும். அது ஏதேனும் அந்நியப் பொருள்களை தொட்டு விட்டால் சுருங்கி, மனித மணிக்கட்டுப் போல் இறுகி விடும். நம் ஊர் மண்புழுக்களைப் போல் இவை அமைதியானவை அல்ல. மண்ணில் செல்லும் போது 'சர்க் சர்க்' என்ற சத்தம் போடும். இது மண்ணிற்குள் இருக்கும் போது யாராவது மண் மீது நடந்தால் அழுவது போல் குரல் கொடுக்கும்.

## வெள்ளி என்பது யாது ?

தங்கத்தின் விலை மிக அதிகமாக ஏறியுள்ள இக்காலத்தில் பெரும்பாலானோர் வெள்ளியால் செய்த நகைகளை அணிந்து கொள்கின்றனர். மிகப் பயனுடைய உலோகங்களுள் வெள்ளியும் (Silver) ஒன்றாகும். இது தங்கத்தை விட உறுதியானது. மெல்லிய கம்பியாக நீட்டலாம். தகடாகவும் தட்டலாம் கலைத்திறன் மிக்க பொருள்கள் பெரும்பாலும் வெள்ளியும் செப்பும் சேர்ந்த பொருளில் செய்யப்படுகின்றன. வெப்பத்தையும், மின்சாரத்தையும் எளிதில் கடத்தும் உலோகங்களுள் இது மிகச் சிறந்தாகும்.

இது தூய நிலையில் வெண்மையானது. பளபளப்பானது. துருப்பிடிக்காது. எனினும் காற்றில் கந்தகம் இருப்பின் கறுத்து விடும். மெரு சேர்மங்கள் (வெ.யுரோமைட்டு, வெ.அயோனைட்டு ) போட்டோத் தொழிலில் பிலிம் தயாரிக்கப்படுகின்றன.

## நிலா

வட்ட வட்ட வெண்ணிலா
தங்க தட்டுப்போல் மின்னுது
எட்டிப் பிடிக்க தோணுது - நான்
ஏணிக்கெங்கேப் போவது
பார்க்க பார்க்க அழகு தான் - நல்ல
பாவைப்போல் வெளிச்சம் தான்
வேர்க்க வேர்க்க ஓடுதாம்
விண்ணில் நிலா விளையாடுதாம்
பகலில் என்ன செய்யுதோ - நிலா
பள்ளிக் கூடம் போகுதோ
பாடம் என்ன படிக்குதோ - நிலா
படுத்து நல்லா தூங்குதோ ?

## சார் ஐசாக் நியூற்றன்

ஒரு பொருளை மேலே தூக்கி எறிந்தால் அது ஏன் கீழே விழுகிறது . சற்று சிந்தித்துப் பாருங்கள். இதைத்தான் நியூட்டனும் சிந்தித்தார். எப்பொழுது ? எப்படி ? என்று இப்போது காணலாம்.

நியூற்றன் ஒரு முறை அழகிய பூங்கா ஒன்றில் அமர்ந்து இருந்தார். எந்த ஒரு நிகழ்ச்சியையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்து. அந்தப்பூங்காவில் நிறைய பல மரங்களும் பூச் செடிகளும் இருந்தன. திடீரென்று ஒரு அப்பிள் மரத்திலிருந்து கீழே விழுந்தது.

இதைக்கண்ட நியூற்றனுக்கு சிந்தனைமேல் சிந்தனை ஏன் அந்த பழம் கீழே விழுந்தது ? எதற்காக விழ வேண்டும். அந்தப் பழம் ஏன் மேலே போகக் கூடாது. என்றெல்லாம் சிந்தித்தார்.

இதே போல் தூக்கி எறிகின்ற பந்து கீழே விழுகிறது. என்றெல்லாம் சிந்திக்கலானார். அதன் பின்னர் இவை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்த ஆராய்ச்சியின் விளைவாகத்தான் அவர் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு ஆபூர்வமான சக்தி இருப்பதைக் கண்டார். அது தான் ஈர்ப்புச் சக்தி.

இதிலிருந்து பூமிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு என்பதையும் உலக மக்களுக்கு நிரூபித்தார்.

## சிரிப்பு

1. எந்த எழுத்து மணக்கும் - பூ
2. எந்த எழுத்து சுடும் - தீ
3. எந்த எழுத்து உமிழும் - துா
4. எந்த எழுத்து பறக்கும் - ஈ
5. எந்த எழுத்து எழுதும் - கை
6. எந்த எழுத்து உசப்பும் - சூ
7. எந்த எழுத்து பிளக்கும் - ஆ
8. எந்த எழுத்து இர்க்கும் - தா
9. எந்த எழுத்து எழுத உதவும் - மை

கீழ்க்காணும் பட்டியலை உங்களின் செயப்பாடுகளைக் கொண்டு பூர்த்தி செய்யுங்கள்.

| திகதி | நீங்கள் படித்த பத்திரிகை/புத்தகம் | விரும்பிய பாடம் | நீங்கள் விரும்பிய விடயம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# 4.0 எழுத்து

## 4.1 எழுத்துச் செயற்பாட்டிற்கான உடல் இயக்கத்திறன்

### 4.1.1 வசதியாக அமர்ந்து எழுது கருவியைச் சரியாகப் பிடித்து எழுத்துக்களை நிமிர்த்தி எழுதுதல்.

**கீழ்க் காணும் வாக்கியங்கள் சீராக எழுதுக.**

1. அறம் செய்ய விரும்பு.

........................................................................................................................

........................................................................................................................

2. ஆறுவது சினம்

........................................................................................................................

........................................................................................................................

3. இயல்வது கரவேல்

........................................................................................................................

........................................................................................................................

4. ஈவது விலக்கேல்

........................................................................................................................

........................................................................................................................

5. உடையது விளம்பேல்

........................................................................................................................

........................................................................................................................

6. ஊக்கமது கைவிடேல்

........................................................................................................................

........................................................................................................................

7. எண்ணெழுத் திகழேல்

........................................................................................................................

........................................................................................................................

8. ஏற்பது இகழ்ச்சி

........................................................................................................................

........................................................................................................................

9. ஐயம் இட்டு உண்

..........................................................................................................

..........................................................................................................

10. ஒப்புர வொழுகு

..........................................................................................................

..........................................................................................................

11. ஓதுவ தொழியேல்

..........................................................................................................

..........................................................................................................

12. ஔவியம் பேசல்

..........................................................................................................

..........................................................................................................

**4.1.2. எழுத்து அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு தெளிவு, புனிதம் அநுசரித்து கீழ்க்காணும் திருக்குறளை எழுதுக.**

அகர முதல எழுத்து எல்லாம்

ஆதி பகவன் முதற்கே உலகு

..........................................................................................................

..........................................................................................................

கீழ்க்காணும் உயிரெழுத்துகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

அ :..........................................................................................

ஆ :..........................................................................................

இ :..........................................................................................

ஈ :..........................................................................................

உ :..........................................................................................

ஊ :..........................................................................................

எ :..........................................................................................

ஏ :..........................................................................................

ஐ :..........................................................................................

ஒ :......................................................................................................................................

ஓ :......................................................................................................................................

ஔ :......................................................................................................................................

**4.1.3. எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பவற்றிற்குச் சீரான இடைவெளி விட்டு எழுதுதல்.**

மாணவர்கள் பாடப் புத்தகத்திலுள்ள 'தேசிய விளையாட்டு விழா' எனும் பாடத்தின் இரண்டாம் பந்தியை உறுப்பமைய எழுதுக..

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

## 4.4 வினாக்களுக்கு விடை எழுதுதல்

**4.4.1. ஒத்தகருத்துள்ள சொற்கள், எதிர்கருத்துள்ள சொற்கள், எதிர்பாற் சொற்கள், எதிர்மறைச் சொற்கள் என்பவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.**

கீழே காணப்படும் சொற்களின் ஒத்தகருத்துள்ள சொல்லுக்கு ஏற்றதாக வாக்கியம் அமைக்கவும்.

| இல | சொல் | ஒத்த சொல் | வாக்கியம் |
|---|---|---|---|
| 1 | சந்ததி | | |
| 2 | அரசன் | | |
| 3 | வெளிச்சம் | | |
| 4 | ஈகை | | |
| 5 | எழில் | | |
| 6 | திறை | | |
| 7 | சமர் | | |
| 8 | தூய்மை | | |
| 9 | சினம் | | |
| 10 | உவகை | | |

| இல | சொல் | ஒத்த சொல் | வாக்கியம் |
|---|---|---|---|
| 11 | ஆவி | | |
| 12 | கறை | | |
| 13 | ஏர் | | |
| 14 | சோகம் | | |
| 15 | அன்னம் | | |

கீழ்க்காணப்படும் சொற்களின் எதிர்கருத்துள்ள சொல்லுக்கு ஏற்றதாக வாக்கியம் அமைக்கவும்.

| இல | சொல் | எதிர்ச் சொல் | வாக்கியம் |
|---|---|---|---|
| 1 | அறம் | | |
| 2 | இலகு | | |
| 3 | மிருது | | |
| 4 | சமீபம் | | |
| 5 | உவகை | | |
| 6 | புகழ் | | |
| 7 | நட்பு | | |
| 8 | இளமை | | |
| 9 | புதுமை | | |
| 10 | ஆக்கம் | | |
| 11 | ஆசை | | |
| 12 | பிரி | | |
| 13 | விரைவு | | |
| 14 | ஈதல் | | |
| 15 | வாட்டம் | | |

கீழ்க்காணும் சொற்களின் எதிர்பாற்ச் சொற்களுக்கு வாக்கியம் எழுதி அட்டவணையை பூர்த்தி செய்க.

| | சொல் | எதிர்பாற்சொல் | வாக்கியம் |
|---|---|---|---|
| 1. | தந்தை | | |
| 2. | ஆடவர் | | |
| 3. | அழகி | | |
| 4. | சேவகி | | |
| 5. | குமரி | | |
| 6. | பிக்கு | | |
| 7. | மறவன் | | |
| 8. | மித்திரன் | | |
| 9. | மாமன் | | |
| 10. | சீமான் | | |
| 11. | எஜமான் | | |
| 12. | இடையன் | | |

அடுத்து பல சொல் ஒரு பொருளினைப் பார்ப்போம்

| | பல சொல் | ஒரு பொருள் |
|---|---|---|
| 1 | நெருப்பு, தீ, தழல் | அக்கினி |
| 2. | பயம், பீதி | அச்சம் |
| 3. | இன்னல், துயர், இடும்பை | அல்லல் |
| 4. | வியப்பு, அதிசயம், இறும்பூது | அற்புதம் |
| 5. | வானம், வான், விசும்பு, விண்ணகம் | ஆகாயம் |
| 6. | கட்டளை, ஏவல், விதி | ஆணை |
| 7. | களிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் | உவகை |
| 8. | மனை, வீடு, அகம் | இல்லம் |
| 9. | சரீரம், யாக்கை, தேகம் | உடல் |
| 10. | மெய், வாய்மை, சத்தியம் | உண்மை |
| 11. | தயவு, இரக்கம், கிருபை | கருணை |
| 12. | புரவி, துரகம், அசுவம் | குதிரை |
| 13. | ஆசான், தேசிகன், ஆசிரியன் | குரு |

| | | |
|---|---|---|
| 14. | பிழை, தவறு, வடு | குற்றம் |
| 15. | திங்கள், மதி, பிறை | சந்திரன் |
| 16. | கோபம், சினம், முனிவு | சீற்றம் |
| 17. | அன்னம், சாதம், அடசில் | சோறு |
| 18. | அபராதம், தண்டம், குற்றம் | தண்டனை |
| 19. | ஐயா, தந்தை, பிதா | அப்பா |
| 20. | மகிழ்ச்சி, இன்பம், உவகை | குதூகலம் |
| 21. | மாதா, அன்னை, அம்மை | தாய் |
| 22. | பழமை, புராதனம் | தொன்மை |
| 23. | மங்கை, பாவை, தையல் | மாது |
| 24. | வேள்வி, மகம், ஓமம் | யாகம் |
| 25. | காடு, கானகம் ஆரணியம் | வனம் |

⇨ கீழ்க்காணும் சொற்களின் எதிர்மறைச்சொற்களை எழுதி எதிர்மறை சொல்லை வைத்து வாக்கியம் எழுதுக.

| இல | சொல் | எதிர்மறைச்சொல் | வாக்கியம் |
|---|---|---|---|
| 1 | உண்டான் | | |
| 2 | படுத்தான் | | |
| 3 | சென்றான் | | |
| 4 | எடுத்தான் | | |
| 5 | நடந்தான் | | |
| 6 | படித்தான் | | |
| 7 | கடித்தான் | | |
| 8 | மகிழ்ந்தான் | | |
| 9 | எரித்தான் | | |
| 10 | மறந்தான் | | |
| 11 | கிடந்தான் | | |
| 12 | முடித்தான் | | |

**4.4.2 ஒரு சொல் பல பொருள், பல சொல் ஒரு பொருள் முதலியவற்றைப் பொருத்தமாக வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.**

கீழ்க்காணும் ஒரு சொல்லுக்கான பல பொருள் அட்டவணையைப் பார்ப்போம்.

| ஒரு சொல் | பல பொருள் |
|---|---|
| அக்கினி | நெருப்பு, தீ, தழல் |
| அபாயம் | ஆபத்து, துன்பம், இடையூறு |
| அறிஞர் | சான்றோர், புலவோர், மேதாவி |
| ஆனை | கட்டளை, ஏவல், விதி |
| உடல் | சரீரம், தேகம், யாக்கை |
| கர்வம் | செருக்கு, அகந்தை |
| குதிரை | புரவி, அசுவம், துரகம் |

**4.4.3 சேர்த்து எழுதிய சொற்றொடர்களை பிரித்தும் சொற்களைச் சேர்த்தும் எழுதுதல்.**

கீழ்க் காணும் சொற்களை பிரித்தெழுதி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| சொல் | பிரித்தெழுதல் | சொல் | பிரித்தெழுதல் |
|---|---|---|---|
| 1. சங்கத்தமிழ் | | 26. மிளகாய்ச் செடி | |
| 2. வேறில்லை | | 27. வண்டிச் சக்கரம் | |
| 3. ஆற்றங்கரை | | 28. புதுப் பானை | |
| 4. பொற்சிலம்பு | | 29. பசுக்கன்று | |
| 5. தேநீர் | | 30. பரிசளிப்பு | |
| 6. முந்நூறு | | 31. அறிவாற்றல் | |
| 7. பலாப்பழம் | | 32. ஐந்தாண்டு | |
| 8. கோயில் மணி | | 33. நடனமாது | |
| 9. ஆறரை | | 34. முடிவுரை | |
| 10. தாழம் பூ | | 35. நூலகம் | |
| 11. பாடிப்பாடி | | 36. ஆய்வகம் | |
| 12. தான தருமம் | | 37. ஆணழகன் | |
| 13. மணியோசை | | 38. திருவடி | |
| 14. இனிப்புப்பண்டம் | | 39. பூவிதழ் | |
| 15. பின்னேரம் | | 40. தாயகம் | |

| | | | |
|---|---|---|---|
| 16. நிலவொளி | | 41. முத்துச்சரம் | |
| 17. கருவிழி | | 42. பசுத்தோல் | |
| 18. மாம்பிஞ்சு | | 43. மலைக்குகை | |
| 19. நாடெனும் | | 44. தொலைக்காட்சி | |
| 20. கைப்பந்தாட்டம் | | 45. கைக்கடிகாரம் | |
| 21. காவடியாட்டம் | | 46. வாழைப்பூ | |
| 22. சொல்லம்பு | | 47. தேடிப்பிடி | |
| 23. நடன அரங்கம் | | 48. உப்புக்கல் | |
| 24. திரையரங்கம் | | 49. கேலிச்சித்திரம் | |
| 25. செந்தமிழ் | | 50. அச்சுத்தொழில் | |

☒ **கீழ்க்காணும் சொற்களை சேர்த்தெழுதுக**

| | | இணைத்து எழுதுக | | | இணைத்து எழுதுக |
|---|---|---|---|---|---|
| 1 | வெண்டி + காய் | | 16 | பொம்மை + கடை | |
| 2 | உருளை + கிழங்கு | | 17 | பாவை + பிள்ளை | |
| 3 | கத்தரி + காய் | | 18 | கங்கை + கரை | |
| 4 | வாழை + பழம் | | 19 | படை + தலைவன் | |
| 5 | பட்டு + துண்டு | | 20 | போர் + களம் | |
| 6 | இரும்பு + சத்து | | 21 | பூ + சொரியும் | |
| 7 | நெசவு +கலை | | 22 | துயர் + அறிந்து | |
| 8 | கீரை + பாத்தி | | 23 | ஒடி + பிடித்து | |
| 9 | முறுக்கு + சுட்டாள் | | 24 | பதில் + அளித்து | |
| 10 | பத்து + ஆறு | | 25 | பால + அன்னம் | |
| 11 | மலை + பகுதி | | 26 | துயர் + அறிந்த | |
| 12 | படை + களம் | | 27 | வால் + ஆடியது | |
| 13 | ஆடு + குட்டி | | 28 | ஆல் + இலை | |
| 14 | குப்பை + கூடை | | 29 | பேர் + என்ன | |
| 15 | கூழை + கலக்கி | | 30 | கற்பூரம் + சட்டி | |

**4.4.4 வாக்கிய இடைவெளி நிரப்பல், விடையை தெரிந்து கோடிடல் குறு விடை வினாக்களுக்கு விடை எழுதுக.**

**கீறிட்ட இடங்களை பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக**

*(பார்த்தனர், இறங்கினர், இல்லை, போனார்கள், திறந்துவிட்டாள், பரவியது, இருந்தன, கதறினான்)*

1 இருவரும் காதியிடம் ........................................................

2 வீட்டுப்படலையை மனைவி ..................................................

3 பிள்ளையார் கோயிலின் காண்டாமணியோசை ஊரெல்லாம் ..............................................

4 ஆண்களும் பெண்களும் அங்குமிங்கும் நின்று வேடிக்கை ..............................................

5 அவர்கள் எல்லோரும் பஸ் வண்டியிலிருந்து ......................................................

6 ஆதவன் "பாம்பு, பாம்பு" என்று ........................................................

7 போகும் வழியில் இரண்டு அகழிகள் ..................................................

8 பெற்றார் ஆசிரியர் சங்கத்திடம் பணம் ..................................................

☒ ***சரியான விடையின் கீழ் கோடிடுக.***

1 முட்டையிட்டு குஞ்சு பொரிப்பவை

1) மாடு 2) கோழி 3) காகம் 4) தவளை

2 நெல் சேமித்து வைக்கப்படும் இடம்

1) கடை 2) வீடு 3) களஞ்சியம் 4) சந்தை

3 இனிப்பின் சுவை அறிய உதவுவது

1) காது 2) கண் 3) நாக்கு 4) மூக்கு

4 நீருடன் கலக்காத பொருள்

1) பால் 2) தேநீர் 3) மண்ணெண்ணை 4) சோடா

5 தாவரங்களில் உணவு தயாரிக்க பயன்படும் பகுதி

1) வேர் 2) இலை 3) தண்டு 4) பூ

6 அசுத்த நீரினால் உண்டாகும் நோய்

1) வயிற்றுளைவு 2) காய்ச்சல் 3) வயிற்று நோவு 4) தலையிடி

7 நோய் காவிகளில் ஒன்று

1) இலையான் 2) சிலந்தி 3) குருவி 4) நாய்

8 கொழுப்புச்சத்து அடங்கிய உணவு

1) கடலை 2) கோதுமை 3) எண்ணெய் 4) தேன்

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1) இலங்கை ஜனாதிபதியின் பெயர் என்ன ?

..........................................................................................................................................

2) இலங்கை எப்போது சுதந்திரம் அடைந்தது ?

..........................................................................................................................................

3) ஒலிம்பிக் போட்டி எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் ?

..........................................................................................................................................

4) இலங்கை தேசப் படத்தை வரைந்தவர் யார் ?

..........................................................................................................................................

5) இலங்கை தேசிய கீதத்தை இயற்றியவர் யார் ?

..........................................................................................................................................

**4.4.5. பந்தி உரைப்பகுதி பாடல், கதை, குறுநாடகம் ஒன்றினை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.**

☒ கீழ்க்காணும் உரையாடலை வாசித்து கேட்கப்படும் கேள்விகட்கு விடை தருக.

இந்த நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு எதுவென்று கேட்டால் கம்பியூட்டர் தான் என்று கூசாமற் சொல்லலாம். இதைக் கணிப்பான், கணிப்பொறி, கணணி என்று பலவாறாகக் குறிப்பிடுவர். கம்பியூட்டர் என்ற சொல் மிகவும் பிரபல்யமாகி விட்டதால் நாம் அதைக் குறிப்பிடும் போது கம்பியூட்டர் என்றே கூறுகின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக இதன் உருவம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது. இன்று வீடுகளில் பயன்படுத்தக் கூடிய வீட்டுக் கொம்பியூட்டர்களும் சந்தைக்கு வந்து விட்டன. கம்பியூட்டரைப்பற்றி நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் ? நாம் கம்பியூட்டரை வாங்கப்போவதில்லையே. எங்களுக்கு கம்பியூட்டரை இயக்கவும் தெரியாதே இதனால் என்ன பிரயோசனம் ? இவை போன்ற கேள்விகள் உங்கள் மனதில் எழலாம்.

**4.4.6 இலகுவான தொடர்களை பொருத்தமாக வாக்கியங்களில் அமைத்து எழுதுதல்.**

## மரபுத் தொடர்

| | | |
|---|---|---|
| அடுக்குப்பன்னுதல் | - | ஆயத்தம் செய்தல் |
| கைகொடுத்தல் | - | துன்பத்தில் உதவுதல் |
| காதுகுத்தல் | - | ஏமாற்றுதல் |
| கை விரித்தல் | - | கொடுக்க எதுவும் இல்லையென்றல் |
| பதம்பார்த்தல் | - | சோதனை செய்தல் |
| மனப்பால் குடித்தல் | - | கற்பனை செய்தல் |
| கரிபூசுதல் | - | மானங் குறைத்தல் |
| வழிபார்த்தல் | - | உபாயந்தேடுதல் |
| வாயூறுதல் | - | ஆசை படுதல் |
| வாரிஇறைத்தல் | - | அளவிற்றி செலவு செய்தல் |
| தலைகவிழ்தல் | - | வெட்கமடைதல் |
| பிஞ்சிற்பழுத்தல் | - | இளமையில்முதிர்தல் |
| ஒத்துப்பாடுதல் | - | ஆதரவுகொடுத்தல் |
| செவிசாய்தல் | - | இணங்கிக்கேட்டல் |
| சுரண்டப்படுதல் | - | கவரப்படுதல் |
| தலைசிறத்தல் | - | மிகச்சிறப்புபெறல் |
| தோள்கொடுத்தல் | - | பொறுப்பேற்றல் |
| நடைப்பிணம் | - | ஒன்றும் இல்லாதவர் |
| நாக்குபுரளுதல் | - | தவறுதல் |
| பம்பரமாட்டுதல் | - | அலைக்கழித்தல் |
| முதலைக்கண்ணீர் | - | பொய்யிரக்கம் |
| வாய்மலர்தல் | - | பேசுதல் |
| முகம்முறிதல் | - | வெறுப்படைதல் |
| வால் பிடித்தல் | - | பந்தம் பிடித்தல் |
| வேரூன்றல் | - | நிலைத்தல் |
| அரைமனிதன் | - | மதிப்பில்லாதவன் |
| அள்ளிக்குவித்தல் | - | நிறைய சம்பாதித்தல் |
| அடிபிழைத்தல் | - | நெறிதவறுதல் |

| | | |
|---|---|---|
| அவசரக்குடுக்கை | - | அமைதியற்றவன் |
| ஆகாயக்கோட்டை | - | பொய்க்கற்பனை |
| தலையெடுத்தல் | - | ஆட்படுத்தல் |
| நாக்குநீளுதல் | - | அடக்கமின்றிப்பேசுதல் |
| சந்தியில் நிற்றல் | - | ஆதரவின்றி நிற்றல் |
| கையளித்தல் | - | ஒப்படைத்தல் |
| கழுத்துக் கொடுத்தல் | - | பிறருக்கு உதவுதல் |
| கைகலத்தல் | - | சண்டையிடல் |
| கை தூக்கிவிடல் | - | துன்பத்தில் கலத்தல் |
| கையைகடித்தல் | - | நட்டமடைதல் |
| முகம்முறிதல் | - | வெறுப்படைதல் |

## இணை மொழிகள்

**கீழ்க்காணும் இணைமொழிகளை வாக்கியத்தில் அமைக்கவும்.**

1. அகமும் புறமும் :...........................................................................................
2. அகட விகடம் :...........................................................................................
3. அக்கம் பக்கம் :...........................................................................................
4. அடங்கி ஒடுங்கி :...........................................................................................
5. அடித்து பிடித்து :...........................................................................................
6. அண்டையயல் :...........................................................................................
7. அந்தியும் சந்தியும் :...........................................................................................
8. அருமை பெருமை :...........................................................................................
9. அரை குறை :...........................................................................................
10. அலுங்கிக் குலுங்கி :...........................................................................................
11. அல்லும் பகலும் :...........................................................................................
12. அழிந்தொழிந்து :...........................................................................................
13. அழுத்தந்திருத்தமாய் :...........................................................................................
14. அறக்கப் பறக்க :...........................................................................................
15. அறிவாற்றல் செயலாற்றல் :...........................................................................................
16. ஆடல் பாடல் :...........................................................................................

17. ஆடி அசைந்து :..........................................................................................

18. ஆயிற்று போயிற்று :..........................................................................................

19. ஆய்ந்து ஓய்ந்து :..........................................................................................

20. இசகு பிசகாய் :..........................................................................................

21. இல்லாததும் பொல்லாததும் :..........................................................................................

22. இழுப்பும் பறிப்பும் :..........................................................................................

23. ஈடும் எடுப்பும் :..........................................................................................

24. ஈவு இரக்கம் :..........................................................................................

25. உப்பும் சப்பும் :..........................................................................................

26. உயிரும் உடலும் :..........................................................................................

27. உருட்டு பிரட்டு :..........................................................................................

28. உருண்டு திரண்டு :..........................................................................................

29. உற்றார் உறவினர் :..........................................................................................

30. ஊண் உறக்கம் :..........................................................................................

31. ஊரும் பேரும் :..........................................................................................

32. எண்ணும் எழுத்தும் :..........................................................................................

33. எலும்பும் தோலும் :..........................................................................................

34. ஏசிப் பேசி :..........................................................................................

35. ஏழை எளியவர் :..........................................................................................

36. ஏழை பாழை :..........................................................................................

37. ஏற்றம் இறக்கம் :..........................................................................................

38. ஏறுக்கு மாறு :..........................................................................................

39. ஓடி ஆடி :..........................................................................................

40. ஓட்டமும் நடையுமாய் :..........................................................................................

41. ஒட்டி உலர்ந்து :..........................................................................................

42. ஒண்டி சண்டி :..........................................................................................

43. ஒண்டி ஒதுங்கி :..........................................................................................

44. ஒப்புயர்வு :..........................................................................................

45. ஓய்ச்சல் ஒழிவு :..........................................................................................

46. கணக்கு வழக்கு :..............................................................................................

47. கண்டதுண்டம் :..............................................................................................

48. கண்டது கேட்டது :..............................................................................................

49. கண்ணீரும் கம்பலையும் :..............................................................................................

50. கண்ணும் கருத்துமாய் :..............................................................................................

51. கத்திக் கதறி :..............................................................................................

52. கந்தல் கூளம் :..............................................................................................

53. கள்ளங் கபடு :..............................................................................................

54. கன்றுகாலி :..............................................................................................

55. காடுஞ் செடியும் :..............................................................................................

56. காடு கரை :..............................................................................................

57. காய்ந்து கருகி :..............................................................................................

58. கிட்டத் தட்ட :..............................................................................................

59. கீரியும் பாம்பும் :..............................................................................................

60. குத்திக் குதறி :..............................................................................................

61. குழலும் யாழும் :..............................................................................................

62. குறுக்கும் நெடுக்கும் :..............................................................................................

63. குறை நிறை :..............................................................................................

64. குற்றங் குறை :..............................................................................................

65. குற்றுயிரும் கொலையுயிரும் :..............................................................................................

66. கூட மாட :..............................................................................................

67. கூடிக் குலாவி :..............................................................................................

68. கூன் குருடு :..............................................................................................

69. கொஞ்சிக் குலாவி :..............................................................................................

70. கொத்திக் குதறி :..............................................................................................

71. கேள்வி முறை :..............................................................................................

72. கையுங் களவுமாய் :..............................................................................................

73. கையும் மெய்யும் :..............................................................................................

74. கோட்டை கொத்தளம் :..............................................................................................

75. கோயில் குளம் :..............................................................................................

76. சட்ட திட்டம் :..................................................

77. சண்டை சச்சரவு :..................................................

78. சந்து பொந்து :..................................................

79. சாக்குப் போக்கு :..................................................

80. சாடைமாடை :..................................................

81. சிரித்து மழுப்பி :..................................................

82. சீராட்டிப் பாராட்டி :..................................................

83. சீரும் சிறப்பும் :..................................................

84. சீறிச்சினந்து :..................................................

85. சுக்கு நூறாய் :..................................................

86. சுளிவு நெளிவு :..................................................

87. சுற்றும் முற்றும் :..................................................

88. சூடு சுரணை :..................................................

89. செடி கொடி :..................................................

90. செடி செத்தை :..................................................

91. சொத்து சுகம் :..................................................

92. தங்குதடை :..................................................

93. தட்டிக் கழித்து :..................................................

94. தட்டுத் தடங்கல் :..................................................

95. தட்டு முட்டு :..................................................

96. தப்புந் தவறும் :..................................................

97. தாயும் சேயும் :..................................................

98. தாறு மாறு :..................................................

99. துள்ளித்துடித்து :..................................................

100. தூசு துரும்பு :..................................................

101. தூப தீபம் :..................................................

102. தோட்டந்துரவு :..................................................

103. நகை நட்டு :..................................................

104. நரை திரை :..................................................

105. நாணிக் கோணி :..................................................

106. நாயும் பேயும் :........................................................................................................

107. நாளுங் கிழமையும் :........................................................................................................

108. நீட்டி நிமிர்ந்து :........................................................................................................

109. நெட்டை குட்டை :........................................................................................................

110. நைந்து பிய்ந்து :........................................................................................................

111. நோய் நொடி :........................................................................................................

112. பட்டி தொட்டி :........................................................................................................

113. பண்பும் பரிவும் :........................................................................................................

114. பயிர் பச்சை :........................................................................................................

115. பழக்க வழக்கம் :........................................................................................................

116. பழியும் பாவமும் :........................................................................................................

117. பற்றிப் படர்ந்து :........................................................................................................

118. பாயும் படுக்கையும் :........................................................................................................

119. பாலும் தேனும் :........................................................................................................

120. பிய்த்துப் பிடுங்கி :........................................................................................................

121. பிள்ளை குட்டி :........................................................................................................

122. புல் பூண்டு :........................................................................................................

123. பூவும் பிஞ்சும் :........................................................................................................

124. பூசி மெழுகி :........................................................................................................

125. பேரும் புகழும் :........................................................................................................

126. பொய்யும் புளுகும் :........................................................................................................

127. போரும் பூசலும் :........................................................................................................

128. மட்கி மறைந்து :........................................................................................................

129. மட்டு மதிப்பு :........................................................................................................

130. மந்திர தந்திரம் :........................................................................................................

131. மரம் மட்டை :........................................................................................................

132. மருந்து மாயம் :........................................................................................................

133. மாடு கன்று :........................................................................................................

134. மூச்சுப் பேச்சு :........................................................................................................

135. முட்டி மோதி :........................................................................................................

136. மூலை முடுக்கு :..............................................................................................................................

137. மேடு பள்ளம் :..............................................................................................................................

138. மேள தாளம் :..............................................................................................................................

139. வம்பு தும்பு :..............................................................................................................................

140. வற்றி வரண்டு :..............................................................................................................................

141. வாட்டி வதக்கி :..............................................................................................................................

142. வாடி வதங்கி :..............................................................................................................................

143. வாயைக் கட்டி
வயிற்றைக் கட்டி :..............................................................................................................................

144. வாரி வகிர்ந்து :..............................................................................................................................

145. வாழ்வும் தாழ்வும் :..............................................................................................................................

## 4.2 விரைவாக எழுதுந் திறனை விருத்தி செய்தல்

### 4.2.1 பார்த்து எழுதுதல்

✧ கீழ்க்காணும் நாடுகளும் சின்னங்களும் என்பவற்றை பார்த்து உறுப்பாக,இடைவெளி விட்டு சீராக எழுதுக.

## நாடுகளும் சின்னங்களும்

| நாடு | சின்னம் |
|---|---|
| இலங்கை.................. | வாளுடன் சிங்கம் |
| இந்தியா .................. | சிங்கத்தின் தலைகள் |
| அமெரிக்கா................. | தங்கத்தடி |
| அவுஸ்திரேலியா......... | கங்காரு |
| ∴பிரான்ஸ்.................. | அல்லி |
| பிரிட்டன்..................... | ரோஜா |
| கனடா......................... | வெள்ளை அல்லி |
| டென்மார்க்................. | கடற்கரைச்செடி |
| ஈரான்.......................... | ரோஜா |
| ஜப்பான்...................... | கூட்டுப் புழுக்கூடு |
| பாகிஸ்தான்................ | பிறை |
| ஸ்பெயின்................... | கருடன் |
| அயர்லாந்து................ | ஹாப்ராக் மலர் |

✓ கீழ்க்கவிதையை பார்த்து அழகாக எழுதக் கற்றுக்கொள்ளவும்.

## கற்றுக் கொள்

பூக்களைப் பார்
சிரிப்பைக் கற்றுக் கொள்!
நாய்களைப் பார்
நன்றியைக் கற்றுக் கொள்!
எறும்புகளைப் பார்
உழைப்பைக் கற்றுக் கொள்!
காக்கையைப் பார்
ஒற்றுமையைக் கற்றுக் கொள !

அலையைப் பார்
முயற்சியைக் கற்றுக் கொள்!
கொக்குகளைப் பார்
பொறுமையைக் கற்றுக் கொள்
தேனீக்களைப் பார்
சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்!
மரங்களைப் பார்
உதவும் குணத்தைக் கற்றுக் கொள் !

### 4.2.2 கேட்டெழுதுதல்

பாடப்புத்தகத்தில் "நாங்கள் உடைகள்" என்ற பாடத்தின் இரண்டாம் பந்தியை ஆசிரியர் கூறக் கேட்டு கீழே எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

கீழ்க்காணும் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைக்குக.

1. அலை அலையாக

.............................................................................................................

2. அடுக்கடுக்காய்

.............................................................................................................

3. கட்டுக் கட்டாய்

.............................................................................................................

4. கத்தை கத்தையாக

.............................................................................................................

5. கூறு கூறாக

..........

6. கூடை கூடையாய்

..........

7. கூட்டங் கூட்டமாய்

..........

8. சீப்பு சீப்பாய்

..........

9. பெட்டி பெட்டியாய்

..........

10. மந்தை மந்தையாக

..........

11. துண்டு துண்டாக

..........

12. வரிசை வரிசையாக

..........

**4.2.3. அளவு, அமைப்பு, உறுப்பு, தெளிவு, சீரான இடைவெளி ஆகியவற்றுடன் எழுதுதல்.**

பாடநூலில் உள்ள "சிவப்பு ரோஜா" பாடத்தில் முதல் இரு பந்திகளையும் அளவு,அமைப்பு, உறுப்பு, தெளிவு ஆகியவற்றுடன் சீராக எழுதுக.

..........

..........

..........

..........

..........

..........

..........

**4.2.4. சுயமாக அழகாக விரைவாக எழுதுதல்**

பாடநூலில் அமைந்துள்ள மௌலவி முஹம்மது உமரின் மணி மொழியைப் பார்த்து அழகாக விரைவாக எழுதுக.

..........

..........

..........

..........

..........

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

## 4.3 கருத்துக்கள் பொருத்தமாக வெளிப்படுத்தும்மாறு அமைத்து எழுதுதல

### 4.3.1 கீழ்க் காணும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பூரண கருத்து உள்ள வாக்கியம்மாக எழுதுக

1. விமானத்தின் / இயக்கமே / பொறிகளின் / ஓட்டம / நூற்றுக்கணக்கான

..........................................................................................................................................................

2. நீல / தெளிவாக / நிறத்தை / அவை / அறிவதில்லை

..........................................................................................................................................................

3. பறவைகளுக்கு / உள்ள / இரண்டு / கண்களில் / மையங்கள்

..........................................................................................................................................................

4. விருப்பு / பறவைகளுக்கு / என்றால் / சிவப்பு

..........................................................................................................................................................

5. வண்ணங்களை / பறவைகள் / காண்கின்றன / வேறுபடுத்தி

..........................................................................................................................................................

### 4.3.2 சொற்கள் - சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைத்தல்

கீழ்க் காணும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. சித்திரம் :..........................................................................................................................
2. முழக்கம் :..........................................................................................................................
3. வறுமை :..........................................................................................................................
4. இரக்கம் :..........................................................................................................................
5. பிரியம் :..........................................................................................................................
6. அறுசுவை :..........................................................................................................................
7. முத்தமிழ் :..........................................................................................................................
8. பொழில் :..........................................................................................................................
9. அருக்கன் :..........................................................................................................................
10. குடபால் :..........................................................................................................................

☒ பின்வரும் சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. குறுக்கும் நெடுக்கும் :..............................................................................................

2. அதிரும் புதிரும் :..............................................................................................

3. அங்கும் இங்கும் :..............................................................................................

4. பத்துப் பத்து :..............................................................................................

5. சீருஞ் சிறப்பும் :..............................................................................................

### 4.3.3 திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை அனுசரித்து வாக்கியம் எழுதுதல்

#### திணை

கீழ்காணும் வாக்கியங்களை அட்டவணையில் உயர் திணை, அ·்றிணை என அட்டவணை படுத்துக.

1. இளம் விவசாயிகள் விளையாட்டு விழாவை நடத்தினர்
2. மாடு புல் மேய்ந்தது
3. காகம் கறுப்பு நிறம்
4. சிவனொளிபாதமலை மிக உயரமானது.
5. காந்தன் மரம் நாட்டினான்

| உயர்திணை | அ·்றிணை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

#### பால்

கீழ்க்காணும் வாக்கியங்களின் பால் : ஆண்பாலா, பெண்பாலா, பலர்பாலா, ஒன்றின் பாலா, பலவின் பாலா என அட்டவணையில் தருக.

| **வாக்கியம்** | **பால்** |
|---|---|
| காந்தன் சித்திரம் வரைந்தான் | |
| சுசிலா நடனம் ஆடினாள் | |
| சிறுவர்கள் ஓடியாடி விளையாடினார்கள் | |
| காந்திமதி சந்தைக்கு சென்றாள் | |
| காகம் காலையில் கா...கா.... எனக் கத்தியது | |
| கோழிகள் உணவு உண்டன | |
| கிளிக்கு சொண்டு உண்டு | |

## எண்

மேலே தந்த வாக்கியங்களை ஒருமை பன்மை அட்டவணையில் தருக.

| வாக்கியம் | ஒருமை | பன்மை |
|---|---|---|
| காந்தன் சித்திரம் வரைந்தான். | | |
| சுசிலா நடனம் ஆடினாள். | | |
| சிறுவர்கள் ஓடி விளையாடினார்கள். | | |
| காந்திமதி சந்தைக்கு சென்றாள். | | |
| காகம் காலையில் கா...கா.... எனக் கத்தியது. | | |
| கோழிகள் உணவு உண்டன. | | |
| கிளி அழகான பறவை. | | |

## இடம்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| தன்னைக் குறிப்பது | முன்னால் இருப்போரை குறிப்பது | தன்னையும் தன்முன் இருப்போரையும் தவிர ஏனைய பொருட்களை குறிப்பது. |
| நான், நாம், நாங்கள் எள், எம் , எங்கள் | நீ, நீர், நீவீர், நீங்கள், உன் உம், உங்கள். | அவன், அவள், அவர், அவர்கள் , அது , அவை அவை , இவை, அவற்றை இவற்றை. |

### 4.3.4 எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, அடைமொழி

யார், எது, என்னும் கேள்விக்கு, கிடைக்கும் விடையே - எழுவாய் (வேற்றுமை ஏற்காத பெயர்சொல்)

முடிந்த வேலையை, கருத்தை உணர்த்தும் சொல். - பயனிலை ( வினை )

யாரை, எதை என்னும் கேள்விக்கு கிடைக்கு விடையே - செயற்படுபொருள் வேற்றுமை ஏற்ற பெயர் சொல்.

❀ கீழ்க் காணும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருளைத் அட்டவணையில் தருக.

1. நாம் இளமையில் கற்க வேண்டும்
2. எத் தொழிலையும் ஆர்வத்துடன் செய்யவேண்டும்
3. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
4. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
5. காலைக் காட்சி கண்ணுக்கு குளிர்மையானது.

| எழுவாய் (யார் எது பெயர் ) | பயனிலை ( வினை ) | செயப்படுபொருள் (யாரை , எதை) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

◎ **அடுத்து அடை மொழிகளைப் பார்ப்போம்**

எழுவாயை சிறப்பிப்பது எழுவாய் அடைமொழி

பயனிலை சிறப்பிப்பது பயனிலை அடைமொழி

உ+ம் பச்சைக் கிளி - பச்சை - எழுவாய் அடைமொழி

உறிஞ்சிக் குடித்தன - உறிஞ்சி - பயனிலை அடைமொழி

*கீழ்க்காணும் அடைமொழியை என்ன அடைமொழி என எழுதுக.*

| வாக்கியம் | எ.அ.மொழியா? | ப.அ.மொழியா |
|---|---|---|
| 1. ஆடு துள்ளி விளையாடியாது | | |
| 2. அழகிய வண்டுகள் | | |
| 3. இனிமையான தேன் | | |
| 4. பாய்ந்து ஓடியது | | |
| 5. வண்ணப் பூகக்கள் | | |
| 6. பழுத்த பழம் | | |
| 7. குடித்து மகிழ்ந்தான் | | |
| 8. அழகான தோகை | | |
| 9. எழில்லாக சேலை | | |
| 10. அழகாக பாடினாள் | | |

## 4.5 பொருத்தமான இடங்களில் குறியீடுகளை இட்டு எழுதுதல்

### 4.5.1 குறியீடுகளின் பயன்பற்றி அறிதல்

வாக்கியங்களின் கருத்து தெளிவும், உணர்ச்சி வெளிப்பாடும், கருத்துக்கள் மூலமே வெளிப்படுத்தப்படுகின்றன. வாக்கியங்களின் பொருள் நன்கு விளங்க வேண்டுமானால், ஏற்ற இடத்தில் நிறுத்தி வாக்கியத்தை பிரித்து வாசிக்க வேண்டும். இதற்கு குறியீடுகள் துணை புரிகின்றன.

பொதுவாக நாம் பயன்படுத்தும் குறியீடுகளைப் பார்ப்போம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ( . ) | முற்றுப் புள்ளி அல்லது முடிப்பிசைக் குறி | ( நிறுத்தல் ) |
| 2. | ( , ) | காற்புள்ளி அல்லது உறுப்பிசைக் குறி | ( தரித்தல் ) |
| 3. | ( ? ) | வினாக்குறி அல்லது வினாவிசைக்குறி | ( வினவுதல் ) |
| 4. | ( ! ) | வியப்புக்குறி அல்லது மெய்ப்பாட்டுக் குறி அல்லது விளிப்பிசைக் குறி | ( விளித்தல் ) |
| 5. | ( : ) | முக்காற்புள்ளி அல்லது விளக்கிசைக்குறி | ( தரித்தல் ) |
| 6. | ( ; ) | அரைப்புள்ளி அல்லது தொடரிசைக்குறி | ( இடைநிறுத்தம் ) |
| 7. | (" ") | மேற்கோட்குறி அல்லது அனுவாதக்குறி | ( உணர்ச்சி வெளிப்படல் தன் கூற்று ) |
| 8. | ( ) | அடைப்புக்குறி | ( மேலதிக விளக்கம்) |

### 4.5.2 முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி, அடைப்புக்குறிகள் என்பவற்றை பொருத்தமாக இடுதல், பிரயோகித்தல்.

**முற்றுப்புள்ளி :- (.)** கருத்து முடிவு பெற்றதை உணர்த்த முற்றுப்புளி இடப்படும்.

1. வாக்கியங்களின் முடிவில் : உ+ம்
   1. இலங்கை எமது தாய் நாடு.
   2. கற்றது கையளவு.
   3. மொழித்திறனை வளர்க்க வேண்டும்.
2. தனிச் சொல்லுக்கு பின் : 1) நடிப்பு. 2) தடை. 3) கல்வி.
3. தலைப்புகளுக்கு பின் : 1) கதைக்களஞ்சியம். 2) தினமுரசு. 3) வீரகேசரி.
4. சொற்களின் சுருக்க எழுத்துகளின் பின் ( உ+ம் எஸ். பொ., க. சி. ந. )
5. பட்டப் பெயர்களுக்கு பின் : உயர் திரு., மாண்புமிகு பி..ஏ. எம்.ஏ.
6. கையெழுத்திற்கு பின் : இங்கனம்.
   அன்புள்ள.
   கௌசிகன்.
7. கடித முகவரியின் முடிவில் : R .கௌசிகன்.
   இல.15, குணநந்த மாவத்தை,
   கொழும்பு - 6.

**காற்புள்ளி ( , )**

பல்வேறு பொருள் உள்ள சொற்கள் தொடர்வதைத் தெரிவிக்க காற்புள்ளி இடப்படும்.

| | |
|---|---|
| சொற்களுக்கு பின் | : பிரசன்னா மொழி விருத்தி, நாமும் சுற்றாடலும், ஆரம்ப விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், ஆக்கத்திறன் ஆகிய பாடங்களை கற்கிறான். |
| வினை எச்சங்களுக்கு பின் | : சாவித்திரி வெகுண்டு, அழுது, புலம்பி, சீறி, யமதர்மராசாவை சந்தித்தாள். |
| தொடரும் வினைச் சொற்களுக்குபின் | : புத்தர் ஞானம் பெற்றார். அன்பு உள்ளம் கொண்டவர், துறவு பூண்டார். |
| கடிதம் முகவரியின் பெயர், பட்டம், வீ.எண், தெரு இவற்றின் பின். | திரு. இராமநாதன். பி.ஏ<br>32, இரட்ணம் றோட்,<br>யாழ்ப்பாணம். |

**வினாக்குறி ( ? )**

இதனைக் கேள்விக்குறி என்றும் கூறலாம். வினைச் சொல் , வினா வாக்கியம், வினாப் பெயர் ஆகியவற்றின் இறுதியில் இக்குறி இடப்படும்.

| | | |
|---|---|---|
| வினாச்சொல் | : உ+ம் | எது ?, எங்கு ?, எப்படி ?, எவை ?, எவ்வாறு ?, என்ன ?, ஏது , ஏன்? , யாது? , யார்? , யாவர்? |
| வினா வாக்கியம் | : உ+ம் | நீ நன்கு படிக்கின்றாயா ?<br>நீ வீட்டுப் பாடங்ககளை தவறாது செய்கிறாயா ? |
| வினாப் பெயர் | : உ+ம் | யார் அது ? ராமனா ?<br>என்ன அது ? கடிதமா ?<br>ஏது இந்த புத்தகம் ? |

**4.5.3 குறியீடுகள் இடாத பந்திகளை வாசித்து குறியீடுகளைப் பொருத்தமாக இட்டெழுதும் பயிற்சிகள்.**

கீழே உள்ள பந்தியை வாசித்து பொருத்தமான குறியீடுகளை இடுக.

காலையில் புல் மேய வந்த மான் குரங்கின் நிலை கண்டு மிகவும் வருந்தியது அது குரங்கைப் பார்த்து என் வீட்டுக்குப் பக்கத்தில் முயல்வைத்தியர் இருக்கிறார் அவரிடம் சென்றால் காய்ச்சலுக்கு மருந்து தருவார் நான்கைந்து நாட்களில் உடல் நலமாகிவிடும் என்னுடன் வருவாயா என்று கூறி அழைத்தது.

## 4.6 நாளந்தத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான எழுத்தாக்கங்கள்.

### 4.6.1 படிவங்களை நிரப்புதல்

மாணவர்கள் தபாலகம் ஒன்றில் சென்று காசுக் கட்டளை பெறுவதற்காக தபால் கந்தோரில் விசாரிக்கும் உரையாடல் ஒன்றைப் பார்ப்போம்.

பிரசன்னா : ஐயா, வணக்கம் நான் எனது பெற்றோருக்கு காசு அனுப்ப வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்.

தபால் உதவியாளர் : நீங்கள் அனுப்ப வேண்டிய காசுத் தொகையை நிரப்பி இந்த விண்ணப்ப படிவத்தை எமக்கு தாருங்கள்.

கீழே விண்ணப்ப படிவம் உள்ளது.

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව

තැ.කා.පි. / அ.அ.சி. / P.O.C. } 1

(M 8* S,T.&E.) 11/83

**දේශීය සාමාන්‍ය මුදල් ඇණවුම් ඉල්ලුම් පත්‍රය**

**உள்நாட்டுச் சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்**

**APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER**

මුදල / தொகை / AMOUNT — රු. / ரூ. / Rs. ............ ශ. / ச. / c. ............ අංකය / இல. / No. ............

රුපියල් (අකුරෙන්) / ரூபா. (சொல்லில்) / Rupees (in Words) ____________________

ගෙවන කාර්යාලය / கொடுபடவேண்டிய இடம் / Payable at ____________________

ලබන අය (මුලකුරු සමග) / பெறுபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Recipient (with initials) ____________________

යවන්නාගේ නම (මුලකුරු සමග) / அனுப்புபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Remitter (with initials) ____________________


යවන්නාගේ ලිපිනය / அனுப்புபவரின் முகவரி / Address of Remitter ____________________

දිනය / திகதி / Date ____________

____________________
අත්සන/கையொப்பம்/Signature

500/= காசுக் கட்டளை அனுப்புவதற்காக விண்ணப்ப படிவத்தை மாணவர்கள் பூர்த்தி செய்யுங்கள்.

☒ வங்கியொன்றில் காசோலை ஒன்றினை வைப்புச் செய்வதற்கான படிவமொன்று கீழே தரப்பட்டு உள்ளது ஆசிரியரின் அறிவுரைக்கிணங்க அதனை பூர்த்தி செய்க.



සීමාසහිත හැටන් නැෂනල් බැංකුව
வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி
HATTON NATIONAL BANK LTD

ශාඛාව / கிளை / Branch ..................

දිනය / திகதி / DATE

චෙක් තැන්පතුව / காசோலை வைப்பு / CHEQUE DEPOSIT

ගිණුම් හිමියාගේ නම / கணக்காளரின் பெயர் / NAME OF ACCOUNT HOLDER

ගිණුම් අංකය / கணக்கு இல. / ACCOUNT NO.

රුපියල් / ரூபா / Rupees

| බැංකුවේ නම / வங்கியின் பெயர் / NAME OF BANK | චෙක්පත් අංකය / காசோலை இல. / CHEQUE NO. | රුපියල් / ரூபா / Rupees | ශත / சதம் / Cts. |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

තැන්පත්කරුගේ අත්සන / வைப்பிடுபவரின் ஒப்பம் / DEPOSITOR'S SIGNATURE

එකතුව / மொத்தம் / TOTAL

TELLER IMPRINT / AUTHORISED OFFICER

TELLER'S INITIAL

චෙක්පත් ගණන / காசோலைகளின் எண்ணிக்கை / NO. OF CHEQUES

බැංකු පිටපත / வங்கியின் பிரதி / Bank's Copy

CUR 10

⏱ கொழும்பு மாநகரசபை நூலகத்தில் இணைவதற்கான விண்ணபப்படிவம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பூர்த்தி செய்க.

## நூலக அங்கத்துவப் படிவம்

முழுப் பெயர் :..........................................................................................

முகவரி :..........................................................................................

பாடசாலைப் பெயர் :..........................................................................................

வீட்டு முகவரி :..........................................................................................

தொலைபேசி இல. :..........................................................................................

என்னால் மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானது எனவும் நூலக சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுகிறேன் எனவும் உறுதி அளிக்கின்றேன்.

...................................
அதிபர் கையொப்பம்

...........................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

## 4.6.2 கடிதம் எழுதுதல்

கடிதம் எழுதுவது ஒரு கலையாகும். தூரத்திலுள்ள பெற்றாருக்கோ, உறவினர்க்கோ, நண்பர்களுக்கோ கடிதம் எழுதுகிறோம். கடிதம் பெறும் போது எல்லோரும் அதிகமாக மகிழ்ச்சி அடைகின்றனர்.

கடிதங்கள் பல வகைப்படும் அவையாவன

1. உறவு முறைக் கடிதம்
2. அலுவலகக் கடிதம்
3. அழைப்புக் கடிதம்
4. விண்ணப்பக் கடிதம்
5. அறிவூட்டற் கடிதம்
6. பத்திரிகைக்கு கடிதம்

❁ நீங்கள் பாடசாலையில் தங்கியிருந்து படிக்கும் மாணவர் என எண்ணி, நீங்கள் எவ்வாறு உங்கள் தாய் தந்தையருக்கு கடிதம் எழுதுவீர்கள் என்பதை எழுதிக் காட்டவும்.

............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................
............................................................................................................................................

**4.6.3 அறிவித்தல், அழைப்புகள், நிகழ்ச்சி நிரல், விளம்பரம் அறிக்கை எழுதுதல்**

கீழ்க் காணும் பரிசளிப்பு விழாவுக்கான அழைப்பிதழை கருத்திற் கொள்க.

**நாவற்குழியூர் நடராஜன் நினைவுக்கவிதைப் போட்டி**
**பரிசளிப்பு விழா**

திரு/திருமதி/செல்வி........................................................................................................

அன்புடையீர்,

"பிறைட் புக் சென்டர்" ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபான தமிழ் தேசிய சேவை. அமரர் நாவற்குழியூர் நடராஜன் நினைவாக நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும்

2.6.1996 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு
வெள்ளவத்தை. 57ம் ஒழுங்கை தமிழ்ச்சங்க மண்டபத்தில்
நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி

திரு.பொன் சக்திவேல்,
பிறைட் புக் சென்டர் (பிறைவேட்) லிமிடெட்,
எஸ்.27, முதலாம் மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி,
கொழும்பு - 11.

பணிப்பாளர்
தமிழ் தேசிய சேவை
இ.ஒ.கூ. தாபனம்,
கொழும்பு - 7.

உங்கள் பாடசாலை மன்றக் கூட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றினை கீழே எழுதவும்

.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

## 4.7. பல்வேறு எழுத்தாக்கங்களை ஆக்கி எழுதுதல்

### 4.7.1 கருத்துக்களை பரிமாறும் இலகுவான உரையாடல்கள்.

கீழ்க் காணும் உரையாடல்கள் தந்தைக்கும் மகனுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் என்பதைக்கருத்திற் கொண்டு மகனின் உரையாடலை நீங்கள் ஆக்கி எழுதவும்.

காந்தன் : ......................................................................................................................

தந்தை : ஏன் உமக்கு காசு வேண்டும் ?

காந்தன் : ......................................................................................................................

தந்தை : நீங்கள் பாடசாலையுடன் உல்லாசப்பிரயாணம் போகும் போது பாதுகாப்பாக செல்ல வேண்டும்.

காந்தன் : ......................................................................................................................

தந்தை : எத்தனை ஆசிரியர்கள் உங்களுடன் வருகிறார்கள் ?

காந்தன் : ......................................................................................................................

தந்தை : சரி நானும் உம்முடன் உல்லாசப் பிரயாணத்திற்கு வருகிறேன்.

காந்தன் : ......................................................................................................................

நீங்கள் உள்ளூர் சந்தையில் பொருட்களை விற்பவர்க்கும் வாங்குபவர்க்கும் இடையே நடைபெற்ற உரையாடல் ஒன்றை ஆக்கி எழுதுக.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

## 4.7.2 ஒரு பொருள் / நிகழ்ச்சி பற்றி விளக்கி வர்ணித்து எழுதுதல்

கீழ்க்காணும் நிகழ்ச்சிகளில் ஒன்றைப்பற்றி வர்ணித்து எழுதுக.

1. நான் பார்த்த விளையாட்டுப் போட்டி.
2. இயற்கைக் காட்சிகள்.
3. நான் பார்த்து ரசித்த மொழித்தின விழா
4. புத்தகத்தின் சுயசரிதை

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

## 4.7.3 அனுபவம் பற்றி விளக்கி வர்ணித்து எழுதுதல்

கீழ்க் காணும் ஒன்றினைப்பற்றி உமது அனுபவத்தை வர்ணித்து எழுதுக.

1. நான் வளர்த்த பூ மரங்கள்.
2. நான் உருவாக்கிய பொம்மை
3. நான் செய்த காலை உணவு
4. நான் செய்த பட்டம்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

## 4.7.4 இனிய பாடல்கள் கவிதை எழுதுதல்

மாணவர்கள் கீழ்க்காணும் கவிதையை படித்த பின் தரப்பட்டுள்ள தலைப்பில் நீங்கள் ஒரு கவிதை ஆக்கி எழுதுக.

## அணில்

அணிலே, அணிலே, ஓடி வா
அழகு அணிலே ஓடி வா

கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா

பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்

கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

- அழ வள்ளியப்பா -

கீழ்க்காணும் தலைப்பில் ஒரு தலைப்பு பற்றி கவிதையை ஆக்கி எழுதுக.

1. மழை
2. பூக்கள்
3. வளர்ப்பு பிராணிகள்
4. பாடசாலை
5. நண்பர்கள்

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

### 4.7.5 சிறிய கதை எழுதுதல்

மாணவர்கள் அறிவொளி வெளியீடாக வரும் கீழ்க் கண்ட சிறிய கதைகளை படித்திருப்பது மூலம் கதை ஒன்றை ஆக்கி எழுத முடியும். அறிவொளி சிறுவர்களை கீழ்க்காண்பவை மாணவர்கட்கு சிறந்தது.

1. தென்னாலிராமன் கதைகள்
2. அலிபாபாவும் 40 திருடரும்
3. முல்லா கதைகள்
4. அந்தரேயின் கதைகள்
5. முட்டாள் குருவும் சீடர்ரும்

இவற்றை படித்த பின் கதையொன்றை ஆக்கி எழுதுங்கள்.

### 4.7.6 குறு நாடகங்களை எழுதுதல்

மாணவர்கள் பாடநூலில் உள்ள ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, சின்னவன் வென்றான், கொடுத்தார்க்கும் குறைவில்லை போன்ற கதைகளை நாடகமாக எழுதிப் பழகவும்.

### 4.7.7 வாழ்த்து மடல்கள் எழுதுதல்

வாழ்த்து மடலைகளை அவதானித்து நீங்கள் ஒரு வாழ்த்து மடலை எழுதுங்கள்.

## 4.8. மொழிப் பயிற்சிகளில் ஈடுபடல்

### 4.8.1 வாக்கிய அமைப்பொழுங்கு

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி, தோன்றா எழுவாய் ஆகியவற்றை கீழ்க்காணும் வாக்கியங்களில் தெரிவு செய்து அட்டவணையில் பூர்த்தி செய்க.

1. குளத்தில் தாமரை மலர்ந்து இருந்து.
2. வானொலியில் பாட்டுகள் ஒலிபரப்பாகியது.
3. மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில ஓடினார்கள்.
4. கண்ணன் வேய்ங் குழல் இசைத்தான்.
5. சுட்டிச் சிறுமி இனிய பாட்டை அழகாகப் பாடினாள்.
6. சோறு சாப்பிட்டேன்.
7. மாகாண சபையில் முறையிட்டனர்.
8. பாய்மரக் கப்பல் புயலில் அகப்பட்டது.
9. இந்தியா ஏவுகணைகளை விண்வெளியில் செலுத்தினர்.
10. படைப்புகளை தோற்றுவித்தவர் இறைவன்.

| | எழுவாய் | தோன்றா எழுவாய் | எழுவாய் அடைமொழி | பயனிலை | பயனிலை அடைமொழி | செயப்படுபொருள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |
| 6. | | | | | | |
| 7. | | | | | | |
| 8 | | | | | | |
| 9. | | | | | | |
| 10. | | | | | | |

**4.8.2 திணை, பால், எண் , இடம் , காலம் , ஆகியவற்றை கீழ்காணும் வாக்கியங்களில் தெரிவு செய்து அட்டவணையை நிரப்புக.**

1. மாமா எனக்கு பரிசு தந்தார்.
2. வில்லவராயர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்.
3. சின்னத்தம்பி புலவர் கவி பாடுவார்.
4. கமலா கோயிலுக்கு சென்றாள்.
5. பிள்ளைகள் பாடசாலைக்கு நேரத்துடன் சென்றார்கள்.
6. மாடு புல் மேய்ந்தது.
7. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
8. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்..

| உ+ம | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| மாமா | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| வில்லவராயர் | | | | | |
| சின்னத்தம்பி புலவர் | | | | | |
| கமலா | | | | | |
| பிள்ளைகள் | | | | | |
| மாடு | | | | | |
| கடவுள் | | | | | |
| புல்லை | | | | | |
| தெரியும் | | | | | |

✉ கீழ்க்காணும் வகையை பிரித்து அவற்றில் வர வேண்டியவற்றை எழுது

திணை

பால்

எண்

பெயர்ச் சொல் (உணர்த்துவது)

இடம்

காலம்

## 4.8.3 பெயர்ச்சொல், வினை அடைமொழி ஆகியவற்றின் பயன்பாடு

கீழக்காணும் சொற்களை பெயர்ச் சொல்வாக்கியம் ஆகவும், வினைச்சொல் வாக்கியமாகவும் எழுதுக.

1. ஆடு -.................................................................................................
   -.................................................................................................
2. ஓடு -.................................................................................................
   -.................................................................................................
3. அணை -.................................................................................................
   -.................................................................................................
4. நடு -.................................................................................................
   -.................................................................................................
5. படி -.................................................................................................
   -.................................................................................................
6. கடி -.................................................................................................
   -.................................................................................................
7. மூடி -.................................................................................................
   -.................................................................................................
8. தடை -.................................................................................................
   -.................................................................................................
9. தொலை -.................................................................................................
   -.................................................................................................
10. கலை -.................................................................................................
   -.................................................................................................

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள அடைமொழியை அட்டவணையில் தருக.

1. மூத்த சகோதரி மல்லிகை மாலைய்ய அள்ளிச் சூடினாள்.
2. அழகிய தேனீர்கள் றோசா மலரில் தேனை உறிஞ்சிக் குடித்தது.
3. கந்தையானாலும் கசக்கி கட்டு.
4. அழகிய விமானம் நீலமயமான வனத்தில் உயரப் பறந்து சென்றது.
5. கரடு முரடான வயல் வெளிகளில் பயிர்கள் முளையாது.
6. அழகிய பொய்கையில் நீர் அருந்த விலங்குகள் வரும்
7. முயற்சி இல்லை எனில் வெற்றி அடையமுடியாது.

| பெயர் அடைமொழி | வினை அடைமொழி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## 4.8.4 பொருத்தமான வாக்கிய முடிவுகளை அமைத்தல்

### திணை

1. கண்ணன் தமிழைக்.................................................... ( கற்றான் / கற்றார்கள் )
2. தமிழ் மன்னர்கள் புலவர்கள்.................................................... ( ஆதரித்தனர் / ஆதரித்தான் )
3. மயில் தோகை விரித்து.................................................... ( ஆடியது / ஆடினர் )
4. இராமன் காட்டுக்குச்.................................................... ( சென்றார்கள் / சென்றான் )
5. சுற்றுலாவிற்கு யாவரும்.................................................... ( போனர் / போனார்கள் )
6. அரசன் நாட்டை ஆட்சி.................................................... ( செய்தார் / செய்தார்கள் )
7. மணியோசை ஊரெல்லாம்.................................................... ( கேட்கின்றது / கேட்கும் )
8. இரண்டு அகழிகள்.................................................... ( இருந்தார்கள் / இருந்தது )

### பால்

1. திவகரன் பாடசாலைக்குச்.................................................... ( சென்றார்கள் / சென்றான் )
2. பறவைகள் பறந்து.................................................... ( சென்றன / சென்றது )
3. மிருகங்கள் காட்டில்.................................................... ( வாழ்ந்தன / வாழ்கின்றன )
4. காகம் உயரத்தில்.................................................... ( பறந்தன / பறந்தது )
5. அரசன் புலவர்கட்கு பொற்கிழி.................................................... ( வழங்கினது / வழங்கினான் )

### எண்

1. .................................... ஓடி விளையாடினார்கள் ( மாணவர் / மாணவர்கள் )
2. .................................... கடைக்குச் சென்றேன் ( நான் / நாங்கள் )
3. .................................... பறந்து சென்றது ( காகம் / காகங்கள் )
4. .................................... சந்தைக்கு சென்றோம் ( அம்மா / அம்மாவும் நானும் )
5. .................................... புல் மேயும் ( பசுக்கள் / பசு )

## இடம்

கீறிட்ட இடங்களை பூர்த்தி செய்க

1. ............................................... நாளை வீட்டுக்கு வருவேன்.
2. ............................................... இன்று பாடசாலைக்கு வரமாட்டேன்.
3. ............................................... இன்று கோவிலுக்கு வருவாயா ?
4. ............................................... தந்தையார் இறந்து விட்டார்.
5. நீ .......................................... வந்தாயா ?

❀ கீழ்க் காணபவற்றில் பொருத்தமான சொல்லை உச்சரிப்புக்கு இணங்க சரியானவற்றின் கீழ்க் கோடிடுக.

நண்டுகள் வளையில் நுழைந்தது / நுழைந்தன.

ஆற்றின் கரையில் ஒரு மரம் இருந்தது / இருந்தன.

மல்லிகைப்பூ மிகுந்த மணம் உடையன / உடையது.

பழங்கள் மிகுந்த சுவை உள்ளவை / உள்ளது.

மேசைமேல் புத்தகம் இருந்தன / இருந்தது.

கொசுக்கள் குழந்தையைக் கடித்தது / கடித்தன.

புயல் காற்று வீசின / வீசியது.

பூக்கள் மலர்ந்தது / மலர்ந்தன.

பழம் பழுத்தது / பழுத்தன.

வண்ண விளக்குகள் ஒளி வீசியது / வீசின.

சிங்கம் கொடியது / கொடியன.

பேருந்து சாலையில் ஓடின / ஓடியது.

வியாபாரிகள் பொருட்களை விற்றன / விற்றார்கள்.

மக்கள் பொருட்களை வாங்கின / வாங்கினார்கள்.

சிறுவர்கள் மரக்கிளையில் உட்கார்ந்து / உட்கார்ந்தனர்.

நீ என்னை ஏன் அழைத்தீர் / அழைத்தாய்.

நாங்கள் தேசியகீதம் பாடினேன் / பாடினோம்.

தேசிய கொடிக்கு மக்கள் மரியாதை செலுத்தின / செலுத்தினர்.

மாணவர்கள் பள்ளி விழாக்களில் பங்குகொள்ள ஆசைப் பட்டன / பட்டனர்

யானை மிகுந்த பலமுடைய மிருகங்கள் / மிருகம்

## 4.8.4 கீழ்க்காணும் விடுகதைகளை விடுவியுங்கள

1. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர்
அவர்களை சுற்றிலும் பன்னிரெண்டு பேர் அது என்ன ? (.............................................)

2. இரவும் பகலும் ஓய்வு இல்லை
படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன ? (.............................................)

3. இந்த ஊரில் அடிப்பட்டவன்
அடுத்த ஊரில் போய்சொல்வான் அவன் யார் ? (.............................................)

4. தண்ணீரில் மிதக்கும் கப்பல் அல்ல
கனமாக இருக்கும் கல்லும் அல்ல
வெயிலில் உருகும் பனி கட்டி அல்ல அது என்ன ? (.............................................)

5. நாக்கில்லாதவன் நாலும் விஷயம் சொல்லுவான்
அவன் யார் ? (.............................................)

6. வெட்டியவனையே அழவைப்பான் வீரப்பன்
அவன் யார் ? (.............................................)

7. தலையைச் சீவினால் தடையின்றி வேலை செய்வான்
அவன் யார் ? (.............................................)

8. ஒட்டுவது ஒருவன் பிரிப்பது இன்னொருவன்
அது என்ன ? (.............................................)

9. வரிசைக்கு பதினாறு ஆனால் என்றும் பதினாறு
அல்ல அது என்ன ? (.............................................)

10. தொம் தொம் மத்தளம் , தாளம் இல்லா மத்தளம் இடுப்பில் ஏறா
மத்தளம், எங்கள் வீட்டு மத்தளம் அது என்ன ? (.............................................)

11. வாயசைக்கும் கதைக்காது. கடித் தெடுக்கும் உண்ணாது.
அது என்ன ? (.............................................)

12. சின்னச் சின்ன மின் குமிழ், நிலத்தில் வளரும் மின்குமிழ்
கண்பட்டால் எம்மைக் கலங்கச் செய்யும் மின் குமிழ்
அது என்ன ? (.............................................)

| | | |
|---|---|---|
| 1. மணிக்கூடு | 5. புத்தகம். | 9. பற்கள் |
| 2. இதயம் | 6. வெங்காயம் | 10. உரல் |
| 3. தந்தி | 7. பென்சில் | 11. கத்தரிக் கோல் |
| 4. ஐஸ்க்ட்டி | 8. கடிதம் | 12. வெங்காயம். |

**4.8.5 ஒழுங்கற்று கிடக்கும் சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியமாக்கி எழுதுக.**

1. கோயிலுமில்லை / சிறந்ததொரு / தாயிற்

.......................................................................................................................................................

2. பரிசோதித்தனர் / வைத்தியர்கள் / நோயாளியை / கவனமாகப்

.......................................................................................................................................................

3. பறவைகள் / கூட்டம் / பறந்து / சென்றன / கூட்டமாக.

.......................................................................................................................................................

4. வெளியூர் , நான் , கடந்தமாதம் , சென்றிருந்தேன்,

.......................................................................................................................................................

5. செய்து கொண்டு , வழிபாடு , வீடு திரும்பினர் , அவர்கள் மூவரும் , கோயில்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

## 4.8.6 பழமொழிகள்

நம் மூதாதையர்கள் தங்களுடைய அறிவு, ஆராய்ச்சி , உலக அனுபவங்கள் இவற்றால் கண்டறிந்த உண்மைமிகுந்த அறிவுரைகள், பொருட் செறிவு நிறைந்த சொற்றொடர்களே பழமொழிகள் ஆகும். இவைகளைப் பொன் மொழிகள் என்றே கூறலாம். இப்பழமொழிகளைத் தகுந்த இடங்களில் பயன்படுத்த நம் பேச்சு நடையும், எழுத்து நடையும் சிறப்புடையனவாகத் திகழும். சில பழமொழிகளை உவமைகளாகவும் பயன்படுத்தலாம்.

பழமொழிகளில் சில :-

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அடாது செய்பவர் படாது படுவர்.
3. அடியாத மாடு படியாது.
4. அள்ளாமல் குறையாது இல்லாமல் பிறவாது.
5. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
6. அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்.
7. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
8. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
9. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
10. ஆடையில்லாதவன் அரை மனிதன்.
11. ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
12. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.
13. ஆனைக்கும் அடி சறுக்கும்.
14. இக்கரைக்கு அக்கரை பச்சை.
15. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
16. இருக்கிறதை விட்டுப் பறக்கிறதைப் பிடிக்கலாமோ ?
17. இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை.
18. இளமையில் கல்.
19. ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.
20. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

21. உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா ?

22. உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியுமா ?

23. உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்திற்கு இரு புறம் இடி.

24. ஊமை ஊரைக் கெடுக்கும்.

25. எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லாக்கு தூக்குபவர் யார் ?

26. எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ ?

27. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்.

28. எரிகிற கொள்ளியில் எது நல்ல கொள்ளி ?

29. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது ?

30. ஏழை சொல் அம்பலம் ஏறாது.

31. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

32. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.

33. ஒருகை தட்டினால் ஓசை உண்டாகுமா ?

34. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

35. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

36. கடைத் தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைக்காதே.

37. கழுதைக்குத் தெரியுமா கற்பூரத்தின் வாசனை ?

38. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

39. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.

40. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

41. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

42. குரைக்கிற நாய் கடிக்காது.

43. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

44. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

45. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்.

46. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.

## 4.9. பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பரீச்சயம் பெறுதல்

### 4.9.1 பேச்சு வழக்குச் சொற்கள் அமையும் வாக்கியங்கள் அறிதல்.

1. "அவன் இண்டைக்கு வர மாட்டான்" என்று கூறினான்
2. "தம்பி எனக்கு நெடுக அடிக்கிறான்" என்று முகுந்தன் தாயாரிடம் முறையிட்டான்
3. "என்னிடம் ஒன்றுமில்லை என்று உனக்கு தெரியாதா" எனக் கேட்டான்.

கீழ்க்காணும் பேச்சு வழக்குச் சொற்களுக்கு திருந்திய வடிவச் சொல்லைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. கடக்கரை | :.................................................. | 15. பெத்தவங் | :.................................................. |
| 2. காச்சல் | :.................................................. | 16. பாக்குறாங்க | :.................................................. |
| 3. கவுறு | :.................................................. | 17. கேக்கிறாங்க | :.................................................. |
| 4. கழட்டு | :.................................................. | 18. எடுத்துக் கோ | :.................................................. |

| | | | |
|---|---|---|---|
| 5. அறுவாள் | :.................................................. | 19. கெடைச்சது | :.................................................. |
| 6. செவப்பு | :.................................................. | 20. வுழுந்திட்டேன் | :.................................................. |
| 7. ரொம்ப | :.................................................. | 21. உட்காரு | :.................................................. |
| 8. பெரிசு | :.................................................. | 22. வெளக்கு | :.................................................. |
| 9. நயமாய் | :.................................................. | 23. காத்தாலே | :.................................................. |
| 10.அவ | :.................................................. | 24. போனவக | :.................................................. |
| 11.துவக்கம் | :.................................................. | 25. தீடிரென்று | :.................................................. |
| 12.வூடு | :.................................................. | 26. நில்லு | :.................................................. |
| 13.சொகம் | :.................................................. | 27. செய்தியா | :.................................................. |
| 14.பென்சல் | :.................................................. | 28. கனக்க | :.................................................. |

### 4.9.2 பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றி எழுதும் பயிற்சிகள்

உ+ம் : "என்னைட்டை இருந்தால் தருவேன் "! இப்ப என்ன செய்யப் போறியள்.

சரியான வடிவம் : என்னிடம் இருந்தால் தருவேன். இப்பொழுது என்ன செய்யப் போகின்றீர்கள்.

1. உங்கடை வீட்டிலை இண்டைக்கு என்ன கறிமேனே.

.........................................................................................................................................

2. பஸ்ஸில வரக்குள்ள விழுத்திச்சு.

.........................................................................................................................................

3. கொம்மாவை ஒருக்க வரச் சொல்லு.

.........................................................................................................................................

4. வாப்பா வந்தால் ஏசுவார்.

.........................................................................................................................................

5. இண்டைக்கு நான் பள்ளிகூடம் போவேல்லை.

.........................................................................................................................................

### 4.9.3 எழுத்து வழக்கில் பேச்சு வழக்கு இடம் பெறும் எழுத்தாக்கங்கள்.

கீழ்காணும் பேச்சு வழக்கை அவதானித்து தொடர்ந்து எழுதவும்.

அவர்கள் இருவரும் நண்பர்கள். பஸ்சிலே அருகருகில் இருந்தாலும் இருவரும் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. இராமன் மௌனத்தை கலைத்தான் "அரவிந்தா ஏன் பேசாமல் இருக்கிறாய்" என்று பேச்சை ஆரம்பித்தான்.

"எனக்கு தலை வலிக்குது " என்றான் அரவிந்தான். "அப்படியாயின் கடையில் பெனடோல் வாங்குவோமா?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

## 4.9.4 எழுத்து தமிழில் திருத்தமான மொழிப் பிரயோகம் முக்கியத்துவம்

கீழ்க்காணும் வாக்கியங்களின் சரியான மொழிவடிவத்தை தருக.

| | சரியான |
|---|---|
| 1. இறைவனைத் தொளுவோம் | |
| 2. மோகனும் தேப்பனும் சென்றனர் | |
| 3. கடையிலை வெத்திலைஇல்லை | |
| 4. திங்கட்கிழமை விரதம் | |
| 5. சமயல் வேளை செய்தாள் | |
| 6. வேலைக்காறி சமையள் செய்தாள் | |
| 7. அவள் வெண்காயம் உறித்தாள் | |
| 8. பறவைகள் வானத்தில் பறந்தது | |
| 9. வைக்கல் வண்டி போகுது | |
| 10. உன்ரை வீடு எங்கை இருக்கு | |

பின்வரும் சொற்கள் பேச்சு வழக்கில் உள்ளன. அவற்றை திருத்தி எழுதவேண்டும். திருத்தமான சொற்களை அவற்றின் நேரே காண்க.

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | தவக்கை | தவளை |
| 2. | தேள்வை | தேவை |
| 3. | எண்ணை | எண்ணெய் |
| 4. | அரணாக்கயிறு | |
| | அறுணாக்கயிறு | அரைஞான் கயிறு |

| | | |
|---|---|---|
| 5. | கோடாலி | கோடரி |
| 6. | சிலது | சில |
| 7. | பலது | பல |
| 8. | பொம்பிளைப்பிள்ளை<br>பொம்பிளை | பெண்பிள்ளை |
| 9. | ஆம்பிளைப்பிள்ளை<br>ஆம்பிளை | ஆண்பிள்ளை |
| 10. | விடியப்புறம் | விடியற்புறம் |
| 11. | வேணும் | வேண்டும் |
| 12. | சொற்பணம் | சொப்பனம் |
| 13. | என்றை | என்னுடையது |
| 14. | உன்றை | உன்னுடையது |
| 15. | அவன்றை | அவனுடையது |
| 16. | குடுத்தல் | கொடுத்தல் |
| 17. | உஸ்தியோகம் | உத்தியோகம் |
| 18. | தலகணி | தலையணை |
| 19. | நொங்கு | நுங்கு |
| 20. | கத்தரிக்கை | கத்தரிக்கோல் |
| 21. | துறப்பு | திறப்பு |
| 22. | பரியாரி | பரிகாரி |
| 23. | இழல் | நிழல் |
| 24. | புத்து | புற்று |
| 25. | இராப்போலாய் | இராப்பகலாய் |
| 26 | வெளிக்கிடுதல் | புறப்படுதல் |
| 27. | முளித்தல் | விழித்தல் |
| 28. | போறேன் | போகிறேன் |
| 29. | வாறேன் | வருகிறேன் |
| 30. | சிரத்தல்<br>திரத்தல் | துரத்தல் |
| 31. | தண்ணி | தண்ணீர் |
| 32. | சுடுதண்ணீர் | வெந்நீர் |
| 33. | பெடியன் | பையன் |
| 34. | பெட்டை | பெண்பிள்ளை |
| 35. | கந்தோர் | காரியாலயம்,அலுவலகம் |
| 36. | கதிரை | நாற்காலி |
| 37. | நாகரீகம் | நாகரிகம் |
| 38. | சமுகம் | சமூகம் |
| 39. | பாட்டுப் படித்தல் | பாட்டுப் பாடுதல் |
| 40. | இத்தகையான | இத்தகைய, இப்படியான |
| 41. | இப்படிக்கொத்த | இப்படிப்பட்ட, இதுபோன்ற |
| 42. | கதைத்தல் | பேசுதல் |

| | | |
|---|---|---|
| 43. | முசுப்பாத்தி | வேடிக்கை |
| 44. | மம்பெட்டி | மண்வெட்டி |
| 45. | போயிலை | புகையிலை |
| 46. | இஞ்சை | இங்கே |
| 47. | இப்ப | இப்போது |
| 48. | அப்ப | அப்போது |
| 49. | யாபாரி | வியாபாரி |
| 50. | அருவாள் | அரிவாள் |
| 51. | சிலவு | செலவு |
| 52. | முயர்ச்சி | முயற்சி |
| 53. | பயிர்ச்சி | பயிற்சி |
| 54. | உயற்ச்சி | உயர்ச்சி |
| 55. | கைமாத்து | கைமாற்று |
| 56. | ஆக்கள் | ஆட்கள் |
| 57. | ஊத்து | ஊற்று |
| 58. | கிணத்தடி | கிணற்றடி |
| 59. | சித்தப்பன் | சிற்றப்பன் |
| 60. | தேத்தண்ணி | தேநீர் |
| 61. | நாத்தம் | நாற்றம் |
| 62. | நேத்து | நேற்று |
| 63. | நெத்தி | நெற்றி |
| 64. | ஒண்டு | ஒன்று |
| 65. | ஒம்பது | ஒன்பது |
| 66. | பத்தை | பற்றை |
| 67. | பீத்தல் | பீற்றல் |
| 68. | பூர்த்தல் | பூத்தல் |
| 69. | மதவு | மதகு |
| 70. | மாத்தம் | மாற்றம் |
| 71. | வெத்திலை | வெற்றிலை |
| 72. | வைக்கல் | வைக்கோல் |
| 73. | முகூத்தம் | முகூர்த்தம் |
| 74. | ஈக்கு | ஈர்க்கு |
| 75. | காச்சல் | காய்ச்சல் |
| 76. | கோர்வை | கோவை |
| 77. | துடை | தொடை |
| 78. | தோர்வி | தோல்வி |
| 79. | வெங்கலம் | வெண்கலம் |
| 80. | விதரம் | விரதம் |
| 81. | மாதாளம்பழம் | மாதுளம்பழம் |
| 82. | ஆயிதம் | ஆயுதம் |
| 83. | எலிமிச்சம்பழம் | எலுமிச்சம்பழம் |

| | | |
|---|---|---|
| 84. | உருமை | உரிமை |
| 85. | வண்டிக்காறன் | வண்டிக்காரன் |
| 86. | கறடி | கரடி |
| 87. | ஏப்பை | அகப்பை |
| 88. | பிலாமரம் | பலாமரம் |
| 89. | கம்பிளி | கம்பளி |
| 90. | சுகயீனம் | சுகவீனம் |
| 91. | வெண்ணை | வெண்ணெய் |
| 92. | பண்டி | பன்றி |
| 93. | கருப்பணி | கருப்பநீர் |
| 94. | மிதுவடி | மிதிதடி |
| 95. | பிரையாணம் | பிரயாணம் |
| 96. | சீயாக்காய் | சிகைக்காய் |
| 97. | முளகாய் | மிளகாய் |
| 98. | கிராணம் | கிரகணம் |
| 99. | வேர்வை | வியர்வை |
| 100. | கருவேப்பிலை | கறிவேப்பிலை |
| 111. | பெரிசு | பெரிது |
| 112. | காலமை | காலை |
| 113. | சாட்டு | சாக்கு |
| 114. | திருவுதல் | துருவதல் |
| 115. | பொக்களம் | கொப்புளம் |
| 116. | கிடாய் | கடா |
| 117. | புண்ணாக்கு | பிண்ணாக்கு |
| 118. | கும்புடு | கும்பிடு |
| 119. | சவுக்காரம் | சவர்க்காரம் |
| 120. | புட்டு | பிட்டு |
| 121. | சிவர் | சுவர் |
| 122. | பொக்குள் | கொப்பூழ் |
| 123. | கைமாறு | கைம்மாறு |
| 124. | சிகப்பு | சிவப்பு |
| 125. | புடுங்கு | பிடுங்கு |
| 126. | சிதல் | சீழ் |
| 127. | பாச்சல் | பாய்ச்சல் |
| 128. | குடும்பி | குடுமி |

## 4.10. அரும்பதங்களின் பொருளை அறிந்து பிரயோகித்தல்

### 4.10 கீழ்க்காணும் அரும் பதங்களை வாக்கியத்தில் எழுதுக.

| அரும்பதம் | வாக்கியம் |
|---|---|
| கணணி | ........................................ |
| அங்காடி | ........................................ |
| அகராதி | ........................................ |
| அகவை | ........................................ |
| அரசபணி | ........................................ |
| அட்டகாசம் | ........................................ |
| அநுகூலம் | ........................................ |
| அபவாதம் | ........................................ |
| அன்றில் | ........................................ |
| தொலைபண்ணி | ........................................ |
| செய்தித்தாள் | ........................................ |
| மின்னியல் | ........................................ |
| திருமுகம் | ........................................ |
| பதிவுத் தபால் | ........................................ |
| பணிமனை | ........................................ |
| தொலைபேசி | ........................................ |
| கேட்போர் கூடம் | ........................................ |
| வெதுப்பகம் | ........................................ |
| செயலகம் | ........................................ |
| பரரூபம் | ........................................ |
| பெய்வளை | ........................................ |
| முகில் | ........................................ |
| விண்ணகம் | ........................................ |
| வெண்கலசம் | ........................................ |

BRIGHT FUTURE IN YOUR HAND

# ஆண்டு 5 இற்கான BRIGHT வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கணிதம் | - | செயல்முறைப் பயிற்சி நூல் |
| மொழி விருத்தி | - | தாய்மொழி தமிழ் |
| நாமும் சுற்றாடலும் | - | பாடநூல் |
| ஆக்கத்திறன் | - | செயல்முறைப் பயிற்சி நூல் |
| புதிய பாஷை | - | பயிற்சியும் விளக்கமும் |
| நாமும் சுற்றாடலும் | - | செயல்நூல் |
| அழகியற்கல்வி | - | ஆக்கச்செயற்பாடுகளும் |
| | | உடல்நலக்கல்வியும் |

எமது BRIGHT வெளியீடுகளை சகல
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தபாலில் பெற விரும்புவோர் ரூ. 20/- முத்திரை அனுப்பி
V.P.P. யிலும் பெற்றுக்கொள்ளலாம்.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, First Floor , P. O. Box No. 162,
Colombo Central Supermarket Complex,
Colombo - 11.
Tel: 434770

இந்நூல் Bright Book Centre (Pvt) Ltd இன் இயக்குனர் பொன்.சக்திவேல் அவர்களால்
கொழும்பு -12 ஸ்ரீ சக்தி பிரிண்டிங் இண்டஸ்ரீஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.